வைதிக தர்ம வர்த்தனீ



மலர் 25 விரோதிகிருது ஹு மார்கழி மீ
இதழ் 3 10—12—71.

அபூர்வ நூல்கள்.

சங்கராந்தி, கோ பூஜை : 0—40 பை. நம் நாட்டில் சங்கராந்தியில் போகி, சங்கராந்தி, கோ பூஜை என விசேஷமாகக் கொண்டாடப்படுவதின் கதையும், பூஜையும் உள்ளது.

வைகுண்ட ஏகாதசி—25 ஏகாதசிகளும்; விலை 0—50 பை. ஒவ்வொரு இந்தியரும், மும்மதஸ்தர்களும் அனுஷ்டிக்க வேண்டியது ஏகாதசி விரதம். ஓர் ஆண்டில் வரும் 25 ஏகாதசிகளும், ஏகாதசிகளின் பெயரும் அதை அனுஷ்டித்து பயன் பெற்றவர்களின் சரிதமும், பாத்ம புராணத்தில் உள்ளபடி இதில் காணலாம். விரதம் எப்படி அனுஷ்டிப்பது, சக்தி இல்லாதவற்கு ஏதேனும் வழி உண்டா; கைசிக ஏகாதசி, ருக்மாங்கதன் சரிதம், பீஷ்ம ஏகாதசி, அம்பரிஷன் சரிதம் முதலியன இதில் இருக்கின்றன. இதை அனுஷ்டிக்காதவர் படும் பாடும், அனுஷ்டிப்போர் பெரும் நன்மையும், இதில் கட்டாயம் எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டும் என்ற முறையும் காணலாம்.

(எல்லாவற்றிற்கும் தபால் சார்ஜ் தனி)

கிடைக்குமிடம்:—

ஆசிரியர், ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா,
மாம்பலம் குருகுலம், 2 ஸ்டேஷன் ரோடு,
மேல மாம்பலம், சென்னை—33.

திருநெல்வேலிச் சீமை.

" சித்ரகலாநிதி " N. கிருஷ்ணன்.

இந்த ஜில்லாவின் தலைநகரான திருநெல்வேலி என்ற ஊர் ஆதியில் மூங்கில் அடர்ந்த காடாக இருந்ததாகவும் அதற்கு வேணுவனம், மூங்கிற்காடு என்ற பெயர்கள் விளங்கியதாகவும், பிற்காலத்தில்தான் இதற்கு நெல்வேலி என்ற பெயர் ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இந்த மூங்கிற் காட்டில் சிவலிங்கம் ஒன்று உற்பத்தியாக, அதன் விசேஷ காரணமாக ஜன சமூகம் அங்கு குடியேறியது. அவர்களுள் வேதசன்மா என்ற ஒரு சிவபக்தர் இருந்தார். ஒரு நாள் அவர் தன் வீட்டு வாயிலின் முன்பாக நெல்லையவித்து உலரப்போட்டு விட்டு ஸ்நானத்தின் பொருட்டு நதிக்குச் சென்றதாகவும் அங்கு ஸ்நானம் பாதி முடிந்ததும் முடியாதுமாக இருக்கையில் மேகங்கள் ஆகாயத்தில் திரளாகக் கூடிப் பெருமழையை சொரிந்தது. சிவசன்மாவுக்கு நெல் உலர வைத்தஞாபகம் வந்து விட்டது. மழையினால் நெல்பூராவும் அரித்துக் கொண்டு போயிருக்கக் கூடுமோ என்ற கவலை மேலிட சிவபிரானை தியானித்து ஒரே ஓட்டமாக ஓடி வந்து நெல்லை பார்க்கவும் நெல்லில் ஒரு துளியேனும் படாமல் பரவலாகக் கிடந்த நெல்லைச் சுற்றி தண்ணீர் ஓட்டம் இருக்கவும் மழை நீரில் நெல் அரித்துச் செல்லாதபடி மழை நீர் ஓடக்கண்ட அவர் பேரானந்தத்தில் மூழ்கியவராகி சிவபிரானை வாயார ஸ்தோத்ரங்களால் வாழ்த்தி கடவுளே அவரின் வறுமைக்கு இறங்கி நெல்லைச் சுற்றி வேலியாக நின்று காப்பாற்றினரென்று பலவாராகத் துதித்து ஆனந்தக் கண்ணீர் விட்டாரென்றும் அதன்

காரணமாகவே அன்று தொட்டு அதற்கு திருநெல்வேலி என்ற பெயருண்டாகியதாம்.

இது பூர்வீகம் பாண்டிய நாட்டினுள் அடங்கியது என்றும் இந்த திருநெல்வேலியைச் சார்ந்த பகுதி தென் பாண்டி என்ற பெயருள் அடங்கி இருந்ததாகவும் தெரிய வருகிறது. இந்தத் திருநெல்வேலியைச் சார்ந்த பிரதேசங்கள் கி.பி. 1744க்கு முன் திருநெல்வேலிச் சீமை என்றழைக்கப்பட்டதாகவும், பிற்பட்ட காலத்தில் தான் நம் நாட்டிலேயே, அதாவது 1744 க்குப் பிறகு தான் ஜில்லா என்ற சொல் ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இந்த மாவட்டத்தின் முக்கியநதி தாம்ரபரணி நதியாகும். தற்காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்கோடி பாகமான அகஸ்த்யர் மலையில் ஐந்து சிகரங்களடங்கிய ஐந்து தலைப்பொதிகை யென்ற சிகரங்களிருக்கின்றன. இம்மலைத் தொடர்களில் இந்த ஐந்து சிகரங்களுமே மிக உன்னதமாகக் கருதப்படுகிறது. இவைகளிலிருந்துதான் தாம்ரபரணி உற்பத்தியாகின்றது. இந்த பொதிக மலை என்றதின் மறு பெயரான அகஸ்தியர் மலையில் அகஸ்தியர் வசித்ததாலும, ரிக்வேதத்தில் கூறப்பட்டுள்ள ரிஷி அகஸ்த்தியர் ஒருவரேயாதலில் இந்த மலையின் பெருமையும் நதியின் பெருமையும் நன்கு விளங்குகிறது. மேலும் இந்த திருநெல்வேலிச் சீமையில் பல புண்ய க்ஷேத்ரங்கள் உள்ளன. இந்த மாவட்டத்தில் பெரிய பெரிய மஹான்கள் அவதரித்து உலக க்ஷேமத்திற்கு அரும்பாடு பட்டிருக்கிறார்கள். இம்மாவட்டத்தில் உள்ள பல புண்ய க்ஷேத்ரங்களின் வரலாறும், மஹான்களின் சரித்திரங்களும் இனி தொடர்ந்து வரும்.

பழைய பாபநாசம்-
அகத்தியர் கோயில்.

" சித்ர கலாநிதி " – N. கிருஷ்ணன்.

நம் பாரத பூமியில் வடக்கே இமயமலையிலிருந்து கங்கைநதி தோன்றிப் பாய்ந்து பூமியைத் தொடுமிடத்தில் கங்காத்வாரம் என்னும் ஹரித்வார் என்ற புண்ணிய ஸ்தலமிருப்பதுபோல் தெற்கே புனிதமான பொதிய மலையில் தாமிரபரணி என்னும் பொருநையாறு உற்பத்தியாகிச் சமவெளியில் இறங்குமிடத்திலுள்ளது புனிதமான பழைய பாபநாசம் என்னும் தலமாகும்.

இந்தத் தாமிரபரணிநதி பாயும் சமவெளிகளில் எப்பகுதியிலிருந்து பார்த்தாலும் மாண்புமிக்க இம்மலைத் தொடரின் அழகிய காட்சி கண்களுக்கும் கருத்துக்கும் இனிய விருந்தளிக்கிறது. பொதிகைமலை என்பது பொதியமலை, பொதியில் எனவும் பெயர் பெறும். இந்த மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அகத்தியமலை என்பது குறிப்பிடத்தக்கது. " இது ஏகபொதிகை " எனவும் அழைக்கப்படும். இது ஏறத்தாழ 6125 அடி உயரமுள்ளது. அகத்தியர், தமிழ் மருத்துவ நூலையும், தமிழிலக்கண நூலையும் எழுதிய பின்பு இம்மலையைத் தம் வாழிடமாகக்கொண்டார், என்றும் மக்கள் நலனைக்கருதி பொருநைநதியை இம்மலையிலிருந்து இறங்கிப்பாயும்படி படைத்தார் என்றும் கூறப்படுகிறது. இம்மலைப் பகுதிகளில் ஏறத்தாழ இரண்டாயிரத்து எழுநூற்றுக்கு மேற்பட்ட மூலிகைச் செடிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த பொதிய மலையில் தோன்றி காடுகளிடையே பதினைந்து மைல் பிரயாணம் செய்யும் பொருநை நதியானது முந்நூறு அடி உயரத்திலிருந்து கீழே உள்ள பாறைகளின் மீது அருவியாகச் சில ஆண்டுகட்குமுன் வரை விழுந்து வந்தது.

விழுந்த இடத்திற்கு இரு பக்கங்களிலும், மலைப்பாறைகளும், அவற்றின் மீது அடர்ந்த காடுகளும் இயற்கையின் எழில் கொண்டு விளங்குகின்றது. இவ்விதம் பேரழகுடனும் பேரொலியுடனும் கீழே விழுந்த அருவி நீரில் நீராடுவோருக்குப் பாபம் விநாசம் ஆகும். அதனாலேயே இந்த அருவி விழுந்த இடத்திற்கு பாபவிநாசம் எனப் பெயர் ஏற்பட்டது. அது கால வெள்ளத்தில் ''பாபநாசம்'' எனமருவி வழங்கப்படுகிறது. இதையே ''பழைய பாபநாசம்'' என வழங்குவர். இங்கிருந்து ஒரு கல் தொலைவில் பாபவிநாச ஈசுவரர் கோயில் உள்ளது. இதைப் பாபநாசம் என அழைப்பர்.

பழைய பாபநாசம் என்பது அகத்தியர் கோயிலுள்ள இடமாகும். இங்கு அகத்திய முனிவர் வந்து தங்கி மூலிகைகளின் குணங்களை ஆராய்ந்து பல மருந்து நூல்களை எழுதினர் என வழங்கப்படுகிறது. அகத்திய முனிவர் இத்தலத்திற்கு வந்தகாரணத்தைப் பலர் பலவிதமாக கூறுகின்றனர். அகத்தியரது பெருமையை நம் தமிழ் நாட்டில் அறியாதார் இருக்க முடியாது.

இப்பழைய பாபநாசம் என்னும் தலத்தில் அகத்திய முனிவர் கோயில் கொண்டிருக்கிறார். கோயிலும், கோயிலிருக்கும் இடமும் மிக்க அழகு வாய்ந்ததாகும். இந்த அகத்திய முனிவரை, உலகெல்லாம் தொழுதேத்தும் குடமுனி, என்றும் அழைப்பர். இவர் தொல்காப்பியர் முதலிய பன்னிரு புலவர்களுக்குப் பேராசிரியராய்த் திகழ்ந்தவர். இவர் 12,000 சூத்திரங்கள் கொண்ட பேரகத்தியம் என்னும் தமிழ் இலக்கண நூலை அருளிச் செய்தவர். விந்திய மலையை அடக்கியவர். குடங்கையில் நெடுங்கடலை அடக்கிக்கொண்டவர். வாதாபி வில்வலரை அழித்தவர். கமண்டலத்திலிருந்து காவிரியை பெருக்கெடுக்கச் செய்தவர், மிஞ்சிய தண்ணீரை தாமிரபரணியாகப் பொதியிலின்கணின்று பெருகும்படி செயற்கரியச் செய்தவர். அகத்தியர் தென்னாடு வந்ததற்கு காரணம் சிவபிரானுக்கும் உமையம்மைக்கும் திருகயிலாயத்தில்

திருமணம் நடந்த சமயத்தில் அதைக் கண்டுகளிக்க உலகத்தார் அனைவரும் திருகயிலையில் கூடினர். எனவே தென்னாடு உயர்ந்து வடநாடு தாழ்ந்தது. உயர்ந்த தென் பகுதியை சமப்படுத்த சிவபெருமான் அகத்தியரைத் தென்னாட்டிற்கு அனுப்பினார். அதேசமயத்தில் இறைவனின் திருமணக்கோலத்தைக் கண்டுகளிக்க முடியவில்லையே என்று ஏங்கிய அகத்தியருக்கு சிவபெருமான் அவர் சென்று தங்குமிடத்தில் தமது திருமணக் கோலம் காட்டியருளுவதாக வாக்களித்ததாகவும் பிறகு அகத்தியர் தென்னாடு நோக்கி விரைந்து பொதியமலையில் தங்கி விட்டார் எனவும் கூறப்படுகிறது. சிவபெருமானின் இந்த வாக்கினை மெய்ப்பிப்பது போலவே ஆண்டு தோறும் அருவியின் அருகிலுள்ள அகத்தியர் கோயிலிலிருந்து அகத்தியரது உருவச்சிலை அருவிக்கு ஒருகல் தொலைவிலிருக்கும் பாபவிநாச ஈசுவரர் கோயிலுக்கு, ஈசுவரனின் திருக்கல்யாண நாளில் எடுத்துச் செல்லப் பட்டு வருகிறது. இது தலவரலாறு கூறும் செய்தி.

மற்றும் பல அறிஞர்கள் கூறுவதாவது: ரிஷிகளும், மஹான்களும் வடக்கே கைலைக்குச்சென்றவர்கள், அங்கு இருக்கும் இயற்கை காட்சிகளையும் ஏகாந்த நிலையையும் கண்டு இமயமலைப் பிராந்தியத்திலேயே தவநிலையில் இருக்கத் தீர்மானித்து விட்டார்கள் என்றும், எனவே வேதநெறி தென்னாட்டில் குன்றிவிட்டபடியாலும், ஸகல சாஸ்திரங்களையும், வேதங்களையும் கற்றுணர்ந்த அகத்தியரை இறைவன் தேர்ந்தெடுத்து தென்னாடுசென்று ஸகல சாஸ்திரங்களையும் வேதநெறியையும் தென்னாட்டில் தங்கி பரப்பும்படிக் கட்டளையிட்டதாகவும், அதன் பொருட்டே தென்னாடு வந்த அகத்தியர், காவிரியையும், தாமிரபரணியையும் தமது கமண்டலத்திலிருந்து உற்பத்தி செய்து, ஸகல கலைகளும், வேதமும், சாஸ்திரங்களும் பிரகாசிக்கச் செய்தார் என்றும் கூறுகின்றார்கள்.

அகத்தியர் தென்னாட்டில் தங்கிய இடம் இயற்கையின் பேரெழில்கொண்டு திகழ்கிறது. இங்குள்ள அருவி

ஆண்டு முழுவதும் இடையருப் பெருக்குடன் உள்ளது. இந்நீர் பெருக்கு அகத்தியர் கோயில் பக்கம் வெகு அழகான ஓர் ஆறாக ஓடுகிறது. இங்கு கோயிலில் அகத்தியர் யோக நிலையிலமர்ந்துள்ளார். இங்கு அகத்தியர் தங்கியிருந்து பூஜை செய்ததாகவே பல தோற்றங்களும் உள்ளன. இங்கு அகத்தியர் கோயிலுக்கு அருகில் ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமியின் கோயில் உள்ளது. இது அகத்தியர் பூஜை செய்யும் ஐதீகப்படி அமைந்துள்ளது. நீர்வீழ்ச்சியிலிருந்து பெருக்கெடுத்து ஓடும் ஆறு இந்த சுப்பிரமணியசுவாமி கோயிலின் முன் பக்கமாக ஓடுகிறது. இந்த நீர்வீழ்ச்சியின் முன் மூன்று ஓம குண்டங்கள் உள்ளன. இது இறைவனது திருமணக் கோலத்தை நினைவு படுத்தவே ஏற்பட்டவை எனலாம். இந்த நீர் வீழ்ச்சிக்குமேல் கல்யாண தீர்த்தம், பைரவ தீர்த்தம் என்னும் தீர்த்தங்கள் உள்ளன. இவ்விரு தீர்த்தங்களும் சநதனச் சாரலில் வருவதாலும், தாமிரச் சத்து கலந்துள்ளதாலும், பல மூலிகைகள் பொருந்தி வருவதாலும் எல்லா நோய்களையும் தீர்க்கும் வல்லமை உள்ளதாகும். பெருநைஆறு இங்குள்ள மூலிகைகளில் அடிபட்டு வருவதால் ஸகல நோய்களையும போக்கும் வல்லமையுள்ளது. இங்குள்ள ஒவ்வொரு பச்சிலைகளையும் எடுத்து கதம்பமாகசேர்த்து கரி சமைத்து சாப்பிட்டால் பல நோய்கள் நீங்கும் என்று கூறப்படுகிறது.

இங்குள்ள அகத்தியர் கோயிலுக்கு முன் ஒரு மண்டபம் உள்ளது. இந்த மண்டபம் கட்டுவதற்கும் அதில் நீதி நெறி விளக்கப் பாடல்கள் கல்லெழுத்தில் அமைப்பதற்கும் சென்னை அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்வாமிகளும், ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பாண்டிய நாட்டில் சிறப்பு வாய்ந்த இவ்வளவு அழகிய இடத்தையும், இயற்கைக் காட்சிகளையும், உலகத்திற்காக பாடுபட்டு தமிழ் மூலிகைகளையும், தமிழிலக்கணத்தையும் வகுத்தருளிய இந்த அகத்திய முனிவரின் ஆலயத்தையும் மக்கள் வாழ் நாளில் ஒரு முறையாவது சென்று தரிசித்து அகத்தூய்மையும், அறிவு விளக்கமும் பெற்று பேரின்பத்தை அடைய வேண்டும்.

பாபநாசத்துப் பழமறை நாதர்.

" சித்ர கலாநிதி " N. கிருஷ்ணன்.

பொதிய மலையில் உற்பத்தியாகிய தாமிரபரணி நதி கரடு முரடான பிரதேசங்கள் வழியாக சுமார் பதினைந்து மைல்கள் பாய்ந்து சமவெளியை அடைகின்றது. பேரழுகுடனும் பேரிரைச்சலுடனும் முன்னூறு அடி உயரத்திலிருந்து கீழே விழும் இந்த நீர் வீழ்ச்சியின் காட்சி ஒரு கண் கொள்ளா விருந்தாகும். இந்த அருவி விழும் இடமே கலியாண தீர்த்தம் எனப்படும். இதற்கு சற்றுக் கீழேதான் அகத்தியர் கோவில் உள்ளது. இங்கிருந்து சற்று தூரம் சென்றதும் ஆறு, மலையிலிருந்து நிலத்தில் இறங்குகிறது. இருபுறமும் மலைகளும் அவைகளைச் சூழ்ந்து அடர்ந்த காடும் நடுவில் நீர் வீழ்ச்சியும் சேர்ந்து இந்த இடத்தை மிகவும் மனோரம்யமாகக் காட்டுகிறது. நீர் வீழ்ச்சி கீழே விழுந்து இரண்டு கிளைகளாகப் பிரிந்து ஓடுகிறது. அவற்றில் இடது புறமாகச் செல்லும் கிளையில் நீர் வீழ்ச்சியிலிருந்து சுமார் ஒருகல் தூரத்தில் பாபநாசம் என்னும் சிவத்தலம் அமைந்துள்ளது.

இந்த பாபநாசம் என்னும் தலத்திற்குச் செல்ல திருநெல்வேலி-தென்காசி மார்க்கத்தில் அம்பாசமுத்திரம் ரயில் நிலையத்தில் இறங்க வேண்டும். அங்கிருந்து மேற்கே சுமார் ஐந்து மைலில் பாபநாசம் உள்ளது. இறைவன் பாப விநாச ஈஸ்வரர். அம்பிகை உலகம்மை.

இத்தலம் வந்து வழிபடும் அடியார்களின் பாபத்தை நாசம் செய்யும் காரணத்தால் பாப நாசம் என்னும் பெயர் பெற்றது. இத்தலத்திறைவனுக்கு முக்களா லிங்கர் எனவும் பெயருண்டு. மூன்று களா மரங்களடியில் இறைவன் முளைத்தெழுந்தபடியால் முக்களா லிங்கர் எனப்பெயர் பெறுகிறார். ரிக், யஜுர், ஸாமம்

என்னும் மூன்று மறைகளும் மூன்று களாமரங்களாகி இறைவனை வழிபட்டன வென்பது புராண வரலாறு.

இத்தலத்தில்தான் அகத்தியருக்கு இறைவன் தனது திருமணக்கோலத்தைக் காட்டி அருளினார் என்று கூறப்படுகிறது. இதேபோல் தென்னாட்டிலுள்ள அனேகத் தலங்களில் அகத்தியருக்கு திருமணக்கோலம் காட்டியதாக வரலாறுகள் கூறப்படுகின்றன. எனினும் இத்தலத்தில்தான் அகத்தியருக்கு இறைவன் தனது திருமணக் கோலத்தைக் காட்டியருளியிருக்க வேண்டும் என்று கூற சான்றாக இங்குள்ள பொதியமலையில் தான் அகத்தியர் தங்கியிருந்திருக்கிறார். அவருக்குத் தனித்த திருக் கோயிலும் இங்குதான் உள்ளது.

இவ்வளவு மகிமை வாய்ந்த இந்த பாபவிநாச ஈசுவரருடைய திருக்கோயில் மிகச் சிறியதும் அல்ல, மிகப் பெரியதும் அல்ல. கோயிலின் முன் வாயிலில் ஐந்து அடி கோபுரம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. கோயில் வாயிலை ஒட்டியே பொருனை நதி ஓடுகிறது. அங்கு ஒரு சிறுமண்டபம் அமைந்துள்ளது. அம்மண்டபத்தில் நின்று கொண்டு ஆற்றில் நூற்றுக்கணக்கான மீன்கள் துள்ளி விளையாடும் காட்சியைக்காணலாம். இக் காட்சியில் லயித்த கோவிலுக்கு வரும் பக்தர்கள் மீன்களுக்குப் பொரியும், கடலையும் போட்டு அதன் விளையாட்டை ரஸிப்பார்கள்.

கோயிலின் கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் வெளிப் பிராகாரத்தை அடையலாம். உள்ளே நந்தி மண்டபம், மகா மண்டபங்கள் உள்ளன. கோயிலின் மேல்புறத்தில் ஒரு களாமரம். மூன்று சுவடுகளோடு நிற்பதைக்காணலாம். இந்தக் களாமரத்தில்தான் இறைவன் லிங்கத் திருவுருவத்தோடு விளங்குகிறார். இம் மூர்த்தி அகஸ்தியர் முதலிய முனிவர்களால் பூஜிக்கப் பட்டவர். மூன்று மறைகளை மூன்று களா விருட்சங் களாகப் பூஜித்தமையால் பெருமான் பழமறை நாதர்

என்று அழைக்கப்படுகிறார். இந்தப் பாபநாச ஈசுவரரைத் தரிசித்துவிட்டு அப்படியே உட்பிராகாரத்தைச் சுற்றி வரலாம். பிராகாரத்தில் ஒரு சிறு மண்டபத்தில் உயர்ந்த பீடத்தில் இறைவன் உலகம்மையுடன் ரிஷபாரூடராய் திருமணக்கோலத்தில் அகஸ்தியருக்குக் காட்சியளிக்கும் நிலையில் இருக்கிறார். பீடத்திற்குக் கீழே அகஸ்தியர் தன் மனைவியுடன் கைகூப்பிக்கொண்டு நிற்கிறார். குண்டோதரன் குடைபிடித்து நிற்கிறான். பக்கத்திலேயே செப்புச்சிலை வடிவில் அகஸ்தியரும் லோபாமுத்திரையும் நிற்கிறார்கள். இங்கேயே ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்ரீதேவி, பூதேவி சமேதம் வீற்றிருக்கிறார். இவர்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு சுற்றிவந்தால் இறைவன் சந்நிதிக்கு இடப்பக்கத்தில் உலகம்மையின் சந்நிதி உள்ளது. இந்த உலகம்மையின் திருவுருவம் கண்கவரும் அழகு வாய்ந்தது. அம்பிகை மிக்க வரப்ரசாதி; இந்த அம்பிகையை விக்ரமசிங்கபுரத்து வாசியான நமச்சிவக் கவிராயர் பல பாடல்களால் பாடிப் பரவசப்பட்டிருக்கிறார்.

இக்கோயிலில் சித்திரை விஷுதான் சிறப்பான நாள். அன்றுதான் அகஸ்தியருக்கு இறைவன் தனது திருமணக் கோலத்தைக் காட்டியருளியிருக்கிறார்.

இக்கோயில் விக்கிரமசிங்க பாண்டியன் மகனை கருணாகரப் பாண்டியன் காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. அவனது புத்திரனை ராஜராஜ பாண்டியனால் விரிவாக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 13-ம் நூற்றாண்டில் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று தெரியவருகிறது. இதற்குரிய கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. மேலும் இக்கோயிலிலுள்ள வசந்த மண்டபத்தின் மேல்தளத்தில் ஒற்றைமீன் இரட்டைமீன் அடையாளங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இத் தலத்தில் சிவபெருமானை பொருநை நங்கை வணங்கிப் பிரார்த்தித்துக்கொண்டாள்— 'ஸ்வாமி, தாங்கள் அளித்த உயிர்கள் அனைத்தும் பாபத்தால் நரகில் சேரலாமா? அவைகள் நரகம் சேராதிருக்கவே தங்களை

பூசித்து வருகிறேன் என்றுரைத்தாள். இவ்விதம் இரங்கிக் கேட்ட தாமிரபரணியை நோக்கிச் சிவபெருமான் "படித்துறையில் இறங்கி நீராடுபவர் அனைவருக்கும் பாவம் நீங்கிப் புண்யம் நல்கும் என அருளினர். சிவபெருமான் அளித்த இவ்வரத்தின் பயனுய் உயிர்களின் பாவங்களையெல்லாம் போக்கி வருகிருள். தாமிரபரணி, அதனுலேயே பாபநாசம் என்ற பெயரோடு விளங்கி வருகிருள். இதையொட்டிப் புராணவரலாறு ஒன்று உள்ளது ஆதிகாலத்தில் இப்பகுதியை ஆண்டுவந்த பாண்டிய மன்னன் பௌத்த மதத்தைத் தழுவி வைதிக மதத்தவர்களைக் கொடுமைப் படுத்தி வந்தான். அதுசமயத்தில் இப்பிரதேசத்தில் குடியிருந்தப் பலர் நாட்டைவிட்டு வேறு தேசங்கள் சென்றனர். அவ்வாறு சென்றவர்களில் ஒரு அண்ணனும், தங்கையும் இருந்தனர். அவர்கள் சோழநாட்டை அடைந்தபொழுது யுத்தக்குழப்பமாக இருந்தபடியால் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிய நேர்ந்தது. பல ஆண்டுகள் சென்றபின்பு அவர்கள் இருவரும் காசியில் ஒருவரையொருவர் இன்னுரென்று அறியாமல் சந்தித்தனர். இவர்கள் சந்திப்புக் காதலாகமாறி இருவரும் திருமணம் செய்துகொண்டனர். சில நாட்களில் உண்மையை உணர்ந்தனர். அவர்கள் பல சாதுக்களை அண்டி இந்தப் பாவத்தைத் தொலைக்க வழி கோலினர். அவர்களும் இவர்களிருவரையும் கருப்பு ஆடை உடுத்து தலங்கள் தோறும் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் நீராடவேண்டுமென்று கூறினர். மேலும் எந்த தீர்த்தத்தில் நீராடுகையில் அவர்களது ஆடை வெண்ணிறமாக மாறுகின்றதோ அப்பொழுது அவர்களது பாபம் விலகிற்று என்று கொள்ளவேண்டுமென்று கூறினர். அதன்படி அவர்கள் பல தீர்த்தங்களில் நீராடிக் கடைசியில் பாபநாச தீர்த்தத்தில் நீராடினர். அப்பொழுது அவர்களது கருப்புநிற ஆடை வெண்ணிறமாக மாறியது. இறைவன் அவர்களுக்குக் காட்சியளித்து அவர்களது பாவத்தைப் போக்கியதாகக் கூறப்படுகிறது.

இவ்வளவு பெருமைவாய்ந்த இத் தலத்திற்கு வந்து புனித நீராடி ஜபம், தபம், பூஜை முதலியன செய்வோர்கள் தங்கள் பாபம் நீங்கப்பெற்று அனந்தகோடி புண்யம் பெற்று பாபநாச இறைவனின் சரண கமலங்களில் நீடூழி வாழ்வர் என்பது திண்ணம்.

அம்பாசமுத்திரம் கோயில்கள்.

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

அம்பாசமுத்திரம் என்னும் ஊர், பாபநாசத்திற்கு கிழக்கே ஆறு கல் தொலைவில் அமைந்துள்ள ஊராகும். பொருநை ஆற்றிற்கு வடகரையில் அமைந்துள்ளது. இந்த ஊர், செங்கோட்டை—திருநெல்வேலி இரயில் பாதையில் அமைந்துள்ள ஊராகும். இது மிகப் பழமையான ஊர். அம்பாசமுத்திரம் என்னும் பெயருக்குக் காரணம் கூற புராணக்கதைகள் பல கூறப்படுகின்றன. ஊரின் பழமையான பெயர் "இளங்கோகுடி" எனக் கூறப்படுகிறது. சிற்றரசன் ஒருவர் இவ்வூரை தன் மகளுக்குஅன்பளித்து முத்திரையிட்டு அளித்தக்காரணத்தால் "அம்பா முத்திரை" என்றும் பிறகு அது அம்பா சமுத்திரமாக மருவியது எனக் கூறப்படுகிறது.

சமுத்திரம் என்பது பெருங்கடல் போல் மிகுந்த நீரையுடைய பெருங்குளத்தை இது உணர்த்தும். குளமும் குளத்தை ஒட்டி ஊரும் சமுத்திரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும், எனக் கூறப்படுகிறது. அம்பா, அம்மா, அம்மை என்ற சொற்கள், தாய், காளி, உமாதேவி என்ற பொருளை உடையன. இவ்வூரில் முதன்மையாகக் கோயில் கொண்டுள்ளவர், ஸ்ரீ மரகத வல்லி அம்பிகையே. இந்த அம்பிகையின் பெயரால் அம்பாசமுத்திரம் என்று ஏற்பட்டிருக்க வேண்டும்.

அம்பா சமுத்திரம் என்ற பெயர் இவ்வூரில் கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. இதிலிருந்து இது பழமையான பெயரல்ல; அண்மையில் தான் ஏற்பட்டிருக்கவேண்டும் எனத் தெரியவருகிறது. இவ்வூர் கல்வெட்டுக்களில் இளங்கோகுடி எனக் கூறப்படுகிறது. சில காலம் வேளாக்குறிச்சி எனவும் இருந்ததாகத் தெரிய வருகிறது.

இவ்வூரில் பலகோயில்கள் உள்ளன. சங்கரலிங்கர்-கோமதியம்மை திருக்கோயில், காசிபநாதர் கோயில், திருமூலநாதர் கோயில், வீரமார்த்தாண்டர் கோயில், அம்மையப்பர் கோயில், கிருஷ்ணஸ்வாமிகோயில் முதலியன உள்ளன.

1 காசிபநாதர்கோயில்: — இது ஊருக்கு தெற்கே பொருநை ஆற்றின் கரையில் உள்ளது. கங்கையாற்றின் தண்ணீர்பொருநையாற்றில் கலந்து வருவதாகப்புராணம் கூறுகிறது. அதன்படி கங்கைக்கரையிலுள்ள காசியை நினைத்து இக்கோயிலை காசிநாதர் கோயில் என்றும் பெருமான் காசிநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். ஆற்றில் இத்துறை காசி தீர்த்தம் என்றும் ஆயிற்று. பின்னர் காலப் போக்கில் இவை, காசிபதீர்த்தம், காசிபநாதர் என்றும் வழங்கலாயிற்று. கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

இத் தலத்திறைவனை காசிப முனிவர் வழிப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதனாலேயே இறைவனுக்கு காசிபநாதர் எனப் பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது. அம்பிகைக்கு மரகதவல்லி என்று பெயர். அம்பாள் தெற்கு நோக்கியிருக்கிறாள். மிக்க வரப்பிரஸாதி.

காசிப முனிவர் இத்தலம் வந்து வெண்மணலைப் பிடித்து லிங்கத் திருவுருவமைத்து, காசிப தீர்த்தம் ஒன்றை ஏற்படுத்தி, மூழ்கி, நறுங்கனி, செந்தேன், எண்ணெய், கந்தநெய், தயிர், பால் முதலியவற்றைக் கொண்டு வேத விதிப்படி பூசை செய்துகொண்டு இத்தலத்திலேயே வசித்து பெறுதற்கரிய பெரும் பேறுகள் பெற்றார் எனவும் அதனாலேயே இத்தலத்திற்கு காசிபேசுரம் எனவும், அங்குள்ள தீர்த்தத்திற்கு காசிப தீர்த்தம் எனவும், மூர்த்திக்கு காசிபேசுரமூர்த்தி எனவும் பெயர்கள் ஏற்பட்டன. என்றும் திருநெல்வேலி தல புராணம் கூறுகிறது. இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் முள்ளிநாடு, இராசராச சதுர்வேதி மங்கலம்,

இளங்கோக்குடி, திருப்போத்துடைய நாயனூர் — திருப்போத்துடைய தேவர், திருப்போத்துடைய ஆழ்வார், திருபோத்துடைய மாதேவர், திருப்போத்துடைய பட்டாரகர், என்று பெருமானூர் குறிக்கப்பெறுகிறூர். போத்து என்பது காளையைக் குறிக்கும். காளையை வாகனமாக உடைய பெருமான் என்பது திருப்போத்துடைய நாயனூர் என்பதின் பொருளாகும். நாயனூர், பட்டாரகர், ஆழ்வார் முதலியவை கடவுள் என்னும் பொருளைக் குறிக்கும்.

இக்கோயில் திருப்போத்தீச்சுரம் எனவும் கூறப்படும். இதுவே எரித்தாளுடையார்கோயில் எனவும் கூறப்படுகிறது. சிலர் இதை எருத்தாளுடையார் கோயில் என்றும் கூறுவர். எருத்து–போத்து–காளை = எருது எனப் பொருள்படும். பெருமான் எருத்தாளுடையார் எனப் பெறுவர். இது பிற்காலத்தில் மருவி, எரித்தாளுடையார் கோயில் என்றும், எரிச்சாளுடையார் கோயில் என்றும் வழங்கி வருவதாகக் கூறுவர் சிலர்.

மற்றெருருவருடைய பொருளை வைத்துக்கொண்டு இல்லையென்று பொய்புகன்ற பூசாரியை புளியமரத்துடன் இறைவன் எரித்த காரணத்தால் எரிச்சாளுடையார் எனப்பெயர் வந்ததாகவும் கூறுவர் சிலர். இந்த வரலாறு அம்பைத் தலபுராணத்திலும், திருநெல்வேலித் தல புராணத்திலும் இடம் பெற்றுள்ளது.

வரலாறு இதுதான்— சிவமறையோரின் மிக்க சிவசர்மா என்னும் பிராமணோத்தமர் பல க்ஷேத்திரங்களை தரிசித்துக்கொண்டு, தாம்பிரபரணியில் நீராடி அகத்தியரை தரிசிக்க விரும்பி இக்காசிபேசுவரமடைந்தான். காசிப தீர்த்தத்தில் நீராடி, இறைவனைப் பணிந்துவிட்டு திரும்பும்போது சாந்தவேதன் என்னும் ஒரு அந்தணரைக் கண்டு ஒருவரோடு ஒருவர் அளவளாவி, நட்பாடி, சாந்தவேதனின் மனையில் உண்டு, பிறகு தான் கொண்டு வந்திருந்த பொன்னையும், பொருளையும் சாந்தவேதனிடம் கொடுத்து, தாம் அகத்தியரை தரிசிக்க விரும்புவதாகவும்,

திரும்பிவரும் வரை இத் திரவியத்தைக் காப்பாற்றி வைத்திருந்து திரும்பி வந்ததும், கொடுக்கும்படி சொல்லி விடைபெற்றுச் சென்றான். பல சிவத்தலங்களையெல்லாம் தரிசித்துக் கொண்டும் முனிபுங்கவர்கள் தவம் செய்யும்பல மலைகளையும் கண்டு, எங்கும் அகத்திய முனிவரைக் காணாது, மனம் நொந்தான். கும்பமுனிவரைக்காணாது,இனி சிறிதும் உயிர்தாங்கமாட்டேன் என சங்கல்பித்துக்கொண்டு, விருத்தாப்பியத்தினாலும் உணவில்லாமையாலும், சோர்ந்தும், நடந்தும், காலெல்லாம் தேய்ந்த பின்னர் புரண்டுகொண்டும், தவழ்ந்தும் சிரமப்பட்டுக்கொண்டு திடச்சித்தத்தோடு முன்னேறினார். தன்னைக்காண சிவசர்மா படும் கஷ்டத்தையும், அதையும் பொருள் படுத்தாமல் வரும் அவரது திட சித்தத்தையும் கண்டு, அவருக்கு அருள் செய்ய விரும்பி விருத்த வேதியரின் உருவில் அவர் முன் தோன்றி, பெரியவரே! இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு எங்கு செல்லுகிறீர்? என்று கேட்டார். சிவசர்மாவும் ஸ்வாமி! நான் தாம்பிரபரணியில் மூழ்கி அதன் கரையிலுள்ள சிவாலயங்களையும் தரிசித்துக் கொண்டு வந்தேன். இனி அகத்தியரைத் தரிசித்து வணங்கச்செல்லுகிறேன் என்றார். அதுகேட்ட அகத்தியர், சிவசர்மாவை நோக்கி, என்ன ஏழ்மை மதி உமக்கு! கும்பனைக்காண முடியுமோ? முடியாது, உமது ஊருக்குத் திரும்புவது நலம், என்றார். அது கேட்ட சிவசர்மாவுக்கு கோபம் ஏற்பட்டு "கும்ப முனியைக் காணேனாகில் உயிர் விடுவதன்றி இனித் திரும்பும் எண்ணம் இல்லை" என்றார். மகிழ்ந்த கும்ப முனிவரும், சிவசர்மாவிடம் தாமே அகஸ்தியர் என்பதை விளக்கி பழைய உருவத்தோடு விளங்கினார். சிவசர்மாவும் உள்ளம் குளிர்ந்து, உடல் புளகங்கொண்டு அவரை வணங்கி, பூசித்துப் போற்றித் துதித்தார். மகிழ்ந்த கும்பமுனியும் சிவ சர்மாவை நோக்கி நீர் நம்மைக்கண்டு தர்சித்ததனால் சிவபெருமானின் அருள் உமக்கு உண்டாகும். என் பெயரிலேயே "அகத்திய தீர்த்தம்" என்று அழைக்கப்படும் புனித தீர்த்தத்தில் நீராடும் என்றார். அதன்படியே

சிவ சர்மா தீர்த்தத்தில் மூழ்கியதும் பாவங்களும் மூப்பும் கழியப்பெற்று பதினைன்கு வயது காளையாக எழுந்தார். அகத்தியரும் சிவ சர்மாவை "சீர் பெறுகதி எய்துவை" என வரமளித்து மறைந்தார். பிறகு சிவ சர்மா காசி-பேசுரம் வந்து, சாந்தவேதனிடம் நடந்த வ்ருத்தாந்தங்களைக் கூறி பிறகு தான் கொடுத்து வைத்திருந்த பொன்னையும் பொருளையும் திருப்பித்தரும்படி கேட்டான். ஆனால் சாந்தவேதன் சிவசர்மாவின் சொல்லைக் கேட்கவில்லை. நான் உன்னிடம் பொருள் வாங்கவில்லை. என்னிடம் முன்பு பொருள் கொடுத்தவன் ஒரு வ்ருத்த வேதியன். நீயோ வாலிபன். உன் கதையிலும் எனக்கு நம்பிக்கையில்லை. ஆதலின் உன்னிடம் நான் பொருள் வாங்கவில்லை இது சத்தியம். நீ விரும்பினால் காசி பேசுவரர் சந்நிதியில் சத்தியம் செய்வேன் என்றான். நாளை வா. என்று சிவ சர்மாவை அனுப்பிவிட்டு, சாந்தவேதனும் சிவசர்மாவை ஏமாற்ற எண்ணி இறைவனை வணங்கிப் போற்றி சிவ சர்மாவுக்கு சத்தியம் சொல்லும் வரையிலும் தாங்கள் இங்குள்ள புளியமரத்தடியிலிருக்க வேண்டுமென்று பிரார்த்தித்து, பொன் மணிக் கும்பத்தில் மந்திரத்தாலே ஸ்தாபித்து புளிமேல் வைத்தான்.

அன்றிரவு காசிபேசுரர் சிவசர்மாவின் கனவில் தோன்றி என்னை சாந்தவேதன் புளியின்மேல் வைத்தான் ஆகையால் அப்புளிய மரத்தினடியில் சத்தியம் செய்யச் சொல் என்று கூறி மறைந்தார். அதன்படியே சிவசர்மாவும் மறுநாள் சாந்தவேதனை நோக்கி, நீர் காசிபேசர் சந்நிதிமுன்பாகச் சொல்லவேண்டாம், இந்த புளியமரத்தடியில் சத்தியம் செய்யும் என்று கூற, சாந்தவேதனும் தான் காசிபேசரை புளியினடியில் ஸ்தாபித்ததை அறிந்தும் அஞ்சாமல் பவவினையால் சத்தியம் செய்ய புளியின் முன் ஐந்தடி எடுத்துவைத்து இன்னுமொரு அடி எடுத்து வைக்கப் போவதற்குள் காசிபேசர் உந்திய கோபத் தீயால் புளியோடு சாந்தவேதனும் எரிந்து

சாம்பலானன். அந்த இடத்தில் ஒரு லிங்கம் உற்பத்தி யானது. அந்த மூர்த்திக்கு எரிச்சாளுடையார் என்ற பெயர் ஏற்பட்டது. சாந்தவேதனின் சுற்றத்தாரும் பயந்து சிவசர்மாவிடம் அவரின் பொன்னையும் பொருளை யும் கொடுத்தனர். சிவ சர்மா, அப்பொருளைக்கொண்டு காசிபேசுவரர் கோயிலையும் புதுப்பித்து, எரித்தாளுடை யார் கோயிலையும் கட்டினன் என வரலாறு கூறுகிறது. நியம நிஷ்டையுடன் இத்தலம்வந்து இறைவனடி வணங்கு வோர், சிவஞானம் பெற்று நற்கதியடைவர்.

இவை தவிர, இவ்வூரின் மேற்குப் பகுதியில் திருமூலநாதர்கோயில் உள்ளது. அம்பிகையின் பெயர் உலகம்மை. தானே முளைத்தெழுந்திருக்கும் திருமூல நாதர் மண்மேனியார். அதனல் இவருக்கு குவளைசாத்தித் திருமுழுக்குச்செய்யப்படுகிறது. இக்கோயில் கல்வெட் டுக்களில் "திருச்சாலைத்துறை" எனக் கூறப்படு கின்றன. இங்கு ஆனிமாதம் பெருவிழா நடைபெறு கிறது.

ஊருக்குக்கிழக்கே வீரமார்த்தாண்டேச்வரர்கோயில் உள்ளது. வீரமார்த்தாண்டனல் நிலைபெறுத்தப்பெற்ற மையால் பெருமான் வீரமார்த்தாண்டேச்வரர் எனப் பெற்ருர். அம்மையின் பெயர் நித்தியகல்யாணி.

ஊரின் நடுவே உள்ளது, அம்மையப்பர் கோயில், எரிச்சாளுடையார்கோயில் உற்சவமூர்த்திகளை இங்கு கொண்டுவந்துதான் திருவிழா நடத்துவது வழக்கம்.

மற்றும் இங்கு அகத்தீசர்கோயில், வேணுகோபால கிருஷ்ணன்கோயில், புருஷோத்தம பெருமாள்கோயில், தென்னழகர் கோயில், லெக்ஷ்மி நாராயணப்பெருமாள் கோயில்களும் உள்ளன. அகத்தியர் கோயிலிலுள்ள குகையில் உட்சென்று கவனித்தால் "ஓம்" என்ற பிரண வம் ஸப்த ரூபமாக வருவதைக் கேட்கலாம்.

ஆலயந்தொழுவது சாலவும் நன்று.

திருநெல்வேலி
நெல்லையப்பர் கோயில்.

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

திருநெல்வேலி நெல்லையப்பர்கோயில் திருநெல்வேலி சந்திப்பு இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 1½ மைல் தூரத்தில் நகரின் நடுவில் அமைந்துள்ளது. நகரைச் சுற்றி வேலிபோல் நெல் வயல்கள் அழகுடன் அமைந்துள்ளன. இந்த க்ஷேத்திரம் பஞ்ச சபைகளிலொன்ருன தாமிர சபையைக் கொண்டது.

ஒரு காலத்தில் இத்தலம் உள்ள இடம் மூங்கிற் காடாக இருந்து வேணுவனம் என்ற பெயர் பெற்று விளங்கியதாகக் கூறப்படுகிறது. இத்தலத்துறையும் இறைவன்தான் நெல்லையப்பர், இறைவி காந்திமதியம்மை. இத்தலத்தில் இருவரும் தனித்த திருக்கோயில்களில் இருக்கிருர்கள். வேணுவனநாதரின் சந்நிதி அம்மையின் சந்நிதிக்கு இடப்பக்கத்தில் இருக்கிறது. ஆதியில் இந்த இருகோயில்களும் தனித் தனியேதான் கட்டப்பட்டிருக்கவேண்டும். பிறகுதான் பொற்ருமரைக் குளத்திற்கு மேல்பக்கத்தில் ஒரு மண்டபம்கட்டி இரண்டு கோயில்களையும் இணைத்திருக்கவேண்டும் என எண்ணப் படுகிறது.

திருஞானசம்பந்தப்பெருமான் தனது திருப்பதிகத்தின் "திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி" என்றும், "தென்றல் வந்துலாவிய திருநெல்வேலி" என்றும் பாடியுள்ளார். கல்வெட்டுக்களில், இது "கீழ்வேம்பு நாட்டுக் குலசேகர சதுர்வேதி மங்கலம்" எனப் பெறுகிறது.

காந்திமதியம்மன்கோயில் வாயில் வழியாக உள்ளே சென்ருல் சந்நிதிக்கு எதிரில் ஊஞ்சல் மண்டபம்உள்ளது. இது 96 தூண்களைக் கொண்டது. இம்மண்டபத்தின்

யாளித் தூண்கள் காணத்தகுந்தவை. இந்த அம்மன் கோயில் கோபுரம் கி பி. 1626ல் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஊஞ்சல் மண்டபத்துக்கு வடபுறம், பொற்றாமரைக்குளம் உள்ளது. சிவபெருமான் இங்கு நீர் வடிவாகத் தோன்றியதாகவும், பிரம்மா அதில் பொன் தாமரை மலரோடு வந்து தோன்றியதாகவும் ஐதீகம்.

ஊஞ்சல் மண்டபத்திற்கு வடக்கே ஆயிரக்கால் மண்டபம் உள்ளது. இங்குதான் திருக்கல்யாண உற்சவம் நடைபெறும். பிறகு நேராக மகாமண்டபம் கடந்து அர்த்த மண்டபம் வந்து, அங்கிருந்து காந்திமதியம்மையைத் தரிசிக்கலாம். அம்பிகை இங்கு கருவரையில் நின்ற திருக்கோலத்தில் கையில் செண்டேந்திக்கொண்டு இருக்கிறாள். இந்த அம்பிகையை கல்வெட்டுக்கள் "திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார்" எனக் குறிப்பிடுகிறது. சம்பந்தப்பெருமான் "வடிவுடை மங்கை" எனக் குறிப்பிடுகிறார். காந்திமதியம்மை இங்கு ஒளியுள்ள மதியாகவே வீட்டுக்கு ஒரு காந்திமதியாகவும் திகழ்கிறாள். இந்த காந்திமதியம்மையின் கோயில் சக்தி பிராதான்யம் பெற்ற க்ஷேத்திரங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

மேற்கு பிராகாரத்தில் கருமாறி தீர்த்தமிருக்கிறது. அதைத்தாண்டி நேரேவந்தால் வசந்த மண்டபம் உள்ளது. இங்கு சித்திரை, வைகாசி மாதங்களில் ஸ்வாமிக்கும் அம்பிகைக்கும் வஸந்த விழா நடைபெறுகிறது. சுவாமி கோயிலையும் அம்மன் கோயிலையும் சங்கிலி மண்டபம் இணைக்கிறது. அம்மன் கோயிலும், சுவாமி கோயிலும், புராணப்படி முதலில் "முழுதும் கண்ட ராமபாண்டியனாலும்" பின் கி. பி. 7ம் நூற்றாண்டில் நின்ற சீர் நெடுமாறனாலும் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நின்ற சீர் நெடுமாறன் திருஞானசம்பந்தர் அருளால் சமணத்திலிருந்து சைவம் புகுந்தவர். இவரே கூன் பாண்டியன் என்றும் நாயன்மார்களில் ஒருவராகவும் கருதப்படுகிறார். சங்கிலி மண்டபத் தூண்களி

அமைப்பு வியக்கத் தக்கது. வடக்குப் பிராகாரத்தில் இருந்து இம்மண்டபம் வடக்காக சுவாமி கோயிலுக்குச் செல்லுகிறது. தெற்குப் பிராகாரத்தில் நாயக்க மன்னர்களின் சிலையைக் காணலாம். தெற்குப் பிராகாரத்தின் கிழக்குக் கோடியில் ஒரு சிவலிங்கம் இருக்கிறது. இது ஒரு முகம்மதிய பக்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும். முகம்மது அலியின் ஸ்தானாதிபதியான அன்வர்டிகான் என்பவரது மனைவி தீராப் பிணிவாய்ப்பட்டு வருந்தினாள். சிலர் யோசனையின் பேரில் காந்திமதியம்பிகையையும், நெல்லையப்பரையும் பிரார்த்தனை செய்து கொண்டாள். அதன் பயனாக அவளுக்கு நோய் தீர்ந்தது. இதனால் களிப்புற்ற அன்வர்டிகான் இந்த ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்து அதன் ஞாபகார்த்தமாக ஒரு லிங்கப்பிரதிஷ்டை செய்திருக்கிறான். அவனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கமூர்த்தி இன்று இக்கோயிலில் அனவரத நாதனாகவே விளங்குகிறார். தெற்குப் பிராகாரத்திலிருந்து வலமாக வந்தால் மேற்குப்பிராகாரத்தில் ஆறுமுகனின் சந்நிதி உள்ளது. திருவுருவம் மிக அற்புதமானது, வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகன் மயில் மீதேறி காட்சியளிக்கிறார். இந்தக் கோயிலை அமைத்தவர் பிள்ளையன் என்பார். பிறகு வடக்குப் பிராகாரத்தைக் கடந்து கிழக்குப் பிராகாரத்தையடைந்தால் நெல்லையப்பர் சந்நிதியின் முன் வாயிலில் கொடிமரமும் நந்தி மண்டபமும் காட்சி கொடுக்கிறது. இந்த மண்டபம் கி. பி. 1654-ல் சிவந்தியப்ப நாயக்கரால் செய்யப்பட்டதாகவும் இதன் முன்னுள்ள பெரிய கொடிமரம் கி. பி. 1555ல் காளயுக்தி வருஷம் வைகாசி மாதம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள சர்வ தல்வாத்திய மண்டபத்திலுள்ள சிற்பங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதை பேசும். குறிப்பாக வீரபத்திரர் சிற்பம் சிற்பியின் சிற்றுளித்திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. எல்லாம் அழகுப் புதையல்களாகவே விளங்குகின்றன.

இன்னும் உள்ளே சென்றால் மணிமண்டபம். இம் மண்டபத்தில் ஒரே கல்லில் செய்யப்பட்ட இரண்டு பெரிய தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூணிலும் நடுவே ஒரு தூணும் அதைச்சுற்றி 48 சிறு தூண்களும் குடைந்து எடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தூணும் ஒரு வித நாதத்தைக் கொடுக்கும். இந்த மண்டபத்தைக் கட்டியவன் கி.பி. ஏழாம் நூற்றாண்டவனான, நின்ற சீர் நெடுமாறனே.

இனி இம்மண்டபம் தாண்டி மஹா மண்டபத்தையும் தாண்டி நெல்லையப்பர் சந்நிதியை யடையலாம். இவரே வேணுவனநாதர். முழுதும் கண்ட ராமக்கோனுக்கு முக்தியளித்தவர். அந்த அரசனின் வேண்டுகோளுக் கிணங்கி 21 பீடம் உள்ளடக்கி மேன்மேல் வளர்ந்ததால் இவரை "வேண்ட வளர்ந்த மஹாலிங்கம்" என்றழைப் பர். இவர் மூங்கில் முனையில் தோன்றியதாக ஐதீகம்.

புராண வரலாறு இதுதான். நான்கு வேதங்களும் இறைவனைப் பார்த்து தருவாய் நின்று நிழல் செய்து நித்யமாயிருக்க விரும்பி வரம் கேட்டன. அவர் தாம் நடனம் செய்யும் 21 தலங்களுள் மிகச் சிறப்புற்று விளங் கும் காஞ்சி என்னும் நெல்லைப்பதியில் வேணுவாய் அமருங்கள், நாம் லிங்கமாயமர்ந்து அருள்புரிவோம் என் றார். அப்படியே வேதங்கள் வேணுவாகவும், இறைவன் இங்கு லிங்கமூர்த்தியாகவும் அருள் புரிகிறார்.

ஒரு காலத்தில் இந்த இடம் ஒரே மூங்கில் காடாக இருந்ததாகவும், ராமக்கோன் என்னும் ஒருவன் (இவரே பிற்காலத்தில் ராமபாண்டிய ராஜா எனப்படுகிறார்.) தினசரி தன்னுடைய மாட்டுப் பட்டிக்குச் சென்று குடம் நிறைய பால் கறந்து கொண்டு தன் இல்லத்துக்குத் திரும்புவான். அப்படி வரும்பொழுது ஒவ்வொரு நாளும் ஒரு மூங்கில் புதரினிடை கால் தடுக்கிப் பால் குடம் விழுந்து பால் முழுவதும் சிந்திவிடுகிறது. சில நாட்கள் தொடர்ந்து இப்படி நடக்கவே ஒருநாள் அவன் கோடரி யுடன் வந்து அந்த மூங்கில் புதரை வெட்டி அகற்ற முனைந்தான். ஒரு மூங்கில் முனையை வெட்டியவுடன்

வெளிப்பட்டார் இறைவர். அவரை முழுவதும் கண்டான் ராமக்கோன். அவன் வேண்டியபடியே மூங்கில் முனையில் இருந்து வளர்ந்தார் இறைவன். இதனாலேயே இத்தலம் வேணுவனம் எனவும், இறைவன் வேணுவன நாதன் எனவும் மேலும் முழுதும் கண்ட ராமக்கோன் வேண்டியபடி வளர்ந்தபடியால் ''வேண்ட வளர்ந்த நாயகர்'' எனவும் அழைக்கப்படுகிறார். இவருக்கு நெல்வேலிநாதர் எனவும் பெயருண்டு. அதாவது வேதசருமர் என்னும் சிவபக்தர் பிரதிதினமும் நெல் சேகரித்து வந்து சிவபெருமானுக்கு நைவேத்தியம் செய்வது வழக்கம். ஒரு சமயம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அதன் காரணமாக நெல் கிடைக்கவில்லை. இறைவனுக்கு நைவேத்யத்துக்கு வேண்டிய உணவு சேகரிக்க முடியவில்லை. காட்டில் நெடுந்தூரம் அலைந்து சிறிது நெல் சேகரித்தார். தனது க்ருஹத்திற்கு எடுத்துச்சென்று முற்றத்தில் உலர்த்தி விட்டு சிந்து பூந்துறைக்கு நீராடச்சென்றார். அது சமயம் பெருங்காற்றும் மழையும் அடிக்க ஆரம்பித்தது. தான் உலர்த்தியிருந்த நெல்லைக் காக்க எண்ணி சீக்கிரம் நதிக்கரையில் இருந்து வீட்டிற்கு விரைந்தார். என்ன ஆச்சர்யம்! நெல் உலர்த்தியிருந்த இடம் தவிர மற்றய இடங்களெல்லாம் மழைபெய்து நிணைந்திருந்தன. நெல்லைச்சுற்றி வேலி போல் தண்ணீர் இன்றி காய்ந்தபடியே இருக்கக் கண்டார். இறைவனின் கருணையைக் கண்டும் நினைத்தும் பெருமிதம் கொண்டார். அன்று முதல் நெல்லுக்கு வேலி அமைந்த ஊர் நெல்வேலி என்றும், இறைவன் பெயர் நெல்வேலி நாதர், நெல்லையப்பர் என்றும் வழங்கலாயிற்று. கல்வெட்டுகளில் இறைவன் ''திருநெல்வேலி உடையார்'' என்றும் ''திருநெல்வேலி உடைய நயனார்'' என்றும் அழைக்கப்படுகிறார். திருஞான சம்பந்தமூர்த்தியும் இறைவனை தமது பதிகத்தில் ''திருநெல்வேலியுறைச் செல்வர்'' என்று போற்றுகின்றார். இவர்தான் கருவறையில் சுயம்பு மூர்த்தியாய், வெட்டுப்பட்ட தலையுடன் பக்தர்களை பரிபாலித்துக் கொண்டிருக்கிறார்.

இக்கோயிலிலுள்ள நடராஜரும் சிவகாம சுந்தரியும் உருவில் பெரியவர்கள். இவர்கள் இருக்குமிடம் பெரிய சபை. அதுதான் தாமிர சபை. மேற்புற பிராகாரத்தில் அமைந்துள்ளது இந்த சபை. மார்கழி திருவாதிரை திரு

காளில் நடராஜர் திருநடம் புரிந்தருளுவார். இது ஆட வல்லான் அருள் நடம் புரியும், தென்னாட்டில் புகழ்பெற்ற பஞ்ச சபைகளுள் தாமிர சபையாகும்.

வேணுவன நாதனின் கருவறையை அடுத்து வட பக்கத்திலே நெல்லை கோவிந்தர் சந்நிதியுள்ளது. இங்கு பெருமாள் பள்ளிகொண்ட திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். வடக்குப் பிராகாரத்தில் ஒரு பள்ளத்தில் மிகக் குறுகலான இருட்டுச் சந்நிதியில் ஒரு லிங்கமூர்த்தியிருக்கிறார். இவரை திருமூலநாதர் எனத் தலபுராணம் கூறுகிறது. சுந்தரபாண்டியனின் கல்வெட்டு ஒன்று இவரை "ஸ்ரீ விருத்தேசுவரர்" என்றும் 'வேணுவனேசுவரர்'' என்றும் கூறுகிறது. இவர் பூமியில் பள்ளமான தளவரிசையில் இருப்பதால் இவரையே ஆதியில் தோன்றிய மூர்த்தி என்றும் மூலலிங்கமென்றும் கூறுவர்.

புராண பிரசித்தியும், சரித்திர புகழும் வாய்ந்த இக் கோயில் இலக்கியப் பிரசித்தியும் உடையது. நெல்லை தலபுராணம் ஒன்றிருக்கிறது. சொக்கநாதப்பிள்ளை என்பவர் பாடிய "காந்திமதி யம்மைப்பிள்ளைத் தமிழ்'' படிக்கப் படிக்க இன்பம் தரும். இன்னும் நெல்லை மும்மணி கோவை, நெல்லை வருக்கக்கோவை, நெல்லையந்தாதி முதலியனவும் உள்ளன.

இத்தலத்தில் 32 தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் தாமிரபரணியும், சிந்துபூந்துறையும் முக்ய தீர்த்தங்கள்.

தாருகாவனத்து ரிஷிகளை சிவபெருமான் பங்கப்படுத்தியது இந்தத்தலத்தில் என்பர். இதற்கு சான்றாக கருவறையின் உட்பிரகாரத்து மேற்புறத்தில் பிக்ஷாடனரின் திருவுருவம் இருப்பதைக் காரணம் காட்டுகின்றனர். மேலும் அகத்தியர் இராமர் முதலானோர் பூசித்த தலமிது. அகத்தியர் இங்கு திருமணக்கோலம் கண்டதாகக் கூறப்படுகிறது.

இவ்விதம் இந்த நெல்லைப்பதி தலம், மூர்த்தி, தீர்த்தம், விழாக்கள் முதலியவற்றால் பெருமைகொண்டு, தென் காஞ்சி, கன்னிப்பதி என சிறப்புப் பெயர்களுடன் விளங்கி வருகிறது. இப்பெருமை வாய்ந்த பதியை யடைந்து காந்திமதியம்மையையும், நெல்லையப்பரையும் தரிசித்து நமக்கு கஷ்டங்கள் வராமலும், மனதில் பாவச் செயல்கள் புகாமலும் வேலியாக இருந்து காக்கும்படி வேண்டுவோமாக.

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

நெல்லை மாநகரின் ஒரு பகுதி சிந்துபூந்துறை எனப் பெறும். இது பொருநையாற்றின் கரையில் பொலிவுடன் அமைந்துள்ளது. இது செல்வச் செழிப்புடன் வெகுகாலமாக இருந்துவருகிறது. மூன்றும் திருமுறையிலும், ஆறும் திருமுறையிலும் "பூந்துறை" என்று குறிக்கப்படும் வைப்புத்தலம் இதுவே. இது நெல்லையப்பர் கோவிலுக்கு நேர்கிழக்கே இருக்கும் ஆற்றங்கரைப் பகுதியாகும்.

சிந்துபூந்துறையும், குறுக்குத்துறை சுப்பிரமணிய-சுவாமி கோயிலும்.

ஒருசமயம் நெல்லையப்பர், காந்திமதியம்மையுடன் இத் துறைக்கு வந்து தீர்த்தவாரி கொடுத்தபொழுது, தேவர்களும் முனிவர்களும் இங்கு வந்து எண்ணற்ற பூக்களைச் சிந்தி நீராடினார்களாம். சிந்திய பூக்கள் மலைபோல் குவிந்து நிரம்பியிருந்த காரணத்தால் இத்துறை சிந்துபூந்துறை எனப் பெயர் பெற்றது எனப் புராண வரலாறு கூறுகிறது.

பூந்துறை — அழகான துறை, சிந்தும்—பூந்துறை — என்ன சிந்தும் பூந்துறை? என்னும் வினாவுக்கு திருஞானசம்பந்தர் "கந்தமார் தருபொழில் மந்திகள் பாய்கர மதுத்திவலை சிந்தும்பூந்துறை தமிழ் திருநெல்வேலி" என விடைதருகிறார். இவரின் விடையைக் கொண்டுதான் அடியார்கள் சிந்துப் பூந்துறை என்று இத்துறையை அழைத்திருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகிறது. நெல்லையப்பருக்கு முன்பெல்லாம் இங்கிருந்து தான்

திருமஞ்சன நீர் போய்க்கொண்டிருந்ததாகக் கூறப்படு கிறது.

ஒரு காலத்தில் அகத்தியர் இத் துறைக்கு வந்து நீரில் மூழ்கி இங்குள்ள திருமூல லிங்கப்பெருமானை பூஜித்தார் எனக் கூறப்படுறது.

ஒருசமயம் சிவபெருமான் பார்வதி தேவியுடன் இங்குவந்து இத் துறையில் நீராடினர்கள். அதுசமயம் தேவர்களும், கங்கை, யமுனை முதலிய நதிகளெல்லாம் கடல்களெல்லாம் உலகமெல்லாம் மூன்றரைக் கோடி தீர்த்தங்களெல்லாம்வந்து பொன்மலர் தூவி வணங்கிய தால் சிந்துப் பூந்துறை சிறப்பால் தழைத்து ஓங்கி நிற் கிறது. உலகிலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் மிகச் சிறந்தது சிந்து பூந்துறை எனத் திருநெல்வேலி தல புராணம் சிறப்பாகக் கூறுகிறது.

ஒருசமயம் ஒரு பிராம்மணோத்தமன் தன் தந்தையின் அங்கத்தை ஒரு கலயத்திலிட்டு ஒரு துணியில் மூடிக் கொண்டு கங்கையில் கரைக்க எண்ணி காசிக்குச் சென் ருன். கலயத்தை ஒரு அந்தணன் கையில் கொடுத்து சுமந்துவரச் சொன்னன். பிராம்மணன் கலயத்திலென்ன இருக்கிறது என்று கேட்டதற்கு அந்தணன் இது பூவைப் பணிகாரம் என்று சொன்னன். இருவரும் சிந்துப் பூந் துறைக்கு வந்தனர். சுமந்து வந்த பிராம்மணரை கலயத் தைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி, அந்தணன் நீராடச் சென்றுர். அதுசமயம் பிராம்மணன் மெதுவாகக் கலயத் தை அவிழ்த்துப் பார்த்தான். கலயத்தில் எல்லாம் செந் தாமரை மலராக இருக்கக் கண்டான். என்ன ! பூவைப் பணியாரம் என்று ஏன் பொய் சொன்னன் என்று

எண்ணிக்கொண்டிருக்கும் பொழுதே நீராடப் போன அந்தணன் திரும்பிவந்துவிட்டான். உடனே இருவரும் புறப்பட்டு வழிநடந்து காசிமாநகரம் வந்து கங்கைக்கரை யை யடைந்தனர். சுமந்துவந்த பிராம்மணர், மெதுவாகக் கலயத்தை அவிழ்த்துப் பார்த்தபொழுது மனிதர் எலும்பு கள் இருக்கக்கண்டு பயந்து அந்தணன் வந்தவுடன் அவனிடம் தான் இருதலங்களிலும் கண்ட விவரம் கூறி, இது என்னவிஷயம் என வினவினன். அதற்கு அந்தணன் இது என்னுடைய தந்தையின் அங்கம், காசியில் கங்கை யாற்றில் போடக் கொண்டுவந்தேன். அங்கம் என்று சொன்னால் நீ தூக்கிக்கொண்டு வரமாட்டாய் என்று பொய் சொல்லி உன்னை சுமந்து வரச்செய்தேன். என்னை மன்னித்துக்கொள் என்று சொல்லி நீர் எந்தத் தலத்தில் கலயத்தை அவிழ்த்துப் பார்த்தீர் என்று கேட்டனன். பிராம்மணனும் நான் சிந்துபூந்துறையில் அவிழ்த்துப் பார்த்தேன், அங்குதான் எல்லாம் செந்தாமரை மலராக இருக்கக்கண்டேன் என்றனன். உடனே இருவரும் புறப் பட்டு சிந்துப்பூந்துறை வந்து கலயத்தை அவிழ்த்துப் பார்த்தபொழுது அவையனைத்தும் மலராக இருக்கக் கண்டு அதிசயித்து சிந்துப்பூந்துறையே காசி முதலிய தலங்களிலும் சிறந்தது என உறுதிகொண்டு மலர்களாக விளங்கிய அங்கத்தை பொருநை யாற்றில் விட்டு விட்டு, வேணுவனநாதர் ஆலயம் சென்று இறைவனையும், தேவியையும் வணங்கிப் பிறகு களந்தை மாநகரம் சேர்ந் தார்கள் எனப் புராணம் கூறுகிறது. மேலும் சிந்து பூந்துறை மருங்கு சேரும் மிருகம் பட்சி ஊர்வன மச்சம் முதலியவை அனைத்தும் பெறுமுக்தி எய்தும் என்றால் அத்தீர்த்தத்தின் பெருமையை என்ன என்று உரைப்பது?

சிந்துபூந்துறைக்கு தெற்கே ஆற்றினுள் நல்லபாறை இருக்கிறது. இது மிகவும் வளைந்து திருவுருவங்கள் சமைப்பதற்கு மிகவும் தகுதியுள்ளவைகளாக இருக்கின்றன. இங்கிருந்தபாறையிலிருந்துதான் திருச்செந்தூர் முருகபெருமானின் திருவுருவம் சமைக்கப்பெற்றது என கூறப்படுகிறது. திருச்செந்தூர்முருகனின் திருவுருசமைத்த சிற்பி அப்பாறைலும் முருகபெருமானின் திருவுரு ஒன்றைச் செய்தான். நெல்லைமாநகரிலிருந்த பலர் இந்த முருகப்பெருமானை வழிப்படத் தொடங்கினர். பின்னர் பக்தர்களின் பக்திப் பெருக்கால் திருக்கோயிலும் எழுந்தது. ஆற்றுக்கு அது சிந்துபூந்துரையைவிட குறுகிய வழி உடைமையால் குறுக்குத்துறை எனப் பெயர் பெற்றது.

இத் திருகோயிலில் திருச்செந்தூர் போலவே மாசி, ஆவணி முதலிய மாதங்களில் பெருவிழாக்கள் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பிரதி தினமும் சிந்துபூந்துறையிலிருந்து நெல்லையப்பருக்கு வரும் திருமஞ்சனம் நின்று, குறுக்குத்துறை அதிகதூரமில்லாதபடியால் இங்கிருந்து வரத்தொடங்கியதாகக் கூறப்படுகிறது. இங்குள்ள முருகப்பெருமான் வரப்பிரசாதி. ஆற்றில் வெள்ளப்பெருக்குக் காலங்களில் இக்கோயில் நீரில் மூழ்கியிருக்கும்.

ஆதிரை, சங்கராந்தி அமாவாசை சோமவாரம், கிரஹணம், பிரதோஷம் முதலிய நாட்களில் பூந்துறையில் நீராடி நெல்லையப்பரையும், திருக்குமரனையும் தரிசிப்போர் நலம்பெற்று முக்திசேர்வர்.

பாளையங்கோட்டை - ... திரிபுராந்தகம்.

கல்விமணம் கமழும் பாளையங்கோட்டை பொருநை ஆற்றில் சுலோசன முதலியார் பாலத்தின் கீழ்க்கரையில் அமைந்திருக்கிறது. இவ்வூர் இம்மாவட்டத்தில் பேரூர் களில் மூன்ருவதாகக் கருதப்படுகிறது. இது திருசெந் தூர் செல்லும் மார்க்கத்தில் உள்ள புகைவண்டி நிலைய மாகும். இவ்வூரில் அழகிய மன்னனுர் கோயில், இராம சாமி கோயில், திரிபுராந்தேசர்கோயில் எனப் பல கோயிகள்கள் உள்ளன. இவ்வூர் பொதுவாக அரசியல், சமயம், கல்வித்துறை முதலியவற்றில் புகழ்பெற்றிருக் கிறது.

இவ்வூரின் நடுவில் அழகிய மன்னனுர்கோயில்விளங்கு கிறது. இது மிகப்பழமையான கோயில். இங்கு இக் கோயில் கோபால சுவாமி கோயில் என்றே வழங்கப் பட்டு வருகிறது. பெயருக் கேற்ப அழகிய மன்னனுர் அழகிய மன்னனுகவே கண் ணுக்கினியவராக பார்த்த பார்வையை மீட்க முடியாத அழகுடன் விளங்குகிருர்.

" சித்ரகலாநிதி "

N. கிருஷ்ணன்.

இக்கோயிலுக்குக் தென்மேற்கே சிறிது தூரத்தில் இராமசாமி கோயில் உள்ளது. அதற்கு முன்னுல் ஒரு அழகிய தெப்பக்குளம் விளங்குகிறது. ஒரு காலத்தில் நல்ல நிலையில் இருந்த கோயிலெல்லாம் காலப்போக்கில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

இவ்வூரின் கீழோரத்தில் உள்ளது திரிபுராந்தேசர் கோயில். இங்கு தைப்பூசத்திருநாள் திருவாதிரை, கந்தர் சஷ்டி முதலிய உத்ஸவங்கள் விசேஷம். திரிபுரம் அழித்து முடிவுகண்ட ஈசர் எனப்படுவார். வெங்குபாச்சா எனப் புகழ்படைத்த வெங்கு முதலியார் என்பவர் இக் கோயிலைக் கட்டினார் எனக் கூறப்படுகிறது. இங்கே சித்திரைத் திருநாள் மிகச்சிறப்பானது. பெருமான் காந்திமதியம்மையுடன் இங்குள்ள குட்டம் தீர்த்த துறையில் தீர்த்தம் அருளுகின்றார்.

இன்றைக்கு சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் கி. பி. 1648 ல் டச்சுக்காரர்கள் திருச்செந்தூர் கோயிலிலுள்ள ஆறுமுகநயினாரின் திருவுருவத்தைக் கவர்ந்து சென்றார்கள். உடனே வடமலையப்பபிள்ளை புதிதாக ஆறுமுகநயினார் திருவுரு ஒன்று சமைக்கச் செய்தார். அத்திருவுருவம் தங்கியிருந்த இடமே சாலைக் குமரன் கோயில் எனப்படும். அத்திருவுரு புறப்பட்டு ஆற்றைத் தாண்டிவரும் பொழுது களவுபோன திருவுரு கடலில் கண்டெடுக்கப்பட்டது என்ற செய்தி கிடைத்தது. அந்த இடமே முருகன் குறிச்சி எனப்படும். இது பாளையங் கோட்டையின் மேற்குப் பகுதியில் உள்ளது. பிறகு வட மலையப்பப்பிள்ளையின் ஆணைப்படி இப்புது ஆறுமுக நயினார் திருவுருவம், இந்தச் சிவன் கோயிலில் வைக்கப் பெற்று இன்றும் பேரழகுடன் திகழ்கின்றது.

மதுரை விசுவநாத நாயக்கர் காலத்தில் அவரது படைத்தலைவரான அரியநாத முதலியார் இங்கு ஒரு கோட்டைகட்டி அதில் சேனைகள் (பாளையம்) இருக்கச் செய்தார். அதனால் இதற்கு பாளையம்கோட்டை என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாளையக்காரர்களையும், ஜமீன்தார்களையும், ஜாகீர் தார்களையும் அடக்கி ஒடுக்கி, கப்பம் வாங்கி ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலேயர்கள் இங்கு தங்களைப் பாது

காத்துக்கொள்வதற்காக இக்கோட்டையைத் திருத்தி அமைத்துக்கொண்டு இங்கிருந்து தென்பாண்டி நாட்டில் அரசு செலுத்தியதாகக் கூறப்படுகிறது. இக்கோட்டை முஸ்லீம் ஆட்சியில் நவாப்புக்களாலும், 18, 19 வது நூற்றுண்டுகளில் ஆங்கிலேயர்களாலும், பயன் படுத்தப் பட்டதாகத் தெரியவருகிறது. இவ்வூர்ச் சிறையில் கட்டபொம்மு சகோதரன் காவலில் வைக்கப்பட்டிருந்தார். ஆங்கிலேயர் ஆட்சியில் அலுவலகங்கள் ஏற்பட்டு இவ்வூர் பலவாறு வளர்ச்சியடைந்தது.

இன்று கோட்டைகள் அழிந்து விட்டன. அதன் அறி குறிகளைக்கூடக் காணமுடியவில்லை. ஆங்கிலேயர்கள் இங்கிருந்த கோட்டையின் கற்களைக்கொண்டு இம்மா வட்டத்தில் சில அணைகள் கட்டியதாகக் கூறப்படுகிறது. இன்று இதன் பழம் பெருமைகளைப் பறைசாற்றிக் கொண்டு நிற்பவை, கவனிப்பாரின்றி இருக்கும் இங்குள்ள கோயில்களேயாகும்.

* * ** * *

ஸ்ரீ பூர்ணானந்தநாத ஸ்ரீ வித்யா பீடம்.

59, தம்பு செட்டித்தெரு மதராஸ்—1.

பீடத்தின் சார்பில் கீழ்க்கண்ட விசேஷங்கள் குறிப்பிட்ட தினங்களில் நடைபெறும்.

ஸாதாரண வருஷம் -- ஐப்பசி மாதம்.

5வ இரவு அஷ்டமி துர்க்கா பூஜை.

14வ இரவு விசாக, கணபதி, சுப்ரமண்ய பூஜை,

26வ இரவு பௌர்ணமி, தேவி பூஜை.

இப் பீடத்தைச் சேர்ந்த அன்பர்கள் ஷை விசேஷங்கட்கு வந்திருந்து ப்ரஸாதத்தை அடையுமாறு கோரப் படுகிறார்கள்.

ஸ்ரீ வைகுண்டம் பொருநையாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இவ்வூர் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் இரயில் பாதையில் அமைந்துள்ளது.

வைகுண்டபதி, கைலாஸபுரம் என இரு ஊர்கள் சேர்ந்தது ஸ்ரீவைகுண்டம். கைலாஸமும் வைகுண்டமும் சேர்ந்திருக்கும் சிறப்பு ஸ்ரீ வைகுண்டத்துக்கு உள்ளது. பெருமாள் கோயில் கொண்டுள்ள பதியாதலால் இந்தத் தலத்திற்கு ஸ்ரீ வைகுண்டம் எனப் பெயர் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது. இவ்வூர் பெருமாளுக்கு கள்ளர் பிரான் எனப் பெயர். பொருநை ஆற்றின் வடகரையில் கள்ளபிரான் கோயில் அழகுற அமைந்துள்ளது. பெரிய கோபுரத்துடன் கூடிய பெரிய கோயில்.

ஸ்ரீவைகுண்டம் ... ...
... ... கள்ளபிரான்

இங்கு பகவான் விஷ்ணு, கள்ளபிரானக ஸ்ரீதேவி, பூதேவி சகிதம், கையில் கதையுடன் கம்பீரமாக காட்சியளிக்கிறார். இவர் காண்பவர் உள்ளத்தையெல்லாம் கவரும் கள்ளன். ஏன்! இவரை உருவாக்கிய சிற்பியையே மயக்கி விட்டார். இது ஒரு ரசமான கதை. கள்ளப்பிரானின் திருமேனியைக் கண்ணும் கருத்துமாக, பய பக்தியுடன் உருவாக்கினன் சிற்பி. உருவம் வெகு அழகாக அமைந்து விட்டது. தன் உள்ளத்தையே பறி கொடுத்து விட்டான். அழகுத் திருமேனியைக் கண்ட சிற்பி பரிவோடு இறைவனின் கன்னத்தைக் கிள்ளிக் கொஞ்சியதாகவும், சிற்பியின் ஆத்மார்த்த பக்தியில் சந்தோஷப்பட்ட இறைவன், சிற்பி கிள்ளிய

" சித்ரகலாநிதி "

N. கிருஷ்ணன்.

கன்னத்தில் வடுவை ஸ்திரமாகப் பதிய விட்டு விடுகிறார். சிற்பியின் அந்தரங்க பக்தியையும் சிற்பத்திறனையும் உலகுக்குக் காட்டுகிறார். சிற்பி கிள்ளிய வடுவை இன்றும் இறைவன் திருமேனியில் காணலாம்,

இந்த இறைவனை "திரு வழுதி வள நாட்டு, ஸ்ரீவை-குந்தத்து நாயனார் கள்ளபிரான்" என கல்வெட்டு கூறுகிறது. "புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று" என்று நம்மாழ்வார் மூன்றுத் தலங்களைச் சேர்த்துப்பாடுகிறார். இவ்வைகுந்தம் திருமால் வைகுந்த தலமாகிய வைகுண்டத்தின் பெயரால் அமைந்தது. இந்தத்தலம். பிள்ளைப் பெருமாள் ஐய்யங்கார் முதலிய பெரியோர்களால் பாடப்பெற்றதாகும்.

மூலஸ்தானத்தில் ஸ்ரீ வைகுண்டநாதர் என்ற பெயருடன் மூல மூர்த்தியாக நல்ல சிலை வடிவிலே தனித்து நின்று கொண்டிருக்கிறார். இவர் வைகுண்டத்திலிருந்து நேராகப் புறப்பட்டு அவசரத்தில் வந்ததால் தனியாகவே வந்திருக்கிறார். அதாவது சோமுகாசுரன் என்ற ஒரு அசுரன் இருந்தான். அவன் பிரம்மதேவனிடமிருந்து நான்கு வேதங்களையும் தனது பலாத்காரத்தால் பிடுங்கிக் கொண்டு சென்று விடுகிறான். பிரம்மதேவன் மிக்க வருந்தி தவம் செய்கிறான். தவத்திற்கிரங்கிய வைகுண்டநாதன், உடனே வைகுண்டத்திலிருந்து புறப்பட்டு சோமுகாசுரனை வென்று வேதங்களை ரக்ஷித்துப் பிரம்மதேவனிடம் ஒப்படைக்கிறார். அதன்காரணமாகவே ஸ்ரீதேவி பூதேவி இவர்கள்இன்றி தனித்தே நிற்கிறார்கள். இத்தலத்தில் இவரையே பால்பாண்டியன் என்று அழைக்கிறார்கள். இதற்கும் ஒரு காரணம் உள்ளது. பிரம்ம-னுக்குக் காட்சியளித்த பரந்தாமன் இத்தலத்திற் சிறிது காலம் மண்ணுக்குள் மறைந்திருந்திருக்கிறார். அரண்மனை பசுக்கள் இந்த இடம் வந்து பரந்தாமன் மறைந்திருக்கும் இடத்தில் பால் சொரிகின்றன. இதைக் கண்ணுற்ற

கோவலர்கள் இவ்விஷயத்தை மன்னரிடம் முறையிடு கின்றனர். மன்னன் வந்து பார்த்து அவ்விடத்தைத் தோண்டிப் பார்க்கிறார் அங்கிருந்து எழுந்தார் வைகுண்ட நாதன். இதன் காரணமாகவே பிரதிதினமும் இவருக்குப் பால் அபிஷேகம் நடைபெறுகிறது. பால் பாண்டியன் என்ற பெயரும் ஏற்படுகிறது.

இத்தலத்தில் ஓர் அதிசயம், மற்றைய பெருமாள் கோயில்களிலில்லாது ஒருதனிச்சிறப்பு இந்த வைகுண்ட நாதருக்குண்டு, அதுதான் இவரை வருடத்தில் இரு முறை சூரியன் வழி படுவதாகும். அதாவது சித்திரை 6 ந்தேதி, ஐப்பசி 6ந்தேதி ஆகிய இந்த இரண்டு நாட்களிலும், இளஞ்சூரியனது பொற்கதிர்கள் கோபுர வாயில் வழியாக எல்லா மண்டபங்களையும் கடந்து வந்து வைகுண்டநாதரின் திருமேனியில் தன் பொற்கிரணங்களால் அபிஷேகம் செய்கிறது. சூரிய பூஜை நடக்கும் விஷ்ணு ஸ்தலம் இது ஒன்றே எனத் தெரிய வருகிறது. இத்தலத்தில் விஷ்ணு கள்ளத்தனமாக வந்து கள்ளர்களுக்குத்துணை நின்றமையால் கள்ளபிரான் எனப்பெயர் வந்தது எனச்சிலர் கூறுகின்றனர். கள்ள பிரானையும், வைகுண்டநாதனையும் தரிசித்துவிட்டு பிராகாரத்திற்கு வந்து வலம் வரலாம். வைகுண்டநாயகியையும் சேரநாதநாயகியையும் தரிசித்துக்கொண்டு வந்தால் பரமபத வாசல்வரும். இது வைகுண்ட ஏகாதசியன்று மட்டுமே திறக்கப்பட்டு 10 நாட்கள் திறந்திருக்கும். அதன் அருகில் மணவாள மாமுனியின் சந்நிதி உள்ளது. பிறகு தசாவதார மூர்த்திகளையும் தரிசித்துக்கொண்டு யோக நரசிம்மர் சந்நிதியை தரிசிக்கலாம். இங்கு லக்ஷ்மி நரசிம்மரின் விக்கிரகம் வெகு அழகாக உள்ளது. இங்கு பிரதி செவ்வாய்க்கிழமை இரவிலும் விசேஷ பூஜைகள் நடக்கின்றன,

இக்கோயிலில் திருவேங்கடமுடையான் மண்டபம் சிற்பச் சிறப்பு வாய்ந்ததாகும். இங்குள்ள யாளித் தூண்களும் அனுமான் சிலைகளும் காணத் தகுந்தவை.

எல்லாவற்றையும் விட மிக அற்புதமாக உள்ளது ராம னும், லக்ஷ்மணனும், வானர வீரர்களை அணைத்துக் கொண்டு நிற்கும் காட்சி அபூர்வமானதாகும்.

இத்தலம் நவதிருப்பதிகளில் ஒன்றாகும். அதாவது ஆழ்வார் திருநகரி, திருக்கோளூர், தென் திருப்பேரை, ஸ்ரீ வைகுண்டம், வரகுணமங்கை, திருப்புளிங்குடி, பெருங்குளம், மேலும் இரட்டைத் திருப்பதி என்னும் தொலைவலிமங்கலம் ஆகும்.

இத்தலத்தில்தான் குமரகுருபர அடிகள் பிறந்து வளர்ந்தார் என்பதும் யாவரும் அறிந்த விஷயமே. குமரகுருபர ஸ்வாமிகள் கயிலாயப் புரத்தில் தோன்றி னார்கள். அவர் ஏற்படுத்திய ஆதீனம் காசியிலும், திருப்பனந்தாளிலும் உள்ளது. ஸ்ரீ வைகுண்டத்தின் வட கிழக்குப்பகுதியில் கைலாசநாதர் கோயில் உள்ளது. கைலாசநாதபுரம் எனப்படும் பழம்பதியாகும். ஸ்ரீ வைகுண்டமும் கைலாசமும் ஒன்றே என இந்தப் பகுதி எடுத்துக் காட்டுகிறது. ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து கைலாசம், கூப்பிடு தூரத்திலுள்ளது. அதாவது ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலிலிருந்து கூப்பிடுதூரத்தில் உள்ளது கைலாசநாதர் கோயில்.

இந்த ஸ்ரீ வைகுண்டநாதர் கோயில் கட்டபொம்ம னுக்கும் ஆங்கிலேயருக்கும் 1801ல் நடந்த போரில் ஒரு கோட்டையாகப் பயன்பட்டது எனத் தெரியவருகிறது.

மார்கழி நீராடி, நோன்புமுடித்து, பிறகு இந்த ஜன்மத்திலோ அல்லது எந்த ஜன்மத்திலோ அடையப்போகிறலட்சியம் எங்களுக்கு எது ? உன்னுடைய ஸன்னிதிதானே! அது இங்கேயே, இப்பொழுதே, கிடைக்கும்பொழுது, நோன்பாவது, நீராடலாவது! உன் ஸன்னிதியில் இருந்து இனிமேல் நீங்க மாட்டோம்! எங்களுக்கு எது தேவை தெரியுமா ?

“ எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் ; உனக்கே நாம் ஆட்செய்வோம்-

உன்னை அண்டிப் பிழைத்து, உனக்குக் கைங்கர்யபரர்களாக இருப்பதையே நீ அளிக்கவேண்டும். இந்த எண்ணம் எங்களுக்கு எப்படியுண்டாயிற்று ? உன் ஸன்னிதியில் வந்து நின்றதனால்தானே ! ஒரு வேளை உன் ஸன்னிதி நீங்கிவிட்டால், மறுபடியும் வேறு ஸாமான்ய விஷயங்களிலே ஆசையும், ப்ரவ்ருத்தியும் மனித இயல்பு காரணமாய்த் தோன்றலாமல்லவா ? அப்படித் தோன்றுமலிருப்பதற்கும், ஸ்வாமி ! நீர்தான் உத்தரவாதம் கொடுக்கவேண்டும் !

“ மற்றை நம்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.”

இவ்வடிகளிலே திருப்பாவையின் ஸாரம் காணக் கிடக்கின்றதல்லவா ! தேவகியிடமிருந்து, த்ருதராஷ்ட்ரனிடம் தாவி, சூடிக்கொடுத்தவளை நாடி வந்துவிட்டோம் ! வரப்போவது மார்கழி மாதம் ! பொருத்தம்தானே, என்ன சொல்கிறீர்கள் ?



ஆழ்வார்திருநகரி ஸ்ரீ வைகுண்டத்திற்கு ஐந்துமைல் தொலேவில் திருச்செந்தூர் தாலுக்காவில், பொருநை ஆற்றுக்குத் தென்கரையிலமைந்துள்ள வைஷ்ணவ தல மாகும். திருநெல்வேலி, திருச்செந்தூர், இரயில் பாதை யில், ஸ்ரீ வைகுண்டததிற்கும் நாசரெத்துக்கும் இடைப் பட்ட இரயில் நிலேயம் இவ்வூர். ஆற்றங்கரையில் அமைந் திருப்பதால் மருதவளமிக்க உடையது.

ஆதியில் பிரம்மதேவன் தனக்குக்கிடைத்த மறைகளே இழந்து, இழந்த மறைகளேயடைவதற்குத் தவம் செய்யத் தக்க இடமாக பல தலங்களேயும் ஆராய்ந்து வருங்கால், இத்தலத்திற்கு வந்தவுடன் " குரு, கா " அதாவது பிரம்மனே (இங்கே) தவம் செய் என்று ஒலிகேட்டு

ஆழ்வார்திருநகரி ... ... திருக்குருகூர்.

பிரம்மன் இங்கு தங்கி தவம் செய்து, சித்திபெற்று திரு மாலின் உதவிகொண்டு மறைகளேத் திரும்பப் பெற்றூர். ஆதலின் இவ்வூர் "குருகாபுரி" அல்லது "குருகைநகர்" எனப் பெயர்பெற்றதாகும். இத்தலத்தின் பழமையான பெயர் "திருக்குருகூர்" எனப்படும். முதல் முதலில் யுகத்தில் தோன்றியதால் "ஆதிக்ஷேத்திரம்" எனவும்,

" சித்ரகலாநிதி "

N. கிருஷ்ணன்.

மேலும் இவ்வூரில் ஞானபிரான் என்ற லக்ஷ்மீ வராஹ பெரு மாள் எழுந்தருளியிருப்பதால் "வராஹக்ஷேத்திரம்" என்றும், ஆதிசேஷன் திருப்புளிய மர மாக அவதரித்திருப்பதால் "சேஷ க்ஷேத்திரம்" என வும், சங்கராஜனுக்கு மோக்ஷம் கொடுத்தமையால், சங்க தீர்த்தம் ஏற்பட்டது. அதன் காரணமாக " தீர்த்த

க்ஷேத்திரம் " எனவும் தாந்தனுக்கு மோக்ஷம் கொடுத்த காரணத்தால் தாந்த க்ஷேத்திரம் எனவும் பல பெயர்கள் இத்தலத்திற்கு உண்டு.

இது ஆழ்வார்கள் பன்னிருவருள் புகழ்பெற்ற நம்மாழ்வார் இருந்து தம் திருவாய்மொழி இயற்றியருளிய திருப்பதியாகும். இவ்வூரில் பூவைச்யர் என்ற வேளாள குலத்திலே திருவழுதிவள நாடரின் திருவம்சத்திலே காரியார் என்ற சிற்றரசன் திருவண் பரிசாரத்தில் திருவாழ்மார்பரென்ற பகவத் பக்தரது பெண்ணான உடைய நங்கையாரை மணம் செய்து கொண்டு இருவரும் திருக்குருகூர் வந்து பலவாண்டு வாழ்ந்தனர். ஒரு நாள் இருவரும் திருவண்பாரிசம் சென்று பிறகு தம் ஊருக்குத் திரும்புகையில் திருக்குறுங்குடியை யடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும் வைஷ்ணவ நம்பியை வணங்கி "தங்களுக்கு ஒரு மகப்பேறு இல்லை என்றும், அப் பேற்றினை அருளித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். உடனே இறைவன் "நாமே வந்து பிறக்கிறோம்" என்று பெருங்கருணையுடன், அர்ச்சகமுகமாக சொல்லி அருளி அர்ச்சகமுகமாக தீர்த்தம், திருத்துழாய் பிரஸாதமளித்து அருளினர். பிறகு இருவரும் மனமகிழ்ச்சியுடன் திருநகரி வந்து வாழ்கையில் உடைய நங்கையார், கர்ப்பவதியாகி அவர் வயிற்றினில் பகவானது அம்சமும், சேனை முதலியாரது அம்சமுமாக ஒரு குமாரர் அவதரித்தார்.

பகவானின் நியமனப்படி அவதரித்த குமாரர் பிறந்தது முதல் அழுதல், பாலுண்ணுதல் முதலிய உலகவியவகாரம் ஒன்றுமில்லாது நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக பூரணராய் வளர்ந்து வருகிற அதிசயத்தைக்கண்ட பெற்றோர்கள் பெருமாள் பேரில் பாரத்தைப் போட்டுத் தாம் சிறிதும் கவலைப்படாமல் பிறந்த பன்னிரண்டாம் நாளில் திருநகரியிலுள்ள திருக்கோயிலுக்கு குழந்தையை எடுத்துச் சென்று ஸ்ரீ ஆதிநாதனை சேவிக்கப்பண்ணி அத்தெய்வக் குழந்தைக்கு உலக

கடைக்கு மாருகயிருந்ததனல் "மாறன்" எனத் திரு நாமம் சாத்தினர். மேலும் குழந்தை பிறந்தவுடனே, தனது ஸ்பரிஸத்தால் அஞ்ஞானத்துக்குள்ளாக்கி அழுதல் அரற்றுதல் முதலியன செய்யும்படி பண்ணிவிடும் தன்மையதான சடமென்னும் வாயு, இக்குழந்தையையும் பற்றவர, அப்பொழுது இவர் அதனை ஹுங்காரத்தால் ஒறுத்து ஒழித்ததனல் இவருக்கு "சடகோபர்" என்ற திருநாமமும் ஏற்பட்டது. குழந்தை கோயிலில் சென்று ஸ்ரீ ஆதிநாதனை தரிசித்த பிறகு மெள்ளத் தவழ்ந்துபோய் கோயில் பிரகாரத்திலுள்ள புளியமரத்தடியில் அமர்ந்து கொண்டார். புளியமரத்தின் பொந்தில் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

உணவும் நீருமின்றி, பதினாறு வருஷங்கள் கண் விழியாமலும் ஒருவருடனும் பேசாமலும், அமர்ந்திருந்தார். ஆயினும் குழந்தையில் உடல் வளர்ச்சி குன்றவில்லை.

பகவானின் நியமனப்படி திருவனந்தாழ்வானே புளிய மரமாக வந்து அவதரித்ததாகக் கூறப்படுகிறது. இதற்கு உறங்காப்புளி என்றும், நம்மாழ்வார் இதனடியில் ஞானம் பெற்றதால் திருப்புளியாழ்வார் என்றும் பெயர் வழங்கப்படுகிறது.

சடகோபர் இவ்விதம் ஞான நிலையில் இருக்கும் சமயம், திருக்கோளூரிலிருந்து திவ்ய தேசயாத்ரையாகச் சென்றிருந்த மதுரகவியாழ்வார், தென்திசையில் ஒரு பேரொளியைக் கண்டார். உடனே விஷயம் கேட்டறிந்தார். இவரது வைபவத்தைக் கேட்ட உடனே திருவயோத்தியிலிருந்து புறப்பட்டு வந்து புளியமரப் பொந்தில் சடகோபரைத் தரிசித்துத் தெண்டம் சமர்ப்பித்தார். பிறகுமதுரகவிகளின் கேள்விகளுக்கு விடையளித்ததைக் கண்டு இவர் ஒரு பெரிய ஞானி என்றுணர்ந்தார்.

(அடுத்த இதழில் முடியும்)

ஆழ்வார் திருநகரி ... ...
... ... திருக்குருகூர்.

" சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

சடகோபரே காலக்கிரமத்தில், நான்கு வேதங்களையும் திராவிட வேதமாக, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் பிரபந்தங்களை அருளிச்செய்து மதுரகவிகளுக்கு உபதேசித்தருளினார். தமது சித்தாந்தத்தை வெளியிட்டு வேறொன்றிலும் சிந்தை செலுத்தாது பரமனையே தியானித்து முப்பத்தைந்து திரு நக்ஷத்திரம் இங்கு வாழ்ந்திருந்தார் எனக் கூறப்படுகிறது. இவரே வேதம் தமிழ்செய்த வித்தகர் என்றும், இயல்பாய் மெய்யுணர்வுபெற்று எல்லாவற்றிற்கும் அடிப்படையான மெய்யுணர்வை உணர்ந்தவர் உணர்ந்தவாரே, உலகத்துக்கும் உணர்த்திய உலகுய்யத்தோன்றிய குருமூர்த்திகளுள் முதன்மையானவர். இவரே வகுளபூஷண பாஸ்கரர், நம்மாழ்வார் எனவும் கூறப்படுவார். இந்த நம்மாழ்வார் பிறந்து வளர்ந்த காரணமாகவே இவ்வூர் (" குருகூர் ") ஆழ்வார்திருநகரி என்ற பெயருடன் திகழ்கின்றது.

திருக்குருகூர், நம்மாழ்வார் பிறந்து வளர்ந்து ஞானம் பெற்று இங்கு முக்தியடைந்த காரணத்தால் " ஆழ்வார் திருநகரி " என்ற பெயர்கொண்டு விளங்குகிறது.

வைஷ்ணவப் பெரியாரான ஸ்ரீ ராமானுஜர் தென்னாட்டில் யாத்திரை செய்து நம்மாழ்வார் பிறந்த தலமாகிய திருக்குருகூர் எல்லையை யடைந்ததும் தூரத்தில்

இருந்தே கோயிலும், கோபுரமும், தாமிர நதிக்கரையில் அவருக்குக் காட்சியளித்தன. நம்மாழ்வார் பிறந்து வளர்ந்து, வேதசாரமான திருவாய்மொழிப் பாசுரங்கள் இயற்றிய இடம் இதுதான் என்பதை உணர்ந்த உடனே யே அவர் உணர்ச்சிவயப்பட்டார், அதன் விளைவாக அவர் வாக்கினின்று,

> "இதுவோ திருநகரி? ஈதோ பொருநை?
> இதுவோ பரமபதத்து எல்லை! இதுவேதான்
> வேதம் பகர்ந்திட்ட மெய்ப் பொருளின்
> உட்பொருளை
> ஓதும் சடகோபன் ஊர்?"

என்ற பாட்டு வெளிப்பட்டது.

ராமானுஜர் திருக்குருகூரைப் "பரமபதத்து எல்லை" என்று கூறுகிறார். நம்மாழ்வார் பிறந்த மண்ணிலே அடியெடுத்து வைத்ததும் அவருக்கு பரமபதத்திலே அடியெடுத்து வைத்த உணர்ச்சி உண்டாகிவிடுகிறது. "ஸ்ரீரங்கம் பூலோக வைகுண்டம்" ஆழ்வார் திருநகரி பரமபதத்து எல்லை.

கோயில் ஊரின் நடுவில் அழகாக அமைந்துள்ளது. ஆழ்வார் குருகூரில் கோயில்கொண்டிருக்கும் பெருமாளை "ஆதிப்பிரான்" என்று கூறுகிறார், "சேற்றில் செந்நெல் கமலமோங்கு திருக்குருகூர்" என்றும் "மாட மாளிகை சூழ்ந்த அழகாய திருக்கூர்" என்றும் ஆழ்வார் கூறுவதிலிருந்து குருகூர் உழவுக்குச் சிறப்புப் பெற்று விளங்கியதும், இயற்கை அழகுடன் வயல்களில் செந்நெல்லோடு கரும்பும் ஓங்கிவளர்ந்து இடையிடையே தாமரைகள் மலர்ந்திருந்தன என்றும் விளங்குகிறது. மேலும், "மலிந்து செந்நெல் கவரிவீசும் திருக்குருகூர்" என்பதிலிருந்து இயற்கை பெருமாளுக்கு சாமரம் வீசுவதுபோல் இருந்ததாகவும் கூறுகிறார்.

ஆதிநாதர் கோயிலின் முன்னால் கல்லினால் பந்தல் மண்டபம் ஒன்று இருக்கிறது. இங்கு நான்கு நிலை கோபுரம் உள்ளது. சுற்றி மதிலும், மாடவீதிகளும் உள்ளன. இந்த மாடவீதிகளில், திருவேங்கடநாதன், திருவரங்கநாதன், ஆண்டாள், பிள்ளைலோகாசாரியார், அழகர், தேசிகன் இவர்களின் திருக்கோயில்கள் உள்ளன. உடையவர் சந்நிதி மேற்கேயுள்ளது.

பிரதானவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் ஒரு கற் பந்தல் மண்டபம் இருக்கிறது. அதன் இருபுறங்களிலும் வாஹன மண்டபமும், கண்ணாடி மண்டபமும் வஸந்த மண்டபம் முதலியன உள்ளன. வடபுறம் வைகுந்தவாயிலும், திருமாமணி மண்டபமும் உள்ளன. தென் கிழக்கு மூலையில் கருடாழ்வார் இருக்கிறார். இவருக்கு ஆடி சுவாதியில் விசேஷ பூஜை உண்டு.

கோயிலின் வாயிலைக்கடந்து கொங்கணையான் குறடு, கிளிக் குறடு முதலியவைகளையும் கடந்து கருடமண்டபம் வரவேண்டும். பிறகு நேராக அர்த்தமண்டபம், கருவறையில் ஆதிநாதர் ஸ்ரீதேவி, பூதேவி ஸஹிதம் காட்சியளிக்கிறார். மூலமூர்த்திக்கு முன்பாக உத்சவர் " பொலிந்து நின்ற பிரான் " என்ற பெயரோடு பொலிகிறார். இந்த மூலவரையும் உத்சவரையும் நம்மாழ்வார் மங்களாசாஸனம் செய்தருளியிருக்கிறார்.

" மலிந்து செந்நெல் கவரிவீசும்
திருக்குருகூர் அதனுள்
பொலிந்து நின்றபிரான் கண்டீர் " என்று

உத்சவரையும்.

" அன்று நான்முகன் தன்னோடு
தேவர் உலகோடு உயிர் படைத்தாய்
குன்றம் போல மணிமாட

நீடு திருக்குருகூர் அதனுள்
நின்ற ஆதிபிரான் நிற்க '' என்று

மூலவரையும் பாடியுள்ளார். உத்ஸவருக்குப் பக்கத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி ஆகிய மூவருடன் சேவை சாதிக்கிறார். பிரம்மனால் ஆராதிக்கப்பட்டவர்.

ஒருசமயம் பிரம்மா வைகுண்டத்தில் நாராயணனை சேவிக்க அவரும் பிரம்மனை நோக்கி, உன்னைப் படைப்பதற்கு முன்பே நாம் தண் பொருநை நதிக் கரையில் கோயில் கொள்ள திருவுள்ளம் கொண்டுள்ளோம். அதனை ஆதிக்ஷேத்திரம் எனக்கொண்டு நீ வந்து தரிசித்து எம்மை ஆராதனை செய்க என்றார். அதன்படி பிரம்மதேவன் பொருநை நதிக்கரை வழியே வருகிறார். அது சமயம் ஒரு வலம்புரி சங்கு நீரில் மிதந்து வந்து திருச்சங்கணித் துறையில் ஏறி அங்கிருந்து ஆதிநாதர் கோயில் வந்து, வலம்வந்து சென்றது. இதனைக்கண்ட பிரமன் இதுவே ஆதிக்ஷேத்திரம் என்று உணர்ந்து ஆதிநாதனைத் திருவாராதனம் செய்து சத்தியலோகம் திரும்பினார். இவ்விதம் பிரம்மாவால் ஆராதிக்கப்பட்டவரும், தானே குருவாக வந்து உபதேசம் தந்தருளிய மூர்த்தியுமாகிய ஆதிநாதரை தரிசனம் செய்துகொண்டு வெளியே வரலாம், பெருமாள் சந்நிதிக்குப் பின்புறத்தில் இருபக்கங்களிலும் இரண்டு நாச்சியார் கோயில்கள் தனித்தனியாக உள்ளன. நாச்சியார்களின் பெயர் ஆதிநாயகி, குருகூர்நாயகி என்பதாகும், இந்தப் பிரகாரத்திலேயே, பகல்பத்து, இராப்பத்து உத்ஸவம் நடக்கும் மண்டபங்கள் இருக்கின்றன.

(தொடரும்)

ஆழ்வார் திருநகரி ... ...

... ... திருக்குருகூர்.

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

(சென்ற மாதத்தொடர்ச்சி)

இத்தலத்தில் வாராகமூர்த்தி ஞான பிராணக முனிவர்களுக்கு உபதேசம் சொன்னதாகக் கூறப்படுகிறது. அவர் சந்நிதி தெற்கு பிரகாரத்திலுள்ளது.

நம்மாழ்வார் சந்நிதி, பெருமாள் சந்நிதிக்கு சுமார் 60 அடி தூரத்திலுள்ளது. ஆதிநாதரைவிட நம்மாழ்வாருக்குத்தான் ஏற்றம் அதிகம். ஊரின் பெயரையே மாற்றிவிட்ட மஹிமை அவருக்குத்தான், பெருமாள் விமானத்தைவிட ஆழ்வார் விமானம் சற்றுப் பெரியது. ஆழ்வார் தங்கித்தவம்செய்த புளிய மரம்ஏழுகிளைகளோடு சந்நிதியில் உள்ளது. ஆழ்வார் 16 ஆண்டுகள் தவக்கோலத்தில் எழுந்தருளியிருந்த இடம் இதுவே. இந்தக் கோயிலுக்கு இதுவே தல விருக்ஷம். இந்தப்புளி இரவில் உறங்குவதில்லை எனவே இத் திருப்புளி ஆழ்வாருக்கு உறங்காப்புளி எனப்பெயரும் வழங்கப்படுகிறது. இந்த மரத்தடியில்தான் நம்மாழ்வார்கோயில் உள்ளது. நம்மாழ்வாரின் பூத உடல் இதனடியில்தான் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. பெருமாள் கோயில் உத்ஸவங்களில் வைகாசிமாத உத்ஸவம் சிறப்புடையது. இதில் நம்மாழ்வாருக்கே சிறப்பிடம் தரப்படுகிறது.

திருப்புளியாழ்வாரைச் சுற்றியுள்ள மதில் சுவர்களில் 108 திவ்ய தேச பெருமாள்களின் உருவங்களையும் கீழ் வரிசையில் ஆழ்வாராதிகளின் திருவுருவங்களையும் காணலாம்.

நம்மாழ்வார் விக்கிரஹம் மதுரகவியாழ்வார் காலத்திலேயே செய்யப்பட்டதாகும். ஆழ்வாரின் மகிழமலர் மாலையும், கிரீடம் போல் விளங்கும் கொண்டையும் முகத்தில் ஜோதி வடிவமும் ஞான முத்திரையும் பார்ப்பவரைக் கவருகின்றன.

இராமானுஜர் இந்த ஆழ்வாரைக் காண குருகூருக்கு வரும்பொழுது வழியில் ஓர் அர்ச்சகருடைய பெண்ணை குருகூர் இன்னும் எவ்வளவு தூரம் எனக்கேட்டதாகவும் " கூவுதல் வருதல் செய்திடாய் என்று குரைகடல் வண்ணன் தன்னை மேவி நன்கமர்ந்த வியன் புனல் வழுதி நாடன் சடகோபன் " என்று சடகோபன் பாசுரத்தை அப்பெண் கூறி இன்னும் " கூப்பிடு தூரம் " எனக்கூறியிருக்கிருள். உடனே ராமானுஜர் அவளை ஆழ்வாராகவே எண்ணித்தரையில் விழுந்து வணங்கியதாக வரலாறு கூறுகிறது.

இக்கோயிலில் வேறு எங்கும் காணப்படாத ஒரு கல் நாதஸ்வரம் உள்ளது,இந்த இசைக்கருவி கருங்கல்லில் குடையப்பட்டது. ஓரடி நீளமுள்ளது. இந்த ஒப்பற்ற இசைக்கருவி மதுரையை ஆண்ட கிருஷ்ணப்பநாயக்கரால் இக்கோயிலுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குருகைத் திருவீதி எச்சிலையுண்ட நாய் ஒன்று ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டு நீரில் மூழ்கி இறந்ததாம் அந்த உடனே ஒளி வடிவம் கொண்டு பரமபதம் அடைந்ததாக " குருகாமான்மியம் " கூறுகிறது. பிறவிப்பயனை அடைய விரும்பும் ஒவ்வொருவரும் இத்தலம் வந்து தரிசிக்க வேண்டுவது மிக அவசியம்.

மேலும் இவ்வூரிலுள்ள ஏகாந்தலிங்க மூர்த்தியையும் வணங்கிவரலாம். இங்கு ஆதியில் ஒன்பது சிவன் கோயில்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது, தற்சமயம் காந்திஸ்வரம் தான் ஏகாந்தமாக ஏகாந்தலிங்கருடன் இருக்கிறது.

ஆலயந்தொழுவது சாலவும் நன்று !

திருகாந்தீச்சுரம்.

" சித்ரகலாநிதி " N. கிருஷ்ணன்.

ஆழ்வார் திருநகரி அல்லது திருக்குருகூர் ஆதிநாதப் பெருமாள் கோயிலுக்கு நேர் வடக்கே 200 கெஜ தூரத்தில் பொலிவுடன் விளங்குகிறது " காந்தீஸ்வரம் " என்னும் சிவத்தலம்.

கோயில் பெரிய மதிற் சுவர்களால் சூழப்பட்டு கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் சோலைகள் நிறைந்து விளங்குகின்றது. இத்தலத்திற்கு " காந்தை நகர் " என்பது பழைமையான பெயராகும். இத்தலத்து இறைவன் பெயர் " ஏகாந்த லிங்க ஸ்வாமி ". அம்பிகையின் பெயர் " அறம் வளர்த்த நாயகி " என்பதாகும்.

இக்காந்தீசுவரம், ஆழ்வார்திருநகிரி, ஸ்ரீவைகுண்டம் திருவரகுணமங்கை, பெருங்குளம், இரட்டைத் திருப்பதி தென் திருப்பேரை, திருக்கோளூர் ஆகிய தலங்களுக்கு நடுவாக அமைந்துள்ளது.

ஒருசமயம் கருவூர்தேவர் பாண்டிய நாட்டில் பல தலங்களை தரிசித்துக் கொண்டு இத்தலத்துக்கு வந்து இத்தலத்து தீர்த்தமான ' காந்தை தீர்த்தத்தில் ' ஸ்நானம் செய்து, "காந்தை லிங்கப்பெருமானை" வழிபட்டுக் கொண்டிருந்தார். இப்படியிருக்கும் ஒரு நாள் ஸ்வாமியின் ஸன்னதியில் ஒரு ஜ்யோதிஸ்வரூபத்தைக் கண்டார் அவர். ஆச்சர்யத்துடன் ஜ்யோதி ஸ்வரூபத்தை உற்று நோக்கிய போது காந்தை லிங்க மூர்த்திமான் மழுவுடன் காட்சியளித்தார்.

ஆனந்தப் பெருவாரியில் மூழ்கிய கருவூர் தேவர் இறைவனை நோக்கி, " இறைவா ! உன்பெயரும் இந்தத்

தலமும் காந்தீசுரர் கிந்தீச்சுரம் எனத் திகழவேண்டும் என்று பெயர் வழங்கி வரவேண்டும் எனக் கருவூர் தேவர், வேண்டிக்கொண்டார். இறைவன் கருவூர் தேவருக்கு ஜ்யோதி ஸ்வரூபமாகக் காட்சியளித்த காரணத்தால் இத்தலம் காந்தீச்சுரம் எனவும், மூர்த்தி "காந்தை மூர்த்தி" எனவும் அழைக்கப்பட்டது.

காந்தை என்ற முனிவர் கயிலையிலிருந்து இப்பூவுலகம் வந்து பலதீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு பொருநையாற்றங் கரை வந்து இத்தலத்தை யடைந்தார். இத்தலம் அவர் மனதைக் கவர்ந்த காரணத்தால் இத்தலத்திலேயேத் தங்கி பூஜை செய்தார். ஒரு நாள் பூஜை செய்யும் பொழுது ஒளிப்பிழம்பு அவர் முன் தோன்ற அதை இடைவிடாது பூஜை செய்தார். உரு ஏறிய அவ்வொளி பிழம்பு சிவலிங்கமாக மாறியது. சுயம்பிரகாசமான இந்த சிவலிங்கவடிவை பிரதி தினமும் வணங்கிவரும் பொழுது இறைவன் காந்தை முனிவர் முன் தோன்றி வேண்டுவன கேள் என அருளினார்.

முனிவரும் "பெருமானே! எனது பெயரே உனக்கும் இத்தலத்திற்கும் தீர்த்தத்திற்கும் அருள வேண்டுமெனக் கேட்டார். இறைவனும் அவ்விதமே ஆகுக என அருளிமறைந்தார். அதுமுதல் இத்தலத்திற்கு காந்தை நகர் அல்லது காந்தீச்சுரம் என்றும், இறைவனுக்கு காந்திலிங்கஸ்வாமி என்றும் ஏகாந்தலிங்க மூர்த்தி என்றும் தீர்த்தத்திற்கு காந்தை தீர்த்தம் எனவும் பெயர் ஏற்பட்டதாக மற்றொரு வரலாறும் கூறுகிறது.

இந்த காந்தை தீர்த்தத்திற்கு "தரும தீர்த்தம்" எனவும் பெயர். தைப்பூசத் திருநாளில் சுவாமி தீர்த்தம் கொடுத்தருளும் பூசை மண்டபத் துறைக்கு முன்பாக உள்ள நதித்துறை இது.

கோயிலின் அம்மன் சந்நிதிக்கு வெளி வீதியின் தென் கிழக்குப் பக்கம் கருவூர் தேவர் மடம் இருக்கிறது. இதில் மூன்று லிங்க மூர்த்திகள் உள்ளனர். இங்கு போகரிஷி, உண்ணுகீசர், கொங்கணர், என்ற மூன்று ரிஷிகளும் இங்கு சித்தியடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

கோயிலின் வடக்குப்பக்கம் இருப்பது தேசிகமூர்த்தி கோயில். இது திரு ஆவடுதுரை மடத்துக்குப் பெருமை யளிக்கும் கோயில். திரு ஆவடுதுறை மடத்து தம்பிரான் சுவாமிகளில் ஒருவர் தேசிக மூர்த்தி தம்பிரான். முருக பெருமானிடம் பக்தி கொண்டவர். திருசெந்தூர் பெரிய கோபுரத்தைக் கட்டி முடித்துவிட்டு அதற்கு வேலை செய்தவர்களுக்கு விபூதியை கூலியாக வழங்கினார் என்பது ஓர் சிறப்பு. அவர் இங்குள்ள காந்தீச்சுரரை வழிபட்டு முக்தியடைந்தார். திருவாவடுதுறை ஆதீனத்தார் வருடம் தோறும் குருபூசை நடத்தி வருகின்றனர்.

காந்தை லிங்க கடவுளுக்கும். அறம் வளர்த்த நாயகிக்கும் விமானம் கட்டி வைத்தவர் பாண்டிய அரச மரபினர், மதுரையை ஆண்டு வந்த திருமலை நாயக்கர் இக்கோயிலுக்கு திருமலாபுரம் என்ற கிராமத்தை அளித்துள்ளார், இம்மன்னர் காலத்திலிருந்த அழகிய திருச்சிற்றம்பலக் கவிராயர் என்பவர் சுமாமி சந்நிதிமண்டபத்தையும், அம்மன் சந்நிதி முன் மண்டபத்தையும் கட்டிவைத்ததாகக் கூறப்படுகிறது. சுவாமி சந்நிதியின் முன் மண்டபத்தில் இந்த கவிராயரது சிலை ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளது.

1914 ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் கோயில் பாதிக்கப்பட்டு, பிறகு தரும கர்த்தாவாக பொறுப்பேற்ற கோட்டை பிள்ளைமாரால் நன்கு பாதுகாக்கப்பட்டு நல்லபடி விழாக்களெல்லாம் நடைபெற்று வருகிறது.

அருளின் உறைவிடமும், பழமையின் இருப்பிடமுமான இத்தலத்தை அன்பர்கள் வணங்கி பெரும் பேறடைவார்களாக.

PRESS & REGISTRATION OF BOOKS ACT.

Registration of Newspapers (Central) Rules 1956

FORM IV (SEE RULE 8)

Statement about ownership & other particulars about "VAIDHIKA DHARMA VARDHINI"

Place of Publication	...	Kadavasal, Kadavasal (Post), (Via) Sirkali, Tanjore Dt.
Periodicity of its Publication	...	Monthly
Printer's Name	...	A. Venkataraman
Nationality	..	Indian
Address	...	Kadavasal, Kadavasal (Post), (Via) Sirkali, Tanjore Dt.
Publisher's Name	...	A. Venkataraman
Nationality	...	Indian
Address	...	Kadavasal, Kadavasal (Post) (Via) Sirkali, Tanjore Dt.
5 *Editor's Name*	...	Sri V. Somadeva Sarma
Nationality	..	Indian
Address	...	No. 2, Station Road, West Mambalam, Madras-33.
6 *Names & addresses of individuals who own the news paper and partners or shareholders holding more than one percent of the total capital*		Partners: Sri V. Somadeva Sarma, No. 2, Station Road, West Mambalam, Madras- 33. A. Venkataraman, Kadavasal, Kadavasal (Po) (Via) Sirkali, Tanjore Dt.

I, A. VEKATARAMAN, *hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

Dated, 1-3-71 Signature of Publisher: (*Sd.*) A. VENKATARAMAN

திருச்செந்தூர் முருகன் கோயில்.

" சித்ரகலாநிதி " N. கிருஷ்ணன்.

திருச்செந்தூர், திருநெல்வேலியிலிருந்து 58 கி. மீ. (38 மைல்) தொலைவில் கடற்கரையிலுள்ளது. தமிழ் பெருங் கடவுளாகிய " முருகபெருமான் " எழுந்தருளியிருக்கும் சிறந்த தலங்களில் ஒன்று. ஆறுபடை வீடுகளுள் இரண்டாவது படை வீடாக அமைந்துள்ளது. நவகிரக க்ஷேத்ரங்களுள் குரு (பிருஹஸ்பதி) க்ஷேத்திரம் எனக் கருதப்பட்டுள்ளது.

இத்தலத்தை ரயில் மார்க்கமாகவும், பஸ்மார்க்கமாகவும் எளிதில் அடையலாம். இங்கு முருகபெருமானது கோயில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. இத்தலம் தோன்றிய காலம் யாவராலும் வரையறுத்துக் கூறமுடியாத பழைமையுடையது. இப்பொழுது இருக்கும் இலங்கைத் தீவை வடக்கு எல்லையாகக் கொண்டு அதன் தென் புறமிருந்த அழகிய பெரியதோர் நாடாகிய " மஹேந்திரபுரத்தை " ஆண்டு வந்த சூரபத்மனை ஜெயிக்கும் பொருட்டு ஆறுமுகப்பெருமான் தன் சேனைகளுடன் வந்து தங்கிய இடமே, திருசெந்தூர் எனப்பட்டதாக புராணம் கூறுகிறது. இது பல்லாயிர கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்ச்சியாதலால் திருச்செந்தூரின் பழைமை நன்கு விளங்குகிறது. சங்க காலத்தில் இத்தலம் புகழ் பெற்று விளங்கியதாக நன்கு விளங்குகிறது.

அகநானூற்றுப்பாடல் இத்தலத்தை " திருமணி விளக்கின் அலைவாய் " எனக்குறிப்பிடுகிறது. " வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில் ' என்று புறநானூறு கூறுகிறது. நக்கீரர் இத்தலத்தை தமது நூலில் இரண்டாவது படை வீடாகக் கூறுகிறார்.

இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் " சீர் கெழு செந்திலும், செங்கோடும் வெண்குன்றும் ஏரக மும் நீங்கா இறைவன் " எனத் திருச்செந்தூரை முதலா வதாக வைத்துக் கூறுகிருர்.

இத் திருச்செந்தூர் தலமானது ஜெயந்திபுரம் திருச் சீரலைவாய் செந்தில்மாநகர் எனப் பல பெயர்களுடன் விளங்குகிறது. முருகனுக்கு " செந்தன் " எனப் பெய ருண்டு. ஆதலால் அவன் குடிகொண்டுள்ள இடம் "செந்து இல்" என்ருக " செந்தில் " என்று மருவ பிறகு செந்தூர் என வழங்குவதாயிற்று. அலைவந்து மோதும் கடற்கரை யருகே அமைந்துள்ளதால் இத்தலம் திருசீர் 'அலைவாய் எனப் பெயர் பெற்றது. இவ்விடம் முருகபிரான் சூரனை சம்ஹாரம் செய்து அவ்வெற்றியைக் கொண்டாடியதால் இத்தலத்திற்கு ஜெயந்திபுரம் எனப் பெயர் அழைக்கப் படுகிறது.

ரயில் நிலையத்திலிருந்து அரை மைல் தூரம் சென் றதும் வழி நீள ஆலயம் வரை சுமார் 3 பர்லாங் தூரத் திற்கு, ஆண்டவனை வழிபடவரும் பக்தர்கள், வெயில், மழை, இவைகளால் பாதிக்கப்படாமல் இருக்க நீள மான கல்மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்நடை பாதை திருப்பணி சமீபத்தில் 1966ல் தான் பூர்த்தியாகி சிறப்பாக விழாக் கொண்டாடப்பட்டது. கோயிலின் எல்லையை மிதிக்கு மிடத்தில் தூண்டுகை விநாயகர் சந்நிதி உள்ளது. இவர் தனது தம்பி செந்தில்வேலனைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்குத் தூண்டிக் காண்பிக்கும் வகையில் அமைந்திருப்பதால் இவர் தூண்டுகை விநாயகர் எனப் பெயர் பெற்றுள்ளார். இவரை தரிசித்தபின்னரே கோயி லுக்குள் செல்லுவது வழக்கம்.

தெற்கு நோக்கிய பிரதான வாயிலைக் கொண்ட இக்கோயில் மூன்று பிராகாரங்களைக் கொண்டது மேற்கு திசையில் அழகு வாய்ந்த சிற்பங்கள்

கொண்ட 9 நிலைகள் கொண்ட ராஜகோபுரம் காட்சி யளிக்கிறது. இந்த கோபுரத்தை, சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு திருவாவடுதுறை ஆதீனத்து தேசிகமூர்த்தி சுவாமிகள் கட்டத் தொடங்கியதாக வும் அது சமயம் செந்தில் குமரனே நேரில் மனித உருக் கொண்டுவந்து கூலியாட்களுக்கு விபூதியைக் கூலியாகக் கொடுத்து அதனை தூண்டுகை விநாயகர் கோயிலைத் தாண்டிச் சென்ற பின்புதான் பார்க்கவேண்டுமெனக் கூறியதாகவும், கூலியாட்களும் அவ்வண்ணமே செய்ய விபூதியானது பொற்காசுகளாக மாறியதாகக் கூறப் படுகிறது. ஆலயத்திலிருந்து தூண்டுகை விநாயகர் ஆலயம் வரை உள்ள மணல்மேடுப் பகுதி வெகு புனித மான இடமாகக் கருதப்படுகிறது. இக் கருத்தினையே அருணகிரிநாதர் தமது திருப்புகழில் " மஹா புனிதம் தங்கும் செந்தில் " எனப்பாடியுள்ளார்.

இந்த மூன்றாவது பிராகாரம் கோயிலைச்சுற்றி கடற் கரை ஓரமாகவே செல்லுகிறது. இச்சுற்றின் வடக்குப் பகுதியில் கல்லும் மணலும் சேர்ந்து உண்டான ஒரு குன்று உள்ளது. இந்த குன்றை குடைந்து வள்ளிக்கு ஒரு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வள்ளி அம்மையார் வந்து ஒளிந்து கொண்டதாக ஐதிஹ்யம். இப்பிராகாரத்தின் மேற்கு பகுதியில் வசந்த மண்டபமும், வடக்குச்சுற்றில் ஆனந்த விலாஸம் என்று கூறப்படும், ஒரு கல்மண்டபம் உள்ளது. இம்மண்டபத் தில் ஆறுமுக நயினர் ஆண்டுக்கு இருமுறை விழாகாலத் தின் போது வந்து கிழக்கே பார்த்து எழுந்தருளி இலங்கையை நோக்கி அனுக்ரஹம் பண்ணும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். இந்த இடம் தான் ஆறுமுகன் சூரசம்ஹாரம் செய்யும் பொழுது சூரபதுமனை அனுக்ரஹம் செய்து சேவலும் மயிலுமா

ஆட்கொண்ட இடம் எனக்கூறப்படுகிறது. பிறகு கிழக்கு சுற்றையும் செய்து நேராக தெற்கு பிராகாரச்சுற்றுக்கே வந்துவிடலாம். இங்குதான் ஷண்முகவிலாஸம் உள்ளது. இது பலஅழகிய வேலைப்பாடமைந்த கருங்கற் தூண்கள் தாங்கிய மண்டபமாகும். இந்த ஷண்முக விலாஸத்திலிருந்து ஆறுமுகப் பெருமானின திவ்ய தரிசினம் நன்ருகக் கிடைக்கும். இந்த மண்டபத்தில் ஷண்முகப் பெருமானின் ஆறுபடை வீடுகளைக் குறிக்கும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருகில் இருப்பது 'வதனாரம்ப மண்டபம்' இதனையடுத்துள்ளது கடல்தான். இந்த இடம் தான் 'வதனாரம்பத்துறை' என்றும் வதனாரம்ப தீர்த்தம் எனவும் அழைக்கப்படுகிறது. தரிசனத்திற்குச் செல்பவர்கள் முதலில் இந்ததீர்த்தத்தில் நீராடிய பின்னர் ஸ்கந்த புஷ்கரணியில் நீராடி கோயிலுக்குள் செல்வது வழக்கம். இதுவே சாஸ்த்ர முறையும் ஆகும் எனச் சொல்லப்படுகிறது. இந்த வதனாரம்ப தீர்த்தம் மிகவும் மகிமை வாய்ந்ததாகும்.

ஒரு சமயம் ஸ்ரீ ஹயக்ரீவரின் சாபத்தைப் பெற்ற 'கனகசுந்தரி' என்ற பெண் உக்கிர பாண்டியனின் மகளாக குதிரை முகத்துடன் பிறந்ததாகவும், இதனால் வருந்தி தீர்த்த யாத்திரை செய்ததாகவும் அப்படி தீர்த்த யாத்திரை செய்து கொண்டு வரும் பொழுது இந்த வதனாரம்பதீர்த்தத்தில் நீராடியவுடன் சாபம்நீங்கி தனது சுய உருவையடைந்ததாகவும் புராண வரலாறு கூறுகிறது.

இங்கு கடற்கரை யோரத்தில் 24 தீர்த்தங்கள் இருப்பதாகவும் இவை காயத்ரி மந்திரத்தின் 24 அக்ஷரங்களை குறிப்பதாகவும் சொல்லப்படுகிறது.

(அடுத்த இதழில் முடியும்)

திருச்செந்தூர் முருகன் கோயில்

"சித்ரகலாநிதி" N கிருஷ்ணன்.

(சென்ற மாத தொடர்ச்சி)

ஷண்முக விலாச மண்டபத்திற்கு சிறிது தூரத்தில் நாழிக் கிணறு இருக்கிறது. இதனையே கந்த புஷ்கரணி என்று அழைக்கிறார்கள் இந்த கிணறு ஏறக்குறைய 24 அடி ஆழத்திலிருக்கிறது. கிணற்றினுள் இறங்கி போவதற்கு கீழ்புறமும் மேல் ஏறி வருவதற்கு மேல்புறமுமாய் அழகியபடிகள் அமைக்கப்பட்டுள்ளன. வயதானவர்களும் குழந்தைகளும் கூட சிறிதும் பயமின்றி நீராடி வரலாம். இங்கு 14 அடி சதுரத்தில் நீர்நிலை உள்ளது. இது கந்தகமணமாக இருக்கும். இக்கிணற்றின் கீழ்பக்கம் ஒரு திண்ணை கட்டப்பட்டிருக்கிறது. இந்த திண்ணையின் வடக்கு மூலையில் ஒரு அடி சதுரமும், ஆறு அடி ஆழமுமுள்ள ஒரு சிறு கிணறு உள்ளது. இதனையே நாழிக்கிணறு என்று சொல்லுவார்கள். இதிலுள்ள தண்ணீர் நல்ல குடிநீராகும். இதனருகில் உள்ள ஊற்று நீர் உப்பாகவும், கந்தகமணமாகவும் இருக்க அதனருகிலிருக்கும் இந்த சிற்றூறல் குடிநீராக இருப்பது மிகவியக்கத்தக்கதாகும். இந்த சிறிய ஊற்று முருகப்பெருமானின் வேல்பதிந்த இடம் என்றும் அதிலிருந்து ஊறிய நீரே, இவ்வளவு ருசியாக இருக்கிறது எனவும் கூறுவர். இதன் பெருமை என்னவெனில் முருகபெருமானுடன் வந்த படை வீரர்களுக்கு நீர் வேட்கை எடுத்ததாகவும் உடனேமுருகன் அவர்களின் தாகத்தை தணிக்கும் பொருட்டுத் தன் வேலாயுதத்தால் இந்த தீர்த்தத்தை உண்டாக்கினார் என்பதாகவும் கர்ண பரம்பரையாகக் கூறப்படுகின்றது. ஆயிரமாயிரம் மக்கள் வந்து முகந்து முகந்து நீராடியபோதிலும் வற்றாது சிறிது நேரத்திற்குள் மறுபடியும் நிறம்பி விடுகிறது. விதிப்படி இந்த தீர்த்தங்களில் நீராடி விட்டு இனி ஆலயத்துள் செல்லலாம்.

ஷண்முகவிலாச மண்டபத்திலிருந்து படிக்கட்டுகளில் இறங்கி இரண்டாவது பிராகாரத்திற்குச் செல்லலாம். இங்கு சிவிலி மண்டபம் உள்ளது. இந்த பிராகாரத்துத் தூண்களில் சிறந்த வேலைபாடுகள் அமைந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் உள்ளத்தை கவர்வனவாக உள்ளன. இப்பிராகாரத்தின் தென் சுற்றில் நடுவில் ஆறுமுகப்பெருமானின் சந்நிதி வாயில் உள்ளது. எதிரிலுள்ள வடபுறமதிலில் முருகப் பெருமானின் அருள்பெற்ற குமரகுருபர ஸ்வாமிகளின் வரலாறு பலவித நிறங்கள் தீட்டப்பெற்று வண்ண உயிரோவியங்களாக காட்சியளிக்கின்றன. மேலும் இங்கு சதுர பளிங்கு கற்களில் "கந்தர் கலி வெண்பா" மிக அழகாகப் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. இதன் மேற்கு பிராகாரத்தில் ஸித்தி விநாயகரும் சிறுசிறு லிங்கங்களாக சேர்ந்த ஒரு சகஸ்ரலிங்கமூர்த்தியும் கிழக்கே பார்த்து அமைந்துள்ளார். அதற்கடுத்தபடியாக சூரபதுமன் மாமர வடிவம் கொண்டதாகவும், முருக பெருமான் அதன் மேல் வேல் விடுதலும், சூரபத்மன் மார்பின் மேல் வேல் பாய்ந்திருப்பதாகவும் பின்னர் பயங்கரமான சேவல் உருவில் முருகபெருமானை எதிர்த்தலும், பின்னர் அவன் சேவலும் மயிலுமாகக் காட்சியளிக்கும் உருவங்களும் சிற்பகளஞ்சியமாக அமைந்து உள்ளன மேலும் அதே வரிசையில் பஞ்ச பூதலிங்கங்களும் அருணகிரியார் உருவங்களும் அமைந்துள்ளன. இந்தச் சுற்றின் நடுவில் கிழ மதிலை யொட்டி ஒரு பெரிய வல்லபை விநாயகர் உருவம் உள்ளது. இதே பிராகாரத்தின் வடக்குபாகத்தில் வெங்கடாசலபதி சந்தான கோபால கிருஷ்ணன் சந்நிதிகளும் உள்ளன. இவ்வாலயத்தின் வடக்கு பாகமான கந்தமாதன பர்வதத்தை குடைந்து, கஜலக்ஷ்மி, பிரும்மா, பூதேவி, நீளாதேவி, கௌதமர், மார்க்கண்டேயர், கருடன் ஆகியவர்களுடன் பள்ளிக்கொண்ட பெருமாளும் சிற்ப உருவில் அமைக்கப் பட்டிருக்கிறார்கள். வல்லப கணபதியின் சந்நிதிக்கு

நேரே பெரிய கோபுர வாயில் அமைந்துள்ளது. குறைந்தது 20 படிகள் பெரியதாக அமைந்து, அதற்குமேல் பெரிய கோபுர வாயிலும் அமைந்துள்ளது. அதற்கு வெளியில் கல்யாணமண்டபம் விளங்குகிறது. இங்கு தான் ஐப்பசி, பங்குனி மாதங்களில் தெய்வானை வெள்ளியம்மை இவர்களின் கல்யாணங்கள் நடைபெறுகின்றன. இந்த கோபுரம் சுமார் 127 அடி உயரம்.

நாம் இப்பொழுது இரண்டாம் பிராகாரத்தின் தென் பகுதியிலிருந்துமுதல்பிராகாரத்திற்குச் செல்லும்வாயிலையடைகிறோம். இந்த வாயிலை நவ வீரர்களில் வீரகேசரி மூர்த்தியும் வீரமார்த்தாண்டரும் காவல் செய்கிறார்கள். இவர்கள் காவல் புரியும் இடமாகிய மண்டபம் மணியடி என வழங்கப்படும். இதற்கு முன் உள்ளது மயில் மண்டபம். இங்கு இரண்டு மயில்களும் நடுவில் நந்தியும் அமைந்துள்ளது. இதனை யடுத்து தங்க கொடிமரம் உள்ளது. இதனையடுத்த முதற் சுற்றில் செப்பு கொடிமரமும் இருக்கிறது. இப்பிராகாரத்தின் தென்மேற்கு பகுதியில் வள்ளியம்மைக்கும் வடமேற்கு பகுதியில் தெய்வானையம்மைக்கும் தனித் திருகோயில்கள் உள்ளன.

உள்ளே மகா மண்டபத்தை யடைந்தவுடன் காட்சி யளிப்பவர், ஆறுமுக நாயினார். வெள்ளி தெய்வானை யுடன் காட்சியளிக்கிறார். பொற்பணியமைத்த நாற்கால் மண்டபத்தில் கருணை கூர் முகங்களாறுடன் பன்னிரு புஜங்களுடனும் வள்ளி தெய்வயானையுடனும் வயிரம் பதித்த வேலுடனும் ஆறுமுகனார் காட்சியளிப்பது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது. இந்த ஆறுமுகப் பெருமானைப் பற்றிய ஒரு ரஸமான செவிவழி வரலாறு ஒன்று உண்டு.

இந்த ஆறுமுக நயினாரின் செம்புத்திருவுருவம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறப்படுகிறது. கொற்கையை தலை நகராகக் கொண்டு ஆண்ட பாண்டிய மன்னர்கள் காலத்தில் இக்கோவில் நல்ல சிறப்புற்றிருந்ததாகக் கூறப்படுகிறது.

சேர மன்னர்களும் இக் கோயிலுக்கு உரிமையுடைய வர்களாக இருந்திருக்கிறார்கள். பேரரசுகள் சிதைவு பட்டபின், குறுநில மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததாக தெரியவருகிறது. பாஞ்சாலக்குறிச்சி மன்னனை 'கட்டபொம்மு' முதலிய அரசர்களும் இப் பெருமானை தங்கள் குலதெய்வமாகக் கொண்டாடி வந்திருக்கின்றனர்.

16, 17ம் நூற்றாண்டுகளில் குறுநில மன்னர்கள் ஆட்சியில் எங்கும் குழப்பமும் அச்சமும் மிகுந்திருந்த சமயத்தில் உலாந்தாக்காரர்கள் என வழங்கப்படும் டச்சுக்காரர்கள் கூட்டம் கூட்டமாக வந்து துறைமுகங்களைக் கொள்ளையிட்டும், கோயில்களில் புகுந்து மூல பண்டாரங்களையும் திருவுருவங்களையும்கொள்ளையிட்டும் வந்தனர். அவ்வாறு கொள்ளையிட்டு வந்த டச்சுக்காரர் களில் ஒரு கூட்டம் திருச்செந்தூரில் இறங்கி ஊரைக் கொள்ளையிட்டு, கடற்கரைக் கோயிலுள் புகுந்து அங்கு உள்ள பொருள்களையும், கொள்ளையிட்டுக்கொண்டு, பொன்மயமாகக் காட்சியளித்த ஆறுமுகப்பெருமானின் திருவுருவத்தையும், எடுத்து மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டனர். சிறிது தூரம் சென்றதும், பெரும் புயற்காற்றும், மழையும் இடியும் மின்னலும் தோன்றிக் கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது. உடனே அவர்கள் நங்கூரமிட்டனர். புயல் நின்றபாடில்லை. மரக்கலத்தின் தலைவன் இந்த ஆறுமுக நயினரது திருவுருவின் செயலோ என நினைத்து ஆட்களையழைத்து இந்தத் திருவுருவத்தைக் கடலில் எறிந்துவிட உத்திரவிட்டான். ஆட்களும் அவ்விதமே செய்தார்கள். ஆனால் புயல் நின்றபாடில்லை. தலைவனுக்குசந்தேகம்வரவே அவனே கப்பலின் அடித்தட்டில் வந்து பார்க்க அங்கு ஆறுமுகநயினார் திருவுருவம் இருக்கக்கண்டு சினம் கொண்டு முட்டாள்களா, இந்தவுருவத்தைப் போடாமல் வேறு ஏதோ ஒரு உருவத்தைப்போட்டு விட்டீர்களே என்று கடிந்துவிட்டு ஆறுமுகநயினாரைக் கடலில் போட்டு விட்டான். கடலின் கொந்தளிப்பும் நின்றது. கடற் கொள்ளைக்காரர்களும் கப்பலை ஓட்டி சென்றுவிட்டார்கள்.

(தொடரும்.)

திருச்செந்தூர் முருகன் கோயில்

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

(ஆனிமாதத் தொடர்ச்சி)

கொள்ளைக்காரர்கள் கப்பலை ஓட்டிச்சென்ற சமயம் இந்த வட்டாரத்து மன்னராகத் திகழ்ந்த வடமலையப்பபிள்ளையன் என்பவர், கொள்ளைக்காரர்கள் மூலத்தான மூர்த்தியான முருகப்பெருமானை உடைத்து விட்டார்கள் என்ற செய்தியும், ஆறுமுகப்பெருமானையும் தூக்கிச்சென்றுவிட்டார்கள் என்ற செய்தியும் கேட்டு மருண்டு மயங்கிவிட்டார். பின்னர், அவர் நல்ல சிற்பநூல் வல்லுனர்களையழைத்து ஆராய்ந்து பிறகு தாமிரபரணி நதியின் நடுவேயுள்ள ஆச்சிபாறையில் முருகப்பெருமானின் திருவுருவமும், செம்பில் ஆறுமுகப் பெருமானின் திருவுருவமும் அமைக்க ஏற்பாடுசெய்தார். இதற்கு பிறகு திருவுருவமாமலை என்றபெயர் ஏற்பட்டது.

முருகப்பெருமானது திருவுருவமும், ஆறுமுகப் பெருமானது செம்புத் திருவுருவமும் செய்யப்பட்டு, எல்லோரும் திருவுருவங்களை எடுத்துக் கொண்டு திருச்செந்தூருக்குப் புறப்பட்டார்கள். முதல் நாள் வீரராகவபுரத்தில் தங்கிவிட்டு பிறகு பாளையங் கோட்டையில் கொண்டுவந்து வைத்துத் தங்கியிருந்தார்கள். அன்றிரவு பிள்ளையன் பிள்ளையவர்களின் கனவில் ஆறுமுகநயினர் காட்சியளித்துத்தாம் கடலில் ஒரு பாறையின்மீது படிந்து கிடப்பதாகவும், அவ்விடத்தில் கடல் மீது ஒரு எலுமிச்சம்பழமாலை மிதப்பதாகவும் அவ்விடத்தில் ஆகாயத்தில் இரண்டு கருடர்கள் வட்டமிடுவதையும் அடையாளம் காட்டி அங்குவந்து தம்மை எடுத்துக் கோயில் எழுந்தருளச் செய்யுமாறு உத்திரவிட்டார்.

உடனே பிள்ளையன் பிள்ளையவர்களும் மூலத்தான முருகன் திருவுருவத்தைமட்டும் திருச்செந்தூருக்கு எழுந்தருள ஏற்பாடு செய்துவிட்டு செம்புத்திருவுருவை பாளையங்கோட்டையில் வெங்குப்பாச்சா அவர்களின் சிவன் கோயிலில் எழுந்தருளச் செய்துவிட்டு, தன்பரிவாரங்களுடன் திருச்செந்தூர் வந்து கடலில் தாம் கனவில் கண்ட குறித்த அடையாளங்களாகிய எலுமிச்சம்பழ மாலை மிதத்தலையும், இரண்டுகருடர்கள் வட்டமிடுதலையும் கண்டு, கடலில் இறங்கி ஆறுமுகநயினார் திருவுருவுடன் ஒரு நடராஜமூர்த்தியும் கிடைக்கப்பெற்று இரு திருவுருவையும் கரைக்குக் கொண்டுவந்து ஆறுமுகநயினாரைப் பிரதிஷ்டை செய்தார்கள். பிறகு நடராஜர் திருவுருவம் திருநள்ளாற்றிலிருந்து கொண்டுவரப்பட்டதாகத் தெரியவந்தது. மிகசக்தி வாய்ந்த இந்த ஆறுமுகப் பெருமானின் திருவுருவும் காண்பவரின் மனதைக் கவர்ந்து மெய்ம்மறக்கச் செய்யும்.

ஆறுமுகநயினாரின் திருவுருவைக் கடலிலிருந்து எடுத்த நாள் கொல்லம் 829ம் ஆண்டு தைமீ 29உ என்று கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இது ஆங்கிலக் கணக்குப்படி 1653 ம் வருடமாகும்.

ஆறுமுகப்பெருமானை தரிசனம்செய்து கொண்டு, சற்று மேற்கே, கிழக்கு நோக்கி நிற்கும் சூரசம்ஹார பாலசுப்பிரமணிய மூர்த்தியை தரிசிக்கலாம். பால முருகனின் வாயிலை வீரவாகு தேவரும், வீரமஹேந்திர தேவரும் காவல் செய்கின்றனர்.

இங்கு முருகப்பெருமான் பாலரூபமாகவும், சதுர் புஜங்களுடன், நின்ற திருக்கோலமாக, அபயம், வரதம், பூ, ஜெபமாலை இவைகளைக்கொண்டு காட்சியளிக்கிறார். இம்மூர்த்தியின் இடதுபுறத்தில் பஞ்சமுக சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கிறார். இவருக்குக் காலந்தோறும் பூசை செய்யும்போது குருக்கள், தீபாராதனைகள் முருகனுக்குச் செய்தவுடன் வலமாகச் சுற்றிப்போய்

சிவலிங்கமூர்த்திக்கு தீபாராதனை செய்வது வழக்கம். இது முருகப்பெருமானே தனது தந்தையை வழிபட்டதாக ஐதிஹ்யம். இத்தலத்தில் முருகனின் விச்வரூப தரிசனம் மிக விசேஷமானதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீ ஜெயந்தி ஸ்தல புராணத்தில் பிரதிதினமும், ஒவ்வொரு ஜாமத்திலும் இந்த முருகப்பெருமானை பிரம்மா முதலிய தேவர்கள் வந்து பூஜித்துச்செல்வதாகக் கூறப்படுகிறது. அதாவது பகலில் முதல் ஜாமத்தில் பிரம்மாவும், இரண்டாவது ஜாமத்தில் முனீச்வரர்களும், மூன்றுவது ஜாமத்தில் ஸித்த கந்தர்வர்களும், நான்காவது ஜாமத்தில் திக்பாலர்களும் இரவில் முதல் ஜாமத்தில் லக்ஷ்மி முதலிய சக்திகளும், இரண்டாவது ஜாமத்தில் குஹ்யர்களும், பன்னகர்களும், தேவர்களும், மூன்றுவது ஜாமத்தில் ஸ்ரீ வள்ளிதேவஸேனையும், நான்காவது ஜாமத்தில் கங்காதி ஸகல தீர்த்தங்களுடன் ஸ்ரீ மகாவிஷ்ணுவும் பூஜைசெய்வதாகக் கூறப்படுகிறது. ஆதலின் திருச்செந்தூர் முருகப்பெருமானின் விச்வரூப தரிசனம் செய்வதால் நமக்கு ஸகல தீர்த்தங்களில் ஸ்னானம் செய்த பலனும், ஸ்திதி கர்த்தாவாகிய ஸ்ரீமந் நாராயணனை தரிசித்த பலனும், பதினான்கு உலகங்களை யும் தரிசித்த பலனும் ஸித்திக்கின்றதாகக் கூறப்படுகிறது.

இந்த முருகப்பெருமானை, நக்கீரர், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள், குலசை ஞானியார், குமரகுருபரர் முதலிய ஞானிகள் வழிபட்டுள்ளார்கள். ஸ்ரீ ஆதி சங்கரர் திருச்செந்தூர் வந்து ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கம் பாடியது ஒரு சுவமான வரலாறு.

இவ்வளவு பெருமைகளுடன் விளங்கும் திருச்செந்தூர் முருகனின் மகிமை அளவிட முடியாததாகும்.

வடமலையப்பபிள்ளையனைப் போலவே முருகப்பெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டவர் பாஞ்சாலக்குறிச்சியையாண்ட, 18ம் நூற்றாண்டின் இறுதியில் செல்வாக்கு பெற்றிருந்த வீரபாண்டிய கட்டபொம்மனும் ஒருவர். இவர் செந்திலாண்டவனுக்கு நடுப்பகல் பூஜை முடிந்த பின்னரே உணவு உட்கொள்ளுவதைத் தனது வழக்கமாகக் கொண்டிருந்தார் திருச்செந்தூரிலிருந்து பாஞ்சாலக்குறிச்சிவரை 40 மைலுக்கு இடை இடையே மண்டபங்கள் கட்டுவித்து அவற்றில் முரசுகள் முழங்கச்செய்து கடைசி மண்டபத்தில் ஒலி கேட்டதும் உணவு உண்பாராம்.

மேலும் வடமலையப்பன் பிள்ளை கட்டிய மண்டபத்தில் மாசி ஆவணித் திருவிழாவில் ஏழாம்நாள் ஆறுமுகப்பெருமானை எழுந்தருளப்பண்ணுவது பிள்ளையன் பிள்ளையவர்களின் முருகபக்திக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வந்தது. இதனை மாற்றி கட்டபொம்மு அவர்கள் தாம் கட்டிய மண்டபத்தில் அந்த ஏழாம் திருநாளில் செந்திலாண்டவனை எழுந்தருளப்பண்ணச் சொன்னார். (x) கட்டபொம்முவின் அதிகாரத்திற்கஞ்சிய பிள்ளையன் அவர்களும் வாளா இருந்துவிட்டார். ஆனால் ஆறுமுகப்பெருமான் பிள்ளையன் மண்டபத்தினருகில் வந்ததும மேலே செல்ல விடாமல் கன மழை பொழிந்து இடி இடித்தது. மின்னியது. யாவரும் நடுங்கினர். கட்டபொம்முவும் கலக்கம் கொண்டார். உடனே பிள்ளையன் மண்டபத்திலேயே சுவாமியை எழுந்தருள உத்தரவிட்டார். மழையும் நின்றது. முருகனின் மஹிமையும் பிள்ளையன் முருகன் பால் கொண்டுள்ள அன்பும், கட்டபொம்முவுக்கு நன்கு விளங்கியது. பிள்ளையன் பிள்ளையிடம் மன்னிப்பும் வேண்டி நின்றார். (cf KL C17 – not p. 554)

(x) How could he (cf KL C17) be the contemporary of Kattabomma (of the C18)?

(தொடரும்)

திருச்செந்தூர் முருகன் கோயில்

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

(ஆடிமாதத் தொடர்ச்சி)

ஸ்ரீ வைகுண்டம் நகரில் தோன்றிய குமரகுருபரர் சிறுவயதில் ஐந்தாண்டுகளும் ஊமையாயிருந்து திருச்செந்தூர் கொண்டுவரப்பட்டதும் அவர் முருகன் முன்னிலையுற்று சித்தாந்த கருத்துநிரம்பிய வடித்தெடுத்த "கந்தர் கலிவெண்பா" பாடியருளினர்.

இவையெல்லாம் ஒரிரு நூற்றாண்டுகளுக்குள் நடந்தவை. ஆனால் 2000ம் ஆண்டுகளுக்கு முன் காலடி க்ஷேத்திரத்தில் அவதரித்து, தனது 32 வயதுக்குள் சகல சாஸ்திரங்களையும் கற்று திக்விஜயம் செய்து ஷண்மத ஸ்தாபனம் செய்து பாரதத்தின் நான்கு திக்கிலும் மடங்களை ஸ்தாபித்து காஞ்சியில் காமகோடி பீட ஸ்தாபனம் செய்து அத்வைத ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த ஸ்ரீ ஆதி சங்கரபகவத் பாதாளின் வாழ்க்கையில் செந்தில் திருமுருகன் ஆடிய திருவிளையாடல் மிகரஸமானதாகும்.

ஆதிசங்கரர், திக்விஜயம் செய்துகொண்டு வரும் பொழுது அவருடைய வித்யை, தபஸ், யோக மஹிமை இவைகளைக் கண்ட அபிநவ குப்தர் என்னும் வித்வான் அவர்மீது பொறாமைகொண்டு ஆபிசாரப் பிரயோகம் செய்து ஆசார்யாளை ஹிம்சைக்கு உள்ளாக்கினர். ஸ்ரீ சங்கரரும் இதனையுணர்ந்தார். ஆனால் பூலோகத்தில் மனுஷ்ய ரூபமாக அவதாரம் செய்திருப்பதால் மனுஷ்ய ஸ்வபாவத்தைத் தானும நடித்துக்காட்ட எண்ணி ஆபிசாரத்திற்குத் தானும் கட்டுப்பட்டவராக துக்கத்தை அநுபவிக்கத் தலைப்பட்டார்கள்.

ஒருசமயம் கோகர்ண க்ஷேத்திரத்தில் தங்கியிருந்த பொழுது ஆசார்யாளுக்கு உபாதை ஸஹிக்க முடியாமல் ரொம்பவும் கஷ்டப்பட்டார். அன்று இரவு கோகர்ணேஸ்வரர், ஸ்வப்னத்தில் தர்சனம் கொடுத்து ஸ்ரீ ஜெயந்திபுரம் என்ற ஸ்தலத்தில் தனது குமாரன் ஷண்முகன் இருக்கிறான். அங்கு சென்று ஷண்முகனை தர்சனம் செய்தால் ரோகம் அடியோடு நிவர்த்தியாகிவிடும் என்று சொல்லி விபூதி பிரஸாதத்தை ஆசார்யாளுக்குக் கொடுத்தார்.

உடனே ஆசார்யாள் தமது யோக மகிமையால் திருச்செந்தூர் வந்து ஷண்முகனை தர்சனம் செய்தார்கள். ஷண்முகனின் பாதாரவிந்தத்தில் ஆதிசேஷன் பூஜைசெய்து வருவதை ப்ரத்யக்ஷமாகக் கண்டார். உடனே புஜங்க வ்ருத்தத்தாலேயே ஷண்முகனை ஸ்தோத்திரம் செய்து தனது உபாதை நீங்கப்பெற்றார். இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்தை ஒரு ஆவர்த்தி பாராயணம் செய்தால் போதும். தீராத வியாதிகளையும், பூதபிரேத, பிசாச பாதைகளையும் போக்கக்கூடியது.

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த முருகப்பெருமானது பன்னீரிலை விபூதி ப்ரஸாதம் பூசிய மாத்திரத்தில் சகல விதமான பிணிகளும் அகன்று மேலான நல்வாழ்வையடைவார்கள். திருச்செந்தூர் தர்சனம் மக்களின் பிறவிப் பிணியை நீக்க வல்லதாகும். ரிஷிகள் காசியில் ஒரு வருடத்தில் சம்பாதித்த புண்ணியத்தை திருச்செந்தூரில் ஒரேநாளில் அடைவார்கள் என மார்க்கண்டேயர் கூறுகிறார்.

இவ்விதம் பெருமைகள் பல கொண்ட திருச்செந்தூர் நினைத்த மாத்திரத்திலேயே முக்தியடைவதற்குரிய இடமாகத் திகழ்கிறது.

முற்றிற்று.

சங்கர நயினார் கோயில்.

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

இவ்வூர் தென்காசி விருதுநகர் ரயில் பாதையிலுள்ள சங்கரன் கோயில் ரயில் நிலையமாகும் ரயில் நிலயத்திலிருந்து 1½ மைல் நடந்துசென்று கோயிலை யடையலாம்.

இவ்வூரை ஆவுடையம்மன்கோயில் என்றும் தவசுக் கோயில் என்றும், இவ்வூர் மக்கள் கூறுகிறார்கள். இங்கு கோயில் கொண்டுள்ள இறைவியான கோமதியம்மையின் மறுபெயர் ஆவுடையம்மன். இந்த தேவி இத்தலத்தில் தவமிருந்து சிவ விஷ்ணு தத்துவத்தை உணர்ந்தபடியால் இங்கு ஆடி மாதத்தில் 'ஆடித்தவசு' திருவிழா சிறப்பானதாகும். இக்காரணத்தால் இக்கோயில் தவசுக்கோயில் என்றும் கூறப்படுகிறது.

கோயிலின் வாயிலை 125 அடி உயரமுள்ள பெரிய ராஜகோபுரம் அலங்கரிக்கிறது. கோபுரத்தின் முன்பு ஒரு பெரிய மண்டபம் அணி செய்கிறது. கோயில் மூன்று பெரும் பகுதிகளாக உள்ளன. கோயிலின் தென்புறத்தில் சங்கரலிங்கர் சந்நிதியும், வடபுறத்தில் கோமதியம்மையின் திருக்கோயிலும், இரு கோயில்களுக்குமிடையே சங்கர நாரணர் சந்நிதியும் உள்ளது.

கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றதும், நாம் முதலில் சங்கரலிங்கர் சந்நிதியை அடையலாம். இந்த மூர்த்தி புற்றில் தோன்றியதால் வான்மீகநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். முன் காலத்தில் இந்த இடம் முழுவதும் புன்னை வனமாக இருந்ததாகவும் அந்தப் புன்னை வனத்தைக்காவல் புரிந்து வந்த அரிஜன் ஒருவன் அங்கிருந்த ஒரு புற்றை வெட்டினான். அந்த புற்றில் ஒரு பாம்பும், லிங்க மூர்த்தியும் இருக்கக்கண்ட அவன் விரைந்தோடிச் சென்று திருநெல்வேலியை அடுத்த மணலூரில் இருந்து அரசாண்ட உக்கிரபாண்டியனிடம்

சொன்னான். மன்னனும் வந்து பார்த்து லிங்கமூர்த்தியைக் கண்டு மகிழ்ந்து கோயிலும் கட்டினான் எனக் கூறப்படுகிறது. இந்த ஆலயம் அமையக் காரணமாயிருந்த காவல் அரிஜனனின் சிலை மிக அழகான வேலைப்பாடுகளுடன் கோயிலின் உள்ளே உள்ளது. மேலும் ஊரின் தென் கோடியில் அவனுக்கு ஒரு தனிக் கோயிலும் உள்ளது.

இக்கோயில் உக்ரபாண்டியனால் கட்டப்பட்ட விபரம் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இந்த உக்கிர பாண்டியனது திருவுருவும், கோயிலின் பிராகாரத்திலுள்ள தூண் ஒன்றில் பொறிக்கப்பெற்றுள்ளது. இக்கோயில் தேவார காலத்திற்குப் பின்னர் அமைக்கப் பெற்றதே. தமிழ் நாட்டுப் புகழ்பெற்ற சக்திக்கோயில்களுள் இதுவும் ஒன்றாகும். மேலும் பாண்டிய நாட்டுத் தலங்களுள் முக்கியமானதலமாகும்.

இக்கோயிலிலுள்ள சங்கரலிங்கமூர்த்தியைத் தரிசித்துக்கொண்டு வெளியே வரும்பொழுது கோயிலின் வட மேற்கு மூலையில் ஒரு புற்றைக் காணலாம். இந்தப் புற்று பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்தப்புற்று மண்ணால் இத்தலத்திற்கு வருவோரது உடற்பிணியெல்லாம் நீங்குகிறது.

இக்கோயிலில் கோமதியம்மைக்கு மகத்துவம் அதிகம். கோமதியம்மையின் திருவுருவம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த அம்பிகை மிக ஆற்றல் படைத்தவள். இத்தலத்தின் பெருமைக்கு அம்பிகையின் மேன்மையே முக்கிய காரணமாகும். இத்தலத்திலுறையும் தாய் மிக்க சக்தி வாய்ந்தவள். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு திருவாவடுதுறையில் வேலப்ப தேசிகர் என்பவர் பத்தாவது குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்தார். அவர் இங்கு வந்து கோமதியம்மையின் அருளைப்பெற்று குட்டம், குன்மம் முதலிய தீராத நோய்களையும் தீர்த்திருக்கிறார். இன்றும் கொடிய நோய்வாய்ப்பட்டவர்களும் பேய் பிடித்தவர்களும் இந்த அம்பிகையை வழிபட்டு நலம் பெற்று வருகின்றனர்.

வேலப்பதேசிக மூர்த்திகள் அம்பிகையின் திரு முன்பு மந்திரச் சக்கரம் ஒன்றைப் பதித்திருக்கிறார்கள். அந்த சக்கரத்திற்கு கோமதியம்பிகை யருளிய சக்தியினால் ஓடாத பேய் எல்லாம் ஓடுகிறது. தீராத நோயெல்லாம் தீர்ந்து விடுகிறது. அதனாலேயே அம்பிகைக்கு மகத்துவம் அதிகம். நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. மேலும் இந்த கோமதியம்மன் கோயிலில் வைக்கப்பட்டு உள்ள புற்றுமண் மருந்தாக வியாதியஸ்தர்களில் உடம்பில் பூசப்பட்டு நோய் நீங்குவது கண் கண்ட காட்சியாகக் கூறப்படுகிறது. கோமதியம்பிகைக்கு ஆவுடையம்மன் என்ற பெயரும் உண்டு.

கோமதியம்மனின் சந்நிதிக்கெதிரே நாகச்சுனை தீர்த்தம் இருக்கிறது. இதில் நண்டு தவளை மீன் முதலிய நீர் வாழும் பிராணிகள் கிடையாது.

அடுத்து நாம் தரிசிக்கவேண்டியது சங்கர நாராயணர். ஆதியிலேயே தோன்றியது சங்கரலிங்கரும், கோமதியம்மையின் சந்நிதிகளும் தான். இடையில் தோன்றியது தான் இந்த சங்கர நாராயணர் கோயில்.

ஒரு ஸமயம் பார்வதி தேவிக்கு ஒரு சந்தேகம் வந்தது. சிவன் வேறு, நாராயணன் வேறு அல்லது இருவரும் ஒருவரேதானா என்று, இறைவன் உடனே தேவியைக் குறித்துக் கூறிவிடுகிறார். நீ பூவுலகம் சென்று புன்னை வனத்தில் தவமிரு, உண்மை விளங்கும் எனக் கூறிவிடுகிறார். தேவியும் அவ்விதமே அங்குவந்து தவமிருக்கிறாள். அன்னையின் வேண்டுகோளுக்கிறங்கிய சங்கரனார், சங்கர நாராயணர் உருவில் வந்து காட்சி கொடுககிறார். நாராயணனை தமது வாம பாகத்தில் காட்டியருளிய காரணத்தால் இறைவனுக்கு சங்கர நாராயணர் என்ற பெயர் ஏற்பட்டது. இதன் காரணமாகவே இவ்வூரின் பெயர் சங்கர நயினார்கோயில் என்றும், அதுவும் சுருக்கமாகி சங்கரன் கோயில் எனக்குறிப்பிடப் படுகிறது.

சங்கர நாராயணர் திருவுருவில் சிவனும், விஷ்ணுவும் வழிபடப்படுவது இக்கோயிலின் சிறப்புக்குக்

காரணமாகும் சங்கர நாராயணர் மூலவர் கம்பீரமாக காட்சியளிக்கிறார். அதிலும் சங்கரனும், நாரணனுமாக இரண்டுருவும் ஒருருவாய் இணைந்து நிற்கும் கோலம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்த சங்கர நாராயணரைப் பற்றி சுவையான வரலாறு ஒன்று கூறப்படுகிறது. சுமார் 260 ஆண்டுகளுக்குமுன் இந்த சங்கர நாராயணரைத் திருடிக் கொண்டு சென்று உத்திரகோசமங்கையில் அடகுவைத்து விட்டார் ஒரு பட்டர். அது சமயம் ராமநாதபுரம் சேதுபதியவர்கள் இந்தத் திருவுருவைக்கண்டு கோயில் மூர்த்திகளுடன் வைத்து பூசை செய்யும்படி உத்தரவிட்டிருந்தார். மூர்த்திகாணாத விஷயம் கேள்விப் பட்ட திருமலை நாயக்கருக்கு தளவாயாக இருந்த ஆறை அழகப்பமுதலியார் அது சமயம் நாயக்கரது தானாதிபதியாக இருந்த பொன்னம்பலம்பிள்ளையை உத்திரகோசமங்கைக்கு அனுப்பி சங்கர நாராயணரை மீட்டுவரச் செய்தார். பொன்னம்பலம்பிள்ளையும், உத்தரகோசமங்கை வந்து திருவுருவைக்கண்டு பாடினார். இறைவனும் தான் உத்தரகோசமங்கைக்கு எப்படி வந்தார் என்பதை ஒரு பாட்டாகப் பாடினார். இது விஷயம் கேள்விப் பட்ட சேதுபதியவர்கள் உடனே சங்கர நாராயண மூர்த்தியை பொன்னம்பலம்பிள்ளை மூலம் சங்கரன் கோயிலுக்கு அனுப்பிவைத்ததாகக் கூறப்படுகிறது.

இங்கு மூன்று பெரு விழாக்கள் நடைபெறுகின்றன. ஒன்று சித்திரைத் திருவிழா, மற்றொன்று தைமாதக் கடைசி வெள்ளிக்கிழமையில் தெப்பத் திருவிழா, மூன்றாவதாக ஆடி மாதத்தில் நடைபெறும் ஆடித் தவசு என்னும் திருவிழா. இது இக்கோயிலில் நடைபெறும் சிறப்பான திருவிழாவாகும். விழாவின் கடைசி நாளன்று பரமசிவன் சங்கர நாராயணனாகக் காட்சிதரும் வைபவம் கண் கொள்ளாக் காட்சியாகும். இந்த வைபவத்தைக் காண இரண்டு லக்ஷம் ஜனங்களுக்குமேல் கூடுகின்றனர். ''அரியும் சிவனும் ஒன்று என்ற தத்துவத்தை உலகுக்கு உணர்த்த ஏற்பட்ட கோயிலே சங்கரநயினார் கோயிலாகும்.''

குற்றாலம்.

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

குற்றாலம் என்னும் தலம் தென்காசி ரயில் நிலயத்திலிருந்து தென் மேற்காக மூன்று மைலில் உள்ளது.

இங்குள்ள திருக்குற்றாலநாதர் கோயில் மனங்கவர் மலையின் மருங்கிலும், அழகிய அருவிகள் அருகேயும் அமைந்துள்ளது.

இங்குள்ள குளிரருவிகளில் நீராடுவது ஒரு தனி இன்பமாகும். மூளை நோய்க்கு உற்ற மருந்தாகும். இங்குள்ள காடு செண்பகக்காடு எனப்படும். இதில் பல வகைக் காட்டுமரங்களோடு முக்கனிதரும் மரங்களும், நறுமணப்பயன்தரும் வாசனை மரங்களும், சுவையுணவு தரும், தென்னை, மங்குஸ்தான் முதலிய மரங்களும் உள்ளன.

குற்றாலமலை சுமார் ஐயாயிரம் அடி உயரம். இதில் மூன்று சிகரங்கள் உள்ளன. இதனால் இதை திரிகூட மலை எனக்கூறுவர். இந்த மலையில் உடல் வியாதியைப் போக்கும் அருவிகள் பல இருக்கின்றன. அவற்றை "ஸ்பா" என்று கூறுவர்.

மலைமேல் 286 அடி உயரத்திலிருந்து சிற்றாறு குதித்துக் குதித்துவந்து கீழே விழுகிறது. மிக்க உயரத்திலிருக்கிறது தேனருவி. அதற்கு அடுத்தது செண்பகாதேவி அருவி, அதை அடுத்து வடஅருவி. இது 200 அடி உயரத்திலிருந்து விழுகிறது. ஆனால் இது ஒரே நீர் வீழ்ச்சியாக இல்லாமல் இடையிடையே பாறைகளில் வழிந்து வருவதால் வேகம் குறைந்து குளிப்பதற்கு சௌகர்யமாக இருக்கிறது. இங்கே குளிப்பதற்கு வேண்டிய வசதியெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன

குற்றாலம் சென்றவர்கள் முதலில் அருவியாடித் திளைத்து விட்டுத்தான் கோயிலுக்கு வருவது வழக்கம்.

மலையடிவாரத்தில் குற்றாலநாதர்கோயில் உள்ளது. நல்ல வெயில் காலத்தில் இங்கே 86 டிகிரிக்குமேல் உஷ்ணம் இல்லை.

குற்றாலநாதர் கோயில் சங்க வடிவமாக அமைந் திருக்கிறது. திருமாலின் சங்கமே இங்கு கோயிலும் வீதியுமாக அமைந்திருப்பதாக தலபுராணம் கூறுகிறது. கோயிலை ஒரு சிறு கோபுரம் அணிசெய்கிறது. குற்றால நாதர்கோயில் நடுவிலும், வலது புறத்தில் குழல்வாய் மொழியம்மையின் சந்நிதியும் இடது புறத்தில் பராசக்தி சந்நிதியும் அமைந்துள்ளது. இம் மூன்றுக்கும் பொது வாக சங்கவீதி அமைந்துள்ளது.

கருவறையில் திருக்குற்றாலநாதர் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். ஆதியில் இவர் விஷ்ணுவாக இருந்த தாகவும் பிறகு தமிழ் முனிவரான அகத்தியர் சிவபெரு மானது திருமணக்கோலத்தைக்காண விரும்பி இறைவனை வேண்டினார். இறைவனும் குற்றாலத்தில் விஷ்ணு மூர்த்தியாக இருக்கும் தம்மைச் சிவலிங்க வடிவமாக்கி ஆகம விதிப்படி பூஜை செய்தால் அக்கோலத்தைக் காணலாம் எனப்பணித்தார். உடனே அகத்தியர் வைணவக்கோலம் பூண்டு கோயிலில் புகுந்து இறைவனை பூஜித்து "குறுக, குறுக" என்று கூறி விஷ்ணு மூர்த்தியை சிவலிங்கமூர்த்தியாக ஆக்கியதாக வரலாறு கூறுகிறது.

மற்றொரு வரலாறு. அகத்தியர் சிவனடியார்கோலத் தில் கோயிலுக்கு வந்தபோது அவரை அர்ச்சகர்கள் கோயிலுக்குள் அனுமதிக்கவில்லை. மனம் உடைந்த அகத்தியர் திரும்பிச் சிறிது தூரத்திலுள்ள இலஞ்சி என் னும் தலம் சென்று அங்குள்ள முருகனை வணங்கினார்.

முருகப்பெருமானும் அர்ச்சகரை வஞ்சனையால்வெல்ல வழி சொல்லிக் கொடுக்கிறார். அவரை துவாதச நாமம்

தரித்து பரம வைஷ்ணவராக கோயிலுக்குச் செல்லச் சொல்லுகிறார். அர்ச்சகர்களும் ஏமாந்து அகத்தியரை உள்ளே அனுமதித்து விடுகிறார்கள். உள்ளே சென்ற அகத்தியர் தாமே விஷ்ணுவுக்கு பூஜை செய்வதாகக்கூறி மற்றவர்களை வெளியே அனுப்பிவிட்டு நின்ற கோலத்திலிருந்த விஷ்ணு மூர்த்தியின் தலையில் கைவைத்து ஓர் அமுக்கு அமுக்கி "குறுகுக-குறுகுக" என இறைவனை வேண்டியதாகவும், அப்படியே அவரும் குறுகி குற்றால நாதனாக ஆகியதாகவும் கூறப்படுகிறது.

அகத்தியரால் இறைவன் மேல் வைக்கப்பட்ட கரங்களின் ஐந்து விரல்களும் அப்படியே பதிந்து விட்டன. இந்த அடையாளம் இன்றும் உள்ளது.

சம்பந்தர் குற்றாலத்திற்கு எழுந்தருளியபோது வழி முழுவதும் சிவலிங்கங்களாக இருக்கக்கண்டார். எனவே இத்தலத்தை மிதிக்க அஞ்சி அம்பாசமுத்திரம் பாதை பிரியும் இடத்திலிருந்து குற்றால நாதனை பாடிச்சென்றார் எனக் கூறப்படுகிறது. சம்பந்தர் இந்த தலத்து விருக்ஷத்தையும் தனியே பாடியுள்ளார். தலவிருக்ஷம் "குறும்பலா." வேறு எங்குமே தல விருக்ஷத்திற்குப் பாடல் கிடையாது. இத்தலத்திறைவனை அப்பர் சுவாமிகள்.

உற்றார் யாருளரோ உயிர்கொண்டு போகும்போது
குற்றாலத்துறை கூத்தன் அல்லான் நமக்கு
உற்றார் யாருளரோ" எனப்பாடியுள்ளார்

இது போலவே பட்டினத்தாரும் "ஊரார் சுடும் முன்னே குற்றாலத்தானையே கூறு" எனக் கூறியுள்ளார்.

"உற்றாரை யான் வேண்டேன்
ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந் துறையும்
கூத்தா உன் குறை கழற்கே

கற்ருவின் மனம் போலக்
கசிந்துருக வேண்டுவனே''

எனக் கரைந்து உருகியிருக்கிருர் :—

ஆதி சக்தி மூவரைப் பயந்த தலமாதலால் இத்தலத்திற்கு திருகூடம் என்ற பெயரும் உண்டு.

சிவபெருமான் நடனம் ஆடிய ஐந்து சபைகளுள் குற்ருலம் "சித்திர சபையாகும்'' அங்கு நடராஜரும் சிவகாமசுந்தரியும் ஓவிய நிலேயில் எழுந்தருளியிருக்கிருர்கள். ஆதலின் இதற்கு சித்திர சபை எனப்பெயர். இங்கு சக்கரம், ஸ்படிக லிங்கம், யந்திரம் முதலியன அமைக்கப்பட்டிருக்கின்றன. இறைவனின் நடனத்தைக் கண்ட பிரம்மதேவர் அதை ஓவியமாக எழுதியதாக ஐதீகம். சித்திர சபை ஐந்தருவிப்பாதையிலிருக்கிறது.

இத்தலத்தில் பராசக்தி யோகத்தில் இருப்பதால் இதனை யோக பீடம் என்றும், உலகெல்லாம் தோன்றுவதற்கு மூலமாயிருந்ததாக இதற்கு தரணீ பீடம் என்றும் பெயர். பராசக்தி ஹரி, ஹரன், அயன் இம்மூவரையும் பயந்தாள் என்பதற்கு சான்ருக ''தாணு மாலயன'' பூந்தொட்டில் இச் சந்நிதியில் ஆடிக்கொண்டிருக்கிறது. இங்கு நவராத்திரி விழா மிக விசேஷம்.

இத்தலத்தில் நிறைய கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டுக்களிலிருந்து ஜடாவர்மன் சுந்திரபாண்டியன் பலதிருப்பணிகளேச் செய்திருக்கும் விஷயம் தெரிய வருகிறது. சோழர்களாலும் பாண்டியர்களாலும் கட்டப்பட்ட இக்கோயிலே சொக்கம்பட்டி குறுநில மன்னர்களும் விரிவுபடுத்திப் பல திருப்பணிகள் செய்திருக்கிருர்கள்.

மூவர் பாடல் பெற்ற இத்தலம் இறையருளும், இயற்கை எழிலும் கொண்டு விளங்குகிறது. உடலுக்கும் உள்ளத்துக்கும் மருந்தாக விளங்குகிறது.

தென்காசி விஸ்வநாதர் கோயில்.

'' சித்ரகலாநிதி '' N. கிருஷ்ணன்.

தென்காசி ஒரு சிறு நகரம். தென் பிராந்திய ரயில்வேயில் இது ஒரு ஜங்ஷன். இது மதுரையிலிருந்து திருவனந்தபுரத்திற்குச் செல்லும் ரயில் பாதையில் உள்ளது. திருநெல்வேலி வழியாகவும் வரலாம். இது திருக்குற்றாலத்திற்குச் செல்லும் வாயிலாக இருப்பதால் புகழ் பெற்று விளங்குகிறது. ஆதியில் இவ்வூர் சண்பக வனமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

காசி விஸ்வநாதர் கோயில் ஊருக்கு நடுவே அமைந்துள்ளது. மிகப் பெரிய கோயில். நல்ல சுற்று மதில்களுடன் விளங்குகிறது.

வரலாற்றுச் சிறப்பு தென்காசிக்கு உண்டு. தென்காசி பாண்டியர்கள் என்ற அரசர்கள் சிலர் இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு இவ்வூருக்கு நிலைத்த புகழை ஈட்டியிருக்கிறார்கள். இவ்விதம் புகழ் பெற்ற அரசர்களுள் பராக்கிரமபாண்டியன் என்பவன் ஒருவன். மிக்க தெய்வ பக்தி உள்ளவன். அடியார்களை உபசரிப்பவன். ஒரு சமயம் காசி விஸ்வநாதரின் மகிமையைப் பற்றிக் கேட்டு அவரை தரிசிக்க எண்ணினான். சிவபெருமான் அவன் கனவில் தோன்றி ''நீ, இங்கேயே ஒரு கோயில் கட்டி விடு, அங்கு நான் எழுந்தருளி உனக்கு காக்ஷி தருகிறோம்'' என்று அருளினார். உடனே பாண்டியன் ஒரு அழகான கோயிலைக் கட்டினான் அங்கு விஸ்வநாதபெருமானையும் பிரதிஷ்டை செய்து ஊருக்கு தென்காசி எனப்பெயருமிட்டான். இதன் காரணமாகவே இவனுக்கு '' காசி கண்ட பராக்கிரம பாண்டியன்'' எனப் பெயர் ஏற்பட்டது. இது செவி வழிவந்த வரலாறு.

அவன் கோயில் கட்டியதோடு நில்லாமல் வாவியைளா வும், கோபுரம் ஒன்று கட்ட எண்ணி அஸ்திவாரமும் போட்டான். ஆனால் கோபுரவேலை பூர்த்தியாவதற்குள் இறந்து விட்டான். பின்னால் அவனது தம்பி குலசேகர பாண்டியன் கோபுரத்தைப் பூர்த்தி செய்தான் எனக் கூறப்படுகிறது. ஒன்பது நிலைகளுடன் வெகு அழகாக இருந்தது. கி. பி. 1445-ல் இக்கோயில் கட்டி முடிக்கப் பெற்றதாகக் கூறப்படுகிறது. 1860-ல் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் இக் கோபுரம் பிளவுபட்டதாகக் கூறப்படு கிறது. இன்றும் இக் கோபுரம் பிளவுபட்ட நிலையில் தானிருக்கிறது. இதை மீண்டும் அழகுற அமைக்க வேண்டும் என்ற எண்ணம் பொது மக்களிடம் நிலவி வருகிறது.

கோபுர வாயிலைத்தாண்டி உள்ளே சென்றால், முகப்பு மண்டபம் வருகிறது. இது ஒரு அரிய கலைக் களஞ்சிய மாகும். இங்குள்ள எட்டு தூண்களில் எட்டு அற்புத மான சிற்பங்கள் இருக்கின்றன. அகோர வீரபத்திரர், மன்மதன், வேணுகோபாலன் காளி ஆகிய நால்வரும் தென்புறத் தூண் வரிசையிலும், வீரபத்திரர், ரதி, மா- தாண்டவர், ஊர்த்துவதாண்டவர் ஆகிய நான்கு சிற்பங் கள் வடக்கு வரிசையிலும் இருக்கின்றன. இந்த சிற்பங் கள் ஒவ்வொன்றும் ஓர் அற்புத சிருஷ்டி எனப்புகழும்படி ஜீவிய களையோடு இருக்கின்றன. ரதி பூங்கணையை எய்ய ஆயத்தமாக இருக்கிறாள். அவள் லகானைப் பிடித்து அன்னத்தை ஓட்டும் லாகவம் மிக அற்புதமானது. ஊர்த்துவதாண்டவமூர்த்தியின் சிற்பமும் வெட்கித் தலை குனிந்து நிற்கும் காளியின் சிற்பமும் வர்ணிப்புக்கு எட் டாதவையாகும். வேணுகோபாலனின் சிற்பத்தைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தால் போதும். கண்ணனின் வேணுகானம் ஒலிப்பது போன்ற ஒரு பிரமை நமக்கு ஏற்படுகிறது. அகோரவீரபத்திரர், வீர பத்திரர் சிலைகள் ரௌத்திரத்தின் உச்சி எல்லையாய்

அமைந்திருக்கின்றன. இவைகள் கல்லில் செதுக்கிய சிற்பங்களா அல்லது மெழுகில் செய்த பதுமைகளா என ஐயுறுமாறு இருக்கின்றன. இது தவிர சுவாமி சந்நிதியை நோக்கி உள்ள இரண்டு தூண்களில் இரண்டு பெண் வடிவங்கள் உள்ளன. ஒரு பெண் நாணிக்குலுங்கி சர்வ ஆபரண பூஷிதையாய் நாயகன் வரவை நோக்கி நிற்கிறாள். மற்றும் ஒரு பெண் பொட்டிட்டுக் கொண்டிருக்கும் நிலை அழகாக இருக்கிறது. கூந்தல் வாரிவிடப்பட்டு நுனியில் முடிச்சு இட்டிருக்கும் அழகு சிற்பக்கலையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

துவஜஸ்தம்ப மண்டபத்தில் தலவிருக்ஷமாகிய சண்பகமரம், பலாமரம் ஆகிய இரண்டும் உள்ளன. சிவபெருமான் இங்கு சண்பக மரத்தின் கீழ் கண்டமையால் சண்பக மரம் தல விருக்ஷமாக கூறப்படுகிறது. இதனையே தல புராணம், "சண்பக மலர்க்கீழ் மேவும் சிவக்குறி" எனக் கூறுகிறது. இங்குள்ள பலாமரம் சிவலிங்க வடிவமாக காய் காய்ப்பதாகக் கூறப்படுகிறது. இதுவும் தல விருக்ஷமாகக் கருதப்படுகிறது. தல புராணத்திலும் பலாலிங்கம் காய்க்கும் ஊர் எனக் கூறப்படுகிறது.

மகாமண்டபத்தில் அனுக்ஞைப் பிள்ளையாரும் உற்சவ விக்கிரகங்களும் உள்ளன. இவற்றையெல்லாம் தரிசித்துக்கொண்டு, மணிமண்டபத்தையும், அர்த்த மண்டபத்தையும் அடுத்து கருவறையில் விஸ்வநாதர் காக்ஷியளிக்கிறார். இவருடன் பிரியாவிடையாளும் இருக்கிறாள். தலபுராணம் இவரைப் பல பெயர்களில் அழைக்கின்றது. "விசுவன், விசுவநாதன், விசுவேசன், உலகநாதன், பசுபதி, சிவன், மயோன், பராபரன், முக்கட்பெம்மான், சிசுவரம் தருவோன், சிவை மணாளன், நீலகண்டன், அநாதி, தென்காசிநாதன், எனப் பலப்பெயர்கள். இந்த விஸ்வநாதனுக்கு தென்காசிநாதன் என்று

எப்படிப் பெயர் வந்தது என்று முன்னமேயே கூறிவிட்டோம். ஆனால் தலபுராணம் ரஸமான ஒரு கதை சொல்கிறது. அதாவது இவருக்கு "சிசுவரம் தருவோன்" என ஒரு பெயரும் உண்டு. ஆதியில் செண்பக வனமாக இருந்தது இந்த இடம். மாறன் மங்கலத்திலிருந்து அரசாண்ட குலசேகர பாண்டியன் தனக்கு மகப்பேறு வேண்டும் என்று முதன்முதலில் இந்த விஸ்வநாதரை வேண்ட, இறைவனும் மன்னனுக்குப் பிள்ளைவரம் அளித்தார். அவனே உலகநாதன். அவனும் தனக்கு மகப்பேறு வேண்டி விஸ்வநாதரை வேண்ட உலகம்மையே அவனுக்கு பெண்மகவாகப்பிறந்து குழல்வாய் மொழியம்மை என்ற பெயருடன் விளங்கினாள். இறைவனே வந்து இந்த குழல்வாய் மொழியை ஐப்பசி உத்திரத்தில் மணந்தார். அப்படி இறைவன் திருமணம் செய்துகொண்ட இடந்தான் குலசேகரநாத ஸ்வாமி கோயில். இக்கோயில் தென்காசியிலிருந்து 6 பர்லாங் தூரத்திலிருக்கிறது. உலகநாத பாண்டியனின் வமிசத்தினர். மாறன் மங்கலத்திலிருந்து ஆண்டுகொண்டிருந்திருக்கிறார்கள். அவர்களில் விந்தன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவனுடைய பேரன் செண்பக பாண்டியன் என்பவன். அவனையே அரிகேசரி, செண்பகமாறன், பராக்கிரம பாண்டியன் என்ற பல பெயர்களில் அழைக்கிறார்கள். இவனே விசுவநாதர் கோயிலைக்கட்டி நகரத்தையும் அமைத்து, தென்காசி எனப் பெயரிட்டவன்.

இவன் முருகன் அருளால் ஒரு குளிகை பெற்றான். அதன் உதவியால் தனது மனைவியுடன் காசிக்குச் சென்றான். வரும்வழியில் ஓர் அசந்தர்ப்பத்தால் மதுரையில் தங்க நேரிட்டது. அப்பொழுது சொக்கநாதர் அவன் கனவில் தோன்றி "ஊர் பக்கத்தில் காசி காண்" என அருளிச்செய்தார். பிறகு அரசன் செண்பகவனம் வந்து

அங்கிருந்த ஒரு தவமுனியைக் கண்டு காசி காட்டவேண்டினன். பிறகு இறைவன் அவன் கனவில் தோன்றி தாம் மிக அருகில் இருப்பதாகவும், எறும்பு செல்லும் சாரைப் பாதையை பின்பற்றிச் செல்லும்படியும் பணித்தார். அவ்விதமே அரசன் மறுநாட் காலையில் எழுந்ததும் சாரை சாரையாக எறும்புகள் செல்வதைக் கண்டான். அதன் வழியே சென்றான். செண்பக வனத்தில் சித்திரை ஆற்றின் கரைக்குக் கொண்டுவிட்டது. அதன் கரையில் நந்தியைக் கண்டான். பிறகு மடுவிலே சிவலிங்க பெருமானைக் கண்டான். பிறகு செண்பகவனத்தை சீர்படுத்தி நகரத்தை ஸ்தாபித்தான். தென்காசி எனப் பெயருமிட்டான். விஸ்வநாதருக்கு அங்கு கோயிலெடுத்தான். இறைவனை ப்ரதிஷ்டைசெய்து வழிபட்டான் என்பது புராண வரலாறு கூறுகிறது.

சிவபெருமானது கோயிலுக்குத் தென்புரம் அம்பிகையின் சந்நிதி உள்ளது பெயர் உலகம்மை. இறைவன் இறைவி கோயில்களுக்கிடையே ஆதியில் விண்ணகரப் பெருமாள் கோயில் இருந்ததாகவும், இது விஜயநகர மன்னர் அச்சுதராயரால் கட்டபட்டதாகவும் கூறப்படுகிறது. பிறகு இந்தப் பெருமாள் ஆற்றங்கரைப் பெருமாள் கோயிலுக்கு எடுத்துச்செல்லபட்டதாகக் கூறப்படுகிறது. கல்வெட்டுக்கள் இக்கோயில் குலசேகர தேவர் காலத்தில் கட்டப்பட்டதாகக் கூறுகின்றன.

சுற்றுப்பிராகாரத்தில் ஆறுமுகக்கணபதி ஆகியோர் இருக்கின்றனர்.

'நிழல் நல்கும் பவளமல்லிகை' என்னும் தல புராணப்பாடல் அம்பிகை பவளமல்லிகைக் கீழ் அமர்ந்தனள் என்று கூறுகிறது.

இக்கோயிலைச் சேர்ந்த தீர்த்தங்கள் எழு. அவைகளும் முக்கியமானவை. ஆனந்த தீர்த்தம் அம்பாள் சன்னிதிக்கு முன்பு உள்ளது. காசி தீர்த்தம் இருக்கிறது. சித்திரை யாற்றில் முக்கூடல் துரை இருக்கிறது.

சாபத்தால் யாழிசையும், கண்டமும் இழந்த நாரத முனிவர் தென்காசி தீர்த்தத்தில் மூழ்கி சாபவிமோசனம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இக்கோயிலில் எண்ணிறந்த கல்வெட்டுகள் உள்ளன. அவையாவும் பாட்டுகளாகவே உள்ளன. கல்வெட்டில் பெருமான் " தென்காசி உடையார் விசுவநாதர் " என்றும் அம்பிகையின் பெயர் " உலகமுழுதும் உடைய நாச்சியார் " என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

மாசி மாதத்தில் தேர்திருவிழா வெகுசிறப்பாக நடைபெறுகிறது.

இத்தலத்தைச் சுற்றி பலகோயில்கள் உள்ளன. வரகுணேசுவரர் கோயில், குலசேகரநாதர் கோயில், விண்ணகரப்பெருமாள் கோயில், நவநீதகிருஷ்ணன்கோயில் பொருந்தி நின்ற பெருமாள்கோயில், சங்கர நயினார் கோயில், பழனி யாண்டவர் கோயில், செண்பக பாண்டியர் அமைத்த எட்டு விநாயகர் கோயில்களும் உள்ளன, காசி விசுவநாதர் கோயிலுக்கும் பாழ்பட்ட நிலையிலிருக்கும் கிருஷ்ணன் கோயிலுக்கும் சுரங்கப்பாதை இருப்பதாகக் கூறப்படுகிறது. தென்காசி மக்களிடம் ஓர் உன்னதமான நம்பிக்கை நிலவி வருகிறது. அதாவது " கிருஷ்ணன் கோயில் கீரையை சமைத்து சாப்பிட்டு காசி விசுவநாதர் கோயில் கோபுரவாயில் காற்றையும் நாள்தோறும் அனுபவித்தால் உடல்நலத்திற்கு ஒரு குறைவும் ஏற்படாது என்பது. ஒவ்வொருவரும் இத்தலம் வந்து தென்காசி விசுவநாதரையும் சுற்றுக் கோயில்களையும் அவசியம் தர்சிக்கவேண்டும்.

காசியில் இறந்தவர்கள் முக்தி பெறுவர் என்பது வழக்கு. ஆனால் தென்காசியில் இருந்தார், இறந்தார், பிறந்தார் அனைவருக்குமே முக்தி என்று தலபுராணம் கூறுகின்றது.

அம்மா! யசோதாய்! பாலைக் கறந்தேன்; காய்ச்சுவதற்கு அடுப்பில் ஏற்றினேன். நெருப்பு அணைந்து கிடந்தது. பக்கத்து வீட்டுக்குச் சென்று தணல் கொண்டு வர லாமெனக் கிளம்பினேன். உள்ளூர பயம் தான்! எங்கே உன் பிள்ளை வந்து விடுவானோ! எனக்கு அழகாக ஒரு பெண் பிறந்திருக்கிறதே! அதைக் காவல் வைத்துவிட்டு, "க்ருஷ்ணன் வந்து குடித்துவிடப் போகிறான்! பார்த்துக் கொள் என்று எச்சரித்து விட்டுப் போனேன். சீக்கிரம் திரும்ப வேண்டுமென்ற வேகம் தான்! ஆனால், பக்கத்து வீட்டுக்காரர்கள் போனால் விடுவார்களா? "உங்கள் வீட்டில் என்ன சமையல்? மாடு கன்று போட்டதா? நாட்டுப் பெண் அடங்கி இருக்கிறாளா? உன் மாமியார் படுத்தாம லிருக்கிறாளா? அப்பப்பா எத்தனை வம்பு? பேசிவிட்டு, நெருப்போடு திரும்புகிறேன். வந்தால் நான் கண்ட காட்சி, கையிலிருக்கும் நெருப்பு வயிற்றுக்குள் வந்த மாதிரி ஆயிற்று :—

> "சாலக்கிராம முடைய நம்பி
> சாய்த்துப்பருகிட்டுப் போந்து நின்றான்"—

பச்சைப்பாலை உன் பிள்ளை தன் இச்சைப்படி சாய்த்துக் குடித்திருக்கிறான்! என் பெண்ணைக் கேட்டால், அந்தச் சமத்துப் பெண் சொல்கிறது :— அம்மா! நீதான் சொன்னாயே! க்ருஷ்ணன் வந்து குடிக்கப் போகிறான், பார்த்துக்கொள் என்று, அதே பிரகாரம் க்ருஷ்ணன் வந்தான்; பானையைச் சாய்த்தான்! வெகு லாகவமாகச் சாப்பிட்டான்! நான் பார்த்துக் கொண்டேயிருந்தேன்! எத்தனை அழகாயிருந்தது தெரியுமோ? நீ இல்லாது போய் விட்டாயே."—

(தொடரும்)

இலஞ்சி.

" சித்ரகலாநிதி " N. கிருஷ்ணன்.

இலஞ்சி திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசியிலிருந்து மேற்கே சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ளது. இது மிக செழிப்பான ஊர். ஒரு இடத்தின் செழிப்புக்குக் காரணம் அவ்விடத்தின் நீர்நிலையாகும். இலஞ்சி என்னும் சொல்லுக்கு நீர்நிலை எனப்பொருள் கூறப்படுவதால் இந்த ஊருக்கு இலஞ்சி எனப்பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. இலஞ்சி என்னும் சொல்லுக்கு அருள், சொல், செல்வம் எனவும் பொருள்படும். பக்தர்களுக்கு எல்லாவகையான செல்வங்களையும் அருளுகின்ற சொல் செல்வனை ஆறுமுகனை "உமையாள் பயந்த இலஞ்சியமே" என அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் அழைக்கிறார். ஆதலின் எல்லா அருட்செல்வங்களையும் அருளுகின்ற செல்வனை ஆறுமுகப்பெருமான் கோயில்கொண்டிருப்பதால் இந் நகருக்கு இலஞ்சி எனப்பெயர் வந்ததாகக் கூறலாம்.

"இலஞ்சியில் வந்த இலஞ்சிய மென்று
இலஞ்சியமர்ந்த —பெருமானே"

என அருணகிரிநாதர் பாடியுள்ளார். மேலும் "சோலை வளைந்து சாலிவளைந்து சூழும் இலஞ்சி" எனக்கூறும் அருணகிரியார் வாக்குக்கு ஏற்ப, முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள, இலஞ்சி அழகிய சோலைகளாலும், வயல்களாலும் சூழப்பட்டு செழிப்புடன் விளங்குகிறது.

எழில் மிக்க இலஞ்சிக் குமரனின் ஆலயம், சித்ரா நதிக்கரையில் உள்ளது. குற்றால மலையிலிருந்து வழிந்தோடும் சிற்றாறும் ஐந்தருவியாறும் இக்குமரன் கோயிலை வலம் வந்து ஓடுகின்றன. கி. பி. 1408-ம் ஆண்டில் மாரவர்மன் குலசேகரபாண்டியனால் இக்கோயில் திருப்பணி செய்யப்பெற்றது எனக் கூறப்படுகிறது.

ஆலயம் இரண்டு பிராகாரங்களைக் கொண்டது. இரண்டாவது பிராகாரத்தில் ஸ்தலவிருக்ஷமான மகிழ மரம்உள்ளது. மகிழமரத்துக்கு இலஞ்சி என ஒரு பெயர் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதனாலேயே இத்தலம் இலஞ்சி எனப்படுகிறது எனச் சிலர் கூறுகிறார்கள்.

உட்பிராகாரத்தில் கிழக்குப் பகுதியில் சூரிய பகவானும், தெற்குப் பகுதியில் ஸப்த மாதர்கள், தக்ஷிணாமூர்த்தி, ஜலஸஹஸ்ரேஸ்வரர், நாயன்மார்கள் முதலியவர்களும், மேற்குப் பிராகாரத்தில், விநாயகர், முருகன், வேணுகோபாலன், காசிவிஸ்வநாதர், விசாலாக்ஷி, குற்றால நாதர், அகஸ்தியர், ஐயனார், முதலியவர்களும், வடக்குப் பிராகாரத்தில், சனீஸ்வரர், சண்டேஸ்வரர், பைரவர் முதலியவர்களும் சந்நிதி கொண்டுள்ளனர்.

கர்ப்பக் கிருஹத்தில் இரண்டு சந்நிதிகள் உள்ளன. ஒரு சந்நிதியில் குமரன் வள்ளி தெய்வசேனை தேவியர்களுடன் காட்சியளிக்கிறார். மற்றொரு சந்நிதியில் ஈசுவரனும், பராசக்தியும் காட்சியளிக்கின்றனர். இறைவனுக்கு இருவாலுக நாயகன் என்றும் தேவிக்கு குழல் வாய்மொழி எனவும் பெயர். இந்த தேவிக்கே இருவாலுக ஈசர்க்கினியாள் எனப் பெயரும் உண்டு. இத்தலத்து சிவபெருமானை அகத்திய முனிவர், வாலுகம் எனப்படும் வெண்மணலால் சிவலிங்கம் பிடித்து வழிபட்டதால் இறைவனுக்கு, இருவாலுக நாயகர் எனப் பெயர் வந்ததாக குற்றால ஸ்தல புராணம் கூறுகிறது. ஆதலின் இங்கு வெண்மணலால் ஆகியசிவலிங்க மூர்த்திக்கு கவசம் சாத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இத் தலத்திலுள்ள குமரப்பெருமானுக்கு வரதாரசக் குமரன் எனப் பெயர். இங்கு முருகன், காசியபர், கபிலர், துர்வாஸர் முதலிய முனிவர்களுக்கு ஸமரச நிலையை உணர்த்தியதாகக் கூறப்படுகிறது. அதாவது காசியபர், கபிலர், துர்வாஸர் முதலிய முனிவர்களிடையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளில் யார் ஆதி பரம்பொருள்என்ற வாக்குவாதம் எழுந்தது, முடிவுகாண

முடியாத சமயத்தில் முருகப்பெருமானைத் துதித்தனர். முருகனும் தாமே ஆதிபரம்பொருள் என்னும் மும் மூர்த்திகளாகவும் இருந்து செயல்படுவதாகவும் உணர்த்தி, பிறகு தெய்வங்களிலும். மதத்திலும் பேதம் காட்டக்கூடாதுஎன்று ஸமரசமனப்பான்மையை உணர்த்தினர் எனப்புராண வரலாறு கூறுகிறது. இதை மக்களுக்கு விளக்கி உரைக்கும் வகையில், இந்த ஸ்தலத்தில் ஐப்பசிமாதம் நடைபெறும், கந்தர்சஷ்டி விழாவில் முருகன் ஒவ்வொரு நாளும் முறையே பிரம்மா விஷ்ணு ருத்தரன், மஹேஸ்வரன், சதாசிவன் முதலிய மூர்த்திகளின் திருக்கோலங்களில் தரிசனம்தந்து முறையே, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் ஆகிய பஞ்ச க்ருத்தியங்களையும் குமரனே அதிதேவதைகளாக இருந்து நடத்துவதாக உணர்த்தும் வகையில் கொண்டாடப்படுகிறது.

மேலும் சித்திரையில் ஒரு பெருவிழாவும் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. இந்த விழாக்களில் முருகன் தன் தேவியருடன், குற்றாலத்திற்குச் சென்று வருகிறார். பவுன், பட்டாடைகள் முதலியவற்றைக் குற்றாலநாதர் தனது மகனுக்கு வழங்குவதும் பிறகு குமரன் அவற்றைப் பெற்றுக்கொண்டு, தந்தையை வலம் வந்து அவற்றை ஏற்றுக்கொள்ளும் விசேஷமும் விமரிசையாக நடத்தப்படுகிறது.

இலஞ்சி குமரன் கோயிலில் அனேக திருமணங்கள் இறைவன் திருமுன் நடைபெறுகின்றன. இந்த இடம் திருமணம் நடத்த மிக வசதியான இடம். மணமக்களை மட்டும் அழைத்துச் சென்றால் போதும், மற்றவையெல்லாம், சாப்பாடு, மேளம், மாலை யாவும் கோயிலில் தயாராகக் கிடைக்கும்.

இயற்கையின் எழிலோடு காட்சியளிக்கும் இலஞ்சி குமரன்கோயில் தென்காசி செல்லும் பக்தர்கள் யாவரும் மறக்காமல் தரிசிக்கவேண்டிய முருகனுடைய முக்கியத் தலமாகும்.

★ திருநீர்மலை. ★

" சித்ரகலாநிதி " N. கிருஷ்ணன்.

திருநீர்மலை என்னும் திவ்யக்ஷேத்திரம் பல்லாவரத்திலிருந்து மூன்றுமைல் தூரத்தில் அமைந்துள்ளது. இந்த க்ஷேத்திரம் 108 திவ்யக்ஷேத்திரங்களில் ஒன்ருகும். பல்லாவரத்திலிருந்து திருநீர்மலைக்குச் செல்லும் சாலையிலிருந்தே மலையும் அதன் மீது அமைந்துள்ள ஆலயமும் வெகு அழகாகக் காட்சியளிக்கின்றன.

ஊரை நெருங்கியதும். குளமும், கோபுரமும். த்வஜஸ்தம்பமும், நம் கண்முன் அழகாகக் காட்சியளிக்கின்றன. மலையும் ஆலயமும் மிகப்புராதனமானவை. ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்றது. கோயிலுக்குப் பின் புறத்தில் மணிகர்ணிகா என்னும் புஷ்கரணி காட்சியளிக்கிறது. இத்தாமரைத் தடாகமும் நீராழிமண்டபமும் ரம்மியமான காட்சியாகும்.

இந்த திவ்யதேசம், ஸ்ரீரங்கம். திருவேங்கடம், திருக்கோட்டியூர் போல் மிகப்பழமையானது என்பதை பூதத்தாழ்வார்:—

" பயின்ற தரங்கம் திருக்கோட்டி—பன்னுள்
பயின்றதுவும் வேங்கடமே—பன்னுள் பயின்ற
தணி திகழும் சோலையணி நீர்மலையே
மணிதிகழும் வண்தடக்கைமால் "

என்று வருணிக்கிருர். மேலும் இத்திரு நீர்மலையைச் சுற்றி சோலை அணிசெய்திருந்ததாகக் கூறுகிருர். நாம் இன்றும் இந்த ஊர் சோலைகள் சூழ இயற்கை வனப்புடன் காட்சியளிப்பதைக் காணலாம்.

மலைமீதுள்ள கோயிலில் ஸ்ரீரங்கநாதர் தெற்குநோக்கி சயனத்திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிருர். பக்கத்திலேயே கிழக்கு நோக்கி தாயார் சன்னதி கொண்டுள்ளார். தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ஸ்ரீரங்கநாதர்

பிரத்தியக்ஷம் எனக் கூறப்படுகிறது. இங்கு அரங்கனின் சயனகோலத்தை "மாணிக்கசயனம்" என்பர்.

இந்த திவ்யதேசத்தில் எம்பெருமான் நான்கு திருக் கோலங்களில் சேவை சாதிக்கிறார். நின்று, இருந்து, கிடந்து, நடந்தும் காட்சியளிக்கிறான் எம்பெருமான், இதையே திருமங்கை மன்னனும்

"நின்றான், இருந்தான், கிடந்தான்
நடந்தாற்கிடம் மாமலையாவது நீர்மலையே"

என வர்ணிக்கிறார். மலையடிவாரத்தில் நீர்வண்ணப்பெரு மாளாக நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இக் கோலத்தைக் கண்டு களித்த திருமங்கையாழ்வார்

"நீரார் பேரான் நெடுமாலவனுக்கிடம்
மாமலையாவது நீர்மலையே"

என்று பாடுகிறார். இந்த எம்பெருமான் பொருந்திய நீரின் பெயரை உடையவன் எனக் கூறுகிறார்.

இந்த நீர்வண்ணப் பெருமானிடத்தில் தன் மனதையே இழந்தவர் ஆழ்வார். திருமங்கையாழ்வார் இத்தலத்திற்கு எழுந்தருளிய போது ஏரியின் நீர்பிடிப்பால் இந்த மலையைச் சுற்றிலும் நீர் நிறைந்திருந் ததால் ஆழ்வாரால் பெருமாளைச் சென்று தரிசிக்க முடிய வில்லையாம். நீர்வடியுமட்டும் காத்திருந்து தரிசித்துச் சென்றார் எனக் கூறப்படுகிறது.

மேலும் ஆழ்வார் "நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன்" என்று நாயகி பாவத்தில் தன்னையே பகவா னிடம் அர்ப்பணித்துக் கொண்டு, காதலியின் நிறையிழந்த நிலைமையை ஆழ்வார் வர்ணிப்பதுபோல், தனது மனோ நிலையை அப்படியே கூறிவிடுகிறார்.

தாயார் பெயர் அணிமாமலர்மங்கை எனப்படும். இதனை ஆழ்வார் "அன்றாயர் குலக்கொடியோடும், அணி மாமலர் மங்கையோடும்" அன்பு கலந்து இருக்கிறார் எம் பெருமான் எனப் பாடியிருக்கிறார். தான் எம்பெருமானை

எந்த நிலையில், எந்த மனோபாவத்துடன் கண்டாரோ அதனை அப்படியே வர்ணித்து விடுகிறார்.

நாமும் நீர்வண்ணப்பெருமாளையும் அணிமாமலர்மங்கையையும் தர்சித்துக் கொண்டு "மாமலை" என ஆழ்வார் வர்ணிக்கும் மலையின் மீதுள்ள மற்ற மூன்று மூர்த்திகளையும், சென்று தரிசிக்கலாம்.

மலைமேல் ஸ்ரீரங்கநாதர் கிடந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். சுற்றுப் பிராகாரத்தில் பகவான் இருந்த திருக்கோலத்தில் நரசிங்கமூர்த்தி சாந்த மூர்த்தியாகக் காட்சியளிக்கிறார்.

நரசிம்ம மூர்த்தியின் சந்நிதிக்குப் பக்கத்தில் கடந்தானாகிய "குறளாகி நிமிர்ந்த" உலகளந்த பெருமாளையும் தர்சிக்கலாம். இங்குள்ள இந்த நால்வரையும் ஆழ்வார் உள்ளம் உருகிப்பாடியிருக்கிறார். அதுமட்டுமின்றி சக்ரவர்த்தித் திருமகனையும் வர்ணிக்கிறார்.

"கோலமதிளாய இலங்கை கெடப்
படைதொட்டொருகால் அமரில் அதிர
காலமீது வென்றயன் வாளியினால்
கதிர் நீள் முடிபத்து மறுத்த"

என்று வர்ணிக்கிறார். இந்த க்ஷேத்ரத்தில் இத்தனை திவ்ய மூர்த்திகளையும் ஒருங்கே தர்சித்த ஆழ்வாருக்குப் பேச நா எழ வில்லைபோலும், இதனாலேயே "பேசுமளவன்று இதன் பெருமை" என்று கூறிவிடுகிறார். இதனாலேயே இத்தனைமூர்த்திகளும் எழுந்தருளியிருக்கும் இம்மலையை "மாமலை" என்றழைக்கிறார். இந்த மலையை வணங்கினாலேயே பாபங்கள் அனைத்தும் நாசமாகும் என்ற கருத்து கொண்டு 'பணிவார் வினைகள் நாசமது செய்திடும்' என்பது ஆழ்வார் உறுதிமொழி.

எனவே அவனைப் பணிவார்க்கும் அன்புடன் குழைந்து அவன் அருள் வேண்டுபவர்க்கும் எம்பெருமான் அவர்கள் வினைகள் அனைத்தையும் களைந்து அருள்பாலிப்பான் என்பதில் ஐயம் சிறிதும் வேண்டாம்.

திருத்தணிகை.

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

திருத்தணி செங்கற்பட்டு ஜில்லாவில் அரக்கோணத்திலிருந்து வடக்கே எட்டு மைல் தூரத்திலமைந்துள்ளது. முருகப்பெருமான் அமைந்துள்ள குன்றுதோருடல் ஸ்தலங்களுள் திருத்தணியே சிறந்ததாகக் கூறப்படுகிறது. இதனை "வரையிடங்களிற் சிறந்ததித் தணிகைபால் வரையே" எனக் கந்தபுராணம் சிறப்பாகக் கூறுகின்றது.

இந்த ஸ்தலம் இயற்கையின் எழில் கொண்டு மனோரம்மியமான பள்ளத்தாக்குகளுடன் சூழப்பட்டு பேரழகுடன் விளங்குகிறது. இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய செல்வங்களைப் பூரணமாக அளிப்பதனல் இம்மலையினை பூரணகிரி என்றும், இஹபரகதிகளுக்கு வேண்டியவற்றை க்ஷணப்பொழுதில் அருள்வதால் இம்மலைக்கு க்ஷணிகாசலம் என்ற பெயரும் வழக்கிலிருந்து வந்திருக்கிறது. எனவே இவ்வளவு சிறப்பு வாய்ந்த திருத்தணிகையினை நாமும் கண்டு தரிசிப்போம்.

திருத்தணிகையை நெருங்கியதும் நம் கண் முன்னே காக்ஷியளிப்பது தணிகை மலையும் அதற்கு மகுடம் போல் விளங்கும் கோயிலும் கோபுரமுமே. மலையடிவாரத்தில் ஒரு அழகிய குளம் உள்ளது. இதற்கு சரவணப்பொய்கை எனப் பெயர். இந்த தீர்த்தம் தனது சிவ பூஜைக்காக குமர வேளால் ஏற்படுத்தப் பட்டதாகக் கூறப்படுகிறது. மலைமேல் பல தீர்த்தங்கள் இருக்கின்றன. அவையனைத்தும் தெய்வங்களால் உண்டாக்கப்பட்டவையாகும். ஊரில் பல பகுதிகளை சத்திரங்களும், மடங்களும் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால் இப்பகுதியை ஊரார் 'மடம் கிராமம்' எனக் கூறுகின்றனர்.

மலைமேல் ஏற நல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் படிகளின் எண்ணிக்கை 365 மலை சிறியது என்றாலும் மகிமை மிகப் பெரியது. மலைமேல் ஏறும்போது வழியில் 'பிரம்ம சுனை' விநாயகர், பிரம்ம லிங்கம் முதலியவற்றைக் காணலாம். பிரம்ம தேவர் இத்தலம் வந்து பிரம்ம தீர்த்தத்தை ஏற்படுத்தி அதன் கரையில் ஈஸ்வரனைப் பிரதிஷ்டை செய்து 'பிரம்மேஸ்வரர்' என்ற பெயருமிட்டு லிங்கமூர்த்தியைப்பூஜித்துகொண்டு முருகனை நோக்கித் தவமிருந்ததாகவும் கூறப்படுகிறது.

ஒரு சமயம் பிரம்ம தேவர் கைலைக்குச் சென்றார், அவர் சிவபெருமானை வணங்கிவிட்டு முருகனை கவனிக்காமலிருந்து விட்டார். சினம் கொண்ட முருகன் பிரம்ம தேவரைச் சிறையிலடைத்துவிட்டு, படைப்புத்தொழிலைத் தாமே செய்யத் தொடங்கினார். இஃதறிந்த சிவபெருமான் பிரம்மனை சிறைமீட்டு முருகனைக் குறித்துத் தவம் புரியும்படி கூறினார். பிரம்மதேவரும் இங்கு வந்து ஒரு புனித தீர்த்தம் ஏற்படுத்தி அதன்கரையில் ஈஸ்வரனையும் பிரதிஷ்டை செய்து முருகனின் அனுக்கிரஹம் பெற்றார் எனக் கூறப் படுகிறது. இதுவே பிரம்ம தீர்த்தத்திற்கும் பிரம்மேஸ்வர லிங்க மூர்த்தியின் உற்பத்திக்கும் காரணமாக விளங்குகிறது. இத்தீர்த்தத்தில் வைகாசி மாதம் விசாக நக்ஷத்ரத்தில் நீராடி பிரம்மேஸ்வர லிங்கத்தையும் முருகப் பெருமானையும் வழிபடுபவர்கள் பிரம்ம ஹத்தி முதலான ஸகல தோஷங்களும் குஷ்டம் முதலிய ஸகல நோய்களும் நீங்கப்பெறுவர் என வரலாறு கூறுகின்றது.

இவற்றிற்குச்சற்றுமேலே சரஸ்வதி தீர்த்தமுள்ளது. மேலே ரதவீதியில் இந்திர நீலச் சுனை உள்ளது. தெய்வானையின் திருமணத்திற்குப் பிறகு இந்திரன் திருத்தணிகைக்கு வந்து நீலோற்பலச் சுனைக்கு அருகில் தவம் புரிந்து வந்தான். சுனையில் மலரும் நீலோற்பல மலர்களால் முருகனை அர்ச்சித்து வந்தான். முருகனும் இந்திரனின் தவத்திற்கிரங்கி இந்திரனுக்கு வேண்டுவது

யாதென்றுகேட்டார். இந்திரனும் சூரபத்மனால் தன்னிடமிருந்துகொள்ளையடிக்கப்பட்ட சங்கநிதி, பதுமநிதி, முதலிய செல்வங்கள் திருத்தணி மலையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவற்றைத்தனக்கு அருளவேண்டும் என்றும் வேண்டினான் முருகப்பெருமானும் அவ்வாறே அச்செல்வங்களை தேவேந்திரனுக்குத்திரும்ப அளித்ததாக வரலாறு கூறுகிறது. இந்த இந்திர நீலச் சுனைக்கு செங்கழுநீர் ஓடை எனவும் பெயர். இந்த தீர்த்தம் தான் ஸ்வாமியின் அபிஷேகத்திற்குப் பயன்படுத்துவதாகக் கூறுகிறார்கள். இதை அடுத்து விஷ்ணு தீர்த்தமும் நாக தீர்த்தமும் இருக்கின்றன. விஷ்ணு இங்கு முருகவேளை வழிபட்டு தாரகாசுரனால் கவரப்பட்ட தமது சக்ராயுதத்தை மீண்டும் அடைந்ததாகக் கூறப்படுகிறது. தாரகாசுரனால் தம்மீது ஏவப் பட்ட மஹா விஷ்ணுவின் சக்ராயுதத்தை முருகப்பெருமான் தனது மார்பில் பதக்கமாக அணிந்துகொண்டதாகவும் அதனை மீண்டும் விஷ்ணுவிடம் அளிக்கவே, குமரவேளின் மார்பில் சக்ராயுதம் இருந்தஇடத்தில் குழிபோல் அடையாளம் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்வடையாளத்தை முருகனுக்கு அபிஷேகம் நடைபெறும் சமயங்களில் கவனிக்கலாம்.

வாசுகி நாக தீர்த்தத்தினருகில் முருகனை, வழிபட்டு தேவர்கள் அமிர்தம் கடைந்த காலத்தில் மந்தாரமலை உராய்ந்ததாலுண்டான தனது தேகத்தின் நோவைப் போக்கிக் கொண்டதோடு தான் இழந்த சக்தியை மீண்டும் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இனி நாம் கோவிலுக்குள் நுழைவோம். உள்ளே நுழைந்ததும் நாம் தரிசிப்பது துவஜஸ்தம்ப விநாயகரும்' ஐராவதமுமே. கோயிலைச் சுற்றி வரும் பொழுது உமாமகேஸ்வரரையும் உச்சிப் பிள்ளையார் சந்நிதியையும் கண்டுகளிக்கலாம்.

முருகவேளின் சந்நிதிக்கெதிரில் வழக்கமாகயிருக்கும் மயிலுக்கு பதிலாக நாம் இங்கு ஐராவதத்தின் உருவம்

இருப்பதைக் காணலாம். இது ஒரு தனிச் சிறப்பாகும். மேலும் இது சந்நிதி நோக்கி நிற்காமல் கிழக்கு நோக்கி நிற்பதுவும் மற்ரோர் விசேஷமாகும். தெய்வயானையின் சீதனப் பொருளாக ஐராவதம் வந்து விட்டதும் தேவ லோகத்தில் செல்வம் குறைந்தது என்றும் அந்தக் குறை நீங்க இன்றவன் ஆணைப்படி தேவலோகம் நோக்கி அது நிற்கிறது என்றும் வரலாறு கூறுகிறது.

தெய்வ யானையை மணந்தபின் முருகன் மயில் வாகனத்தைத் துறந்து விடுகிறார் எனக் கருதப்படுகிறது. அதனாலேயே இத்தலத்தில் மூலவர், உத்ஸவர் இவர்களின் பக்கத்தில் மயில் இல்லை என்பது கூர்ந்து நோக்கி கவனிக்கத் தக்கது.

த்வஜஸ்தம்ப விநாயகரை தரிசித்துக் கொண்டு பிறகு பிரஸன்ன காதரீஸ்வரர் காமாக்ஷியம்மன் ஸமேத ஏகாம்பரேஸ்வரர் சந்நிதியும் ஆறுமுகஸ்வாமி சந்நிதியும் ஸ்ரீ குமரேஸ்வரலிங்கத்தின் சந்நிதியையும் தரிசிக்கலாம். இங்கு தேவேந்திரனால் தெய்வ யானைக்கு சீதனமாக அளிக்கப் பட்ட அற்புதமான பெரிய சந்தனக் கல்லும் ருத்திராக்ஷ விமானத்தில் வீற்றிருக்கும் பெரிய உத்ஸவ மூர்த்தியின் சந்நிதியும் இருக்கின்றன. பல நூற்றாண்டுகளாக சந்தனம் அறைத்தும் தேய்வுறாது, ஜோதி வீசும் பல அணுக்களைக் கொண்டு விளங்குவதாகக் கூறப்படுகிறது.

இனி இங்கு நாம் தரிசிக்க வேண்டுவது ஷண்முக மூர்த்தி உத்ஸவர், ஆபத் ஸகாய விநாயகர், அருணகிரிநாதர், வீர பத்திரர், நவ வீரர்கள், சூரியன், முதலியவர்களின் சந்நிதியாகும். அவசியம் இந்த ஆபத்ஸஹாய விநாயகரை தரிசித்த பின்னரே சந்நிதிக்குள் சென்று முருகனை தரிசிக்கச் செல்வது வழக்கம்.

[தொடரும்]

திருத்தணிகை.

''சித்ரகலாநிதி'' N. கிருஷ்ணன்.

சென்றமாதத் தொடர்ச்சி.

லிங்கத்தின் சந்நிதியையும் தர்சிக்கலாம். இங்கு தேவேந்திரனால் தெய்வானைக்கு சீதனமாக அளிக்கப்பட்ட அற்புதமான பெரிய சந்தனக் கல்லும், ருத்ராக்ஷ விமானத்தில் வீற்றிருக்கும் பெரிய உத்சவ மூர்த்தியின் சந்நிதியும் இருக்கின்றன. பலநூற்றாண்டுகளாக சந்தனம் அறைத்தும் தேய்வுறாது ஜோதிவீசும் பல அணுக்களைக் கொண்டு விளங்குவதாக கூறப்படுகிறது. இனி இங்கு நாம் தரிசிக்கவேண்டுவது சண்முகமூர்த்தி உத்ஸவர், ஆபத்சகாய விநாயகர், அருணகிரிநாதர், வீரபத்திரர், நவ வீரர்கள், சூரியன் முதலியவர்களின் சந்நிதிகளாகும். அவசியம் இந்த ஆபத்சகாய விநாயகரைத் தரிசித்த பின்னரே சந்நிதிக்குள் சென்று முருகனைத் தரிசிக்கச் செல்வது வழக்கமாம். வள்ளியை மணம்புரிய தக்க சமயத்தில் யானையாக வந்து உதவிய அண்ணாவுக்கு தணிகையில் அக்ரஸ்தானமே கொடுத்து விடுகிறார் முருகவேள் எனவே, முருகனை தரிசிக்கும்முன் இந்த ஆபத்சகாய விநாயகரை தரிசிக்கவேண்டும் என்பது வழக்கத்திலிருக்கிறது. மாசிமாதம் பிரம்மோத்ஸவத்தின்போது ஆபத்ஸகாய விநாயகருக்கு உத்ஸவம் நடந்த பிறகுதான் கொடியேற்று விழா நடத்தப்படுறது ஆபத்சகாய விநாயகரை வணங்கியே நாம கர்ப்ப கிருஹத்திற்குள் நுழைவோம்.

நாம் இப்பொழுது பஞ்சாக்ஷரம் படிகளைக் கடந்து ஸ்தபன மண்டபம், அர்த்த மண்டபம் முதலியவைகளைக் கடந்து கர்ப்ப கிரஹத்திற்குச் செல்லுகிறோம். இங்கு

தென்பாகத்தில் வள்ளியம்மையின் சந்நிதியும் வடபக்கம் தெய்வானையின் சன்னிதியும் இருக்கின்றன. தெய்வானை யின் வலக்கரத்தில் நீலோத்பல மலரும், வள்ளியின் இடக் கரத்தில் தாமரை மலரும் இருக்கிறது.

இங்கு மேற்குப் பகுதியில் பாலசுப்ரமணியர் சந்நிதி யுள்ளது. இவருக்கு ஆருத்ரா தரிசன தினத்தன்று வெந்நீர் அபிஷேகம் நடைபெறுகிறது. வடக்குப் பகுதி யில் சண்டேஸ்வரர், பைரவர், இவர்களின் சந்நிதிகள் உள்ளன.

நாம் இப்பொழுது கர்ப்பகிருஹத்தில் நின்றகோலத் தில் தனித்து காட்சியளிக்கும் தணிகைப் பெருமானின் திவ்ய சுந்தரவடிவை தர்சிக்கிறோம். பெருமானின் இடக் கரத்தைத் தொடையில் அமைத்து வலக்கரத்தில் ஞான சக்தியாகிய வேலைத் தாங்கி மயில், வள்ளி, தெய்வயானை முதலியவர்களின்றி தனித்து நின்று நல்ல அழகிய சுந்தர மூர்த்தியாகக் காட்சியளிக்கிறார். இந்த அழகனைக்காணத் துடித்த இராமலிங்க அடிகள் "தணிகை மலையைச் சாரேனோ! சாமி அழகைப் பாரேனோ?" என்று ஏங்குகிறார்.

திருவண்ணாமலையில் பிறந்து வளர்ந்து முருகன் அருள்பெற்று பாடத் தொடங்கிய அருணகிரிநாதரும் யாத்திரையாகக் கிளம்பி ஊர் ஊராகச் சென்று, குன்று குன்றாக ஏறி முருகன் புகழ்பாடி மகிழ்ந்தவர். தணிகை மலைக்கு வந்தவுடன் அண்ணாமலைக்கு இவ்வளவு சமீபத்தி லிருக்கும் இந்த திவ்ய மங்கள ஸ்வரூபனைக் காண இவ் வளவு காலமா? என்று நினைத்து அருள்ஞானச் சக்தி தரனாகிய குமரனைத் தாபத்தோடு இத்தனை நாட்கள் உன்னைக் காணவர இயலாமற் போனதற்கு நான் என்ன குற்றம் செய்தேன்? காரணம் என்ன என்று முருகனை நோக்கி ஏங்கி,

கோடாத வேதனுக்கு
யான் செய்த குற்றம் என்?
குன்றெறிந்த

நாடாளனே ! தென் தணிகைக்
குமர ! நின்
தண்டையந்தாள்
சூடாத சென்னியும்
தொழாத கையும்
பாடாத நாவும்
எனக்கே தெரிந்து
படைத் தன்னே !

என்று ஒரு பாட்டாகவே கேட்டுவிடுகிறார். இந்த அழகனை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

திருத்தணிகை பெருமானின் திருவுருவம், சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள முருகனின் முக்கியமான பதினறு வகைத் திருவுருவங்களில் "ஞானசக்திதரர்" என்னும் திருவுருவம் எனக் கூறப்படுகிறது. இவர் மும்மூர்த்திகளாலும் வணங்கப்பட்டவராதலால் இவர் "திரிமூர்த்திகள் தம்பிரானே" என்று அழைக்கப்படுகிறார். எல்லா நோய்களையும் போக்க வல்லவராதலால் "வைத்திய நாதன்" என்றும் அகத்தியருக்கு முருகவேள் தமிழைப் போதித்ததால் "தமிழ்க்கவி பெருமாள்" எனவும் போற்றப்படுகிறார்.

இத் தலத்தில் நடைபெறும் விழாக்களில் ஆடிக் கிருத்திகை விழா மிக்க விசேஷம், இதுசமயம் பல்லாயிரக் கணக்கான மக்கள் புஷ்பக்காவடிகளை சுமந்துசென்று மலை ஏறுவது கண்கொள்ளாக்காட்சியாகும். இச் சமயத்தில் வாணவேடிக்கைகளும் தெப்பத் திருவிழாவும் நடைபெறுவதைப்போல் வேறு எந்த ஸ்தலத்திலும் காண முடியாது.

இறந்தவர்களுக்கு காசி முக்தியளிக்கும், இருந்தவர்களுக்கு திருத்தணிகை முக்தியளிக்கும் என்பர். திருத்தணிகை இருக்கும் திசையை நோக்கி எவர் தொழுதாலும், அவர்கள் பல பிறவிகளில் செய்த வினைகளெல்லாம் நீங்கப்பெற்று மட்டற்ற இன்பம் அடைவர் என்று

தணிகை புராணம் கூறுகிறது. திருத்தணிகை மலைக்கு 365 படிகள் இருப்பதில் ஒரு தனி விசேஷம் உள்ளது இதன் கருத்தினை உள்ளே கொண்டே பக்தர்கள் திருத்தணித் திருப்படித் திருவிழா நடத்துகிறார்கள் போலும். பிரதி வருடமும் புது வருடத்தின் முதல் நாள் ஜனவரி 1ம் தேதி இந்தத் திருவிழா நடைபெறுகிறது

இக்கலியிலே ஒருநாள் கடப்பது ஒரு யுகம்போல் இருக்கிறது ஆதலின் இதுவரை நாங்கள் செய்த வினைகளெல்லாம் நீங்கவும் இனியும் இந்த வருடம் 365 நாட்களையும் இடையூறுகள் ஏதுமின்றி இன்பமாயக கழிக்கவும் ஆறுமுகவேளின் கிருபையை வேண்டியே பக்தர்கள் படி விழா நடத்துகிறார்கள். நாமும் பிரதி வருடமும் அவர்களுடன் கூடி அவன் அருளை நாடுவோம். வினைகளைக் களைவோம். முருகபெருமானும் தனை அண்டி வரும் பக்தர்கள் அனைவருக்கும் அருள்புரிவதில் கண்ணும் கருத்துங் கொண்டே. ஏகாந்தமாக வெற்றி வடிவேலராக விளங்குகிறார்

ஸ்ரீ பூர்ணனந்த நாத ஸ்ரீ வித்யாபீடம்.

59 தம்பு செட்டித்தெரு மதராஸ்—1.

ஷை பீடத்தின் சார்பில் கீழ்க்கண்ட விசேஷங்கள் குறிப்பிட்ட தினங்களில் நடைபெறும்

பரீதாபி௵ ஆனிமீ

ஆனிமீ 28உ முதல் ஆடிமீ 10உ வரையில் ஆஷாட நவராத்ரி—மஹா வாராஹி பூஜா—லக்ஷார்ச்சனை.

ஆடிமீ 8உ காலை ருத்ராபிஷேகம்—மஹாந்யாஸ ஜபம்—ஹோமங்கள்—ஸமாராதனை

ஆடிமீ 10உ இரவு குருமண்டல ஆராதனை,

இப்பீடத்தின் அன்பர்கள் ஷை விசேஷங்கட்கு வந்திருந்து பிரஸாதத்தை அடையுமாறு கோரப்படுகிறது.

இப்படிக்கு,
பீடத்தின் சிஷ்யர்கள்.

சோளசிங்கபுரம். (திருக்கடிகை)

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

திருக்கடிகை என்னும் திவ்ய தேசம், தொண்டை நாட்டிலுள்ள இருபத்திரண்டு திருப்பதிகளுள் ஒன்ருகும். இது தற்சமயம், சோளிங்கர் என்றும் சோளிங்கபுரம் என்றும, வழங்கப்படுகிறது. இந்த திவ்ய தேசம், சோளிங்கர் என்னும் ரயில் வண்டி நிலடத்திலிருந்து சுமார் ஒன்பது மைல் தூரத்திலுள்ளது. இந்தத் தலம் திருத்தணியிலிருந்து 18 மைல் தூரத்திலும், அரக்கோணத்திலிருந்து 17 மைல் தூரத்திலும் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ளது.

இந்தப்பதி சோழதேசம் போல் வளம் மிகுந்து, நரசிம்மமூர்த்தி எழுந்தருளுவதற்கு ஏற்ற இடமாக இருந்த காரணத்தால், சோழசிம்மபுரம் என்று பெயர் வழங்கலாயிற்று எனக் கூறப்படுகிறது. இத்தலத்தை ஆழ்வார்களும் "கடிகை" என்றே மங்களா சாஸனம் செய்திருக்கிருர்கள். "கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த அக்காரக்கனி" என்று திருமங்கை மன்னனும், "வண்பூங்கடிகை" என்று பேயாழ்வாரும் மங்களா சாஸனத்தில் கூறியுள்ளார்கள். பிள்ளைப் பெருமாள் ஐய்யங்காரும, தமது நூற்றெட்டு திருப்பதியந்தாதியில் இந்தத் திருப்பதியை கடிகை என்ற பெயராலேயே பாடியுள்ளார். பிரமகைவர்த்த புராணம், உத்தர காண்டத்தில் இப்பதியிலுள்ள மலையை, சிந்தாமணி, கடிகாசலம் என்று கூறப்பட்டிருக்கிறது.

கடிகை என்ருல் நாழிகை எனப் பொருள். இத்தலத்தில் ஒரு கடிகை நேரம் தங்கியிருந்தாலும் அல்லது ஒரு கடிகை நேரம் நினைத்தாலும், முக்தி கிடைக்கும்

என்பது பெரியோர் கூற்று. இதன் காரணம் பற்றியே இத்தலம் "கடிகை" எனப்பெயர் பெற்றது என்று கூறுவர். மணவாள மாமுனிகள் இப்பதியை "வடதிருவரங்கம்" எனப் பெயரிட்டருளினதாகக் கூறப்படுகிறது.

இராமானுஜரால் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நிர்த்தாரணம் செய்யும் பொருட்டு நியமித்தருளின 74 சிம்மாஸனங்களும் இப்பதியும் ஒன்று. ஸ்ரீ ஸ்வாமி தொட்டாச்சாரியர் அவதரித்த தலம் இது. இவர் காலம் 15-வது நூற்றாண்டு எனக் கூறப்படுகிறது. இவர் இத்தலத்தில் திருக்கடிகை எம்பெருமானின், ஸகல கைங்கர்யங்களையும் கவனித்து வந்ததாகவும் கூறப்படுகிறது. இவரால் பெரிய மலையின் தாழ்வரையில் மறைவாக இருந்த (அன்னியர் படையெடுப்பின் காரணமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த மூர்த்தியை) உத்ஸவ மூர்த்தியைக் கண்டெடுத்து சோளசிங்கபுரத்தில் பிரதிஷ்டை செய்ய விருப்பம் கொண்டு அக்காலத்து விஜயநகர மன்னரின் உதவியைக்கொண்டு பெருந்தனம் பெற்று ஒரு அழகியகோயில் நிர்மாணித்து, கோயிலுக்கு முன் ஒரு புஷ்கரணியையும் வெட்டுவித்து, கோயிலைச் சுற்றி ஊரையும் ஏற்படுத்தி உத்ஸவமூர்த்தியான "தக்கானை" கி. பி. 1588ல் சர்வதாரி வருடம், பங்குனி மாதம், சுக்லபக்ஷம் பஞ்சமி திதியில் பிரதிஷ்டைசெய்து, பெருமாளுக்கு, நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், பிரம்மோத்ஸவாதிகளையும் நடத்தியதாகவும் கூறப்படுகிறது. மேலும், கிலமாக இருந்த ஈஸ்வரனுடைய கோயிலையும், ஈசான்ய திக்கில் தனிக்கோயில் கட்டி பிரதிஷ்டை செய்தார் எனவும் கூறப்படுகிறது. ஆதியில் இருந்த இரு மூர்த்திகளையும் ஒன்றாக பிற்காலச் சோழமன்னர்களில் ஒருவன் ஆலயம் ஏற்படுத்தி வழிபட்டு வந்ததாகவும்,

அன்னியர் படையெடுப்பால் பாழ்பட்ட கோயிலை புதுப்பித்து தனித்தனிக் கோயில்களை ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே "சோள சிங்கபுரம்" என்று வைஷ்ணவர்களாலும், "சோழலிங்கபுரம்" என்று சைவர்களாலும் அழைக்கப்பட்டு வந்ததாகப் பெரியோர் கூறுவர். எனினும் அக்காலத்திலிருந்தே "சோளிங்கபுரம்" என்ற பெயர், வழக்கத்திலிருந்ததாக பெருமாள்கோயிலிலுள்ள கி. பி. 1595ல் ஏற்பட்டுள்ள கல்வெட்டு ஒன்றிலிருந்து தெரியவருகிறது.

இவ்வூரில் மூன்று திருக்கோயில்கள் உள்ளன. ஊருக்குள்ளே பக்தவத்சலப் பெருமாள் கோயில் கொண்டுள்ளார். இவரை பக்த உசிதப் பெருமாள் என்றும், "தக்கான்" என்றும் கூறுவர். இந்த பக்தோசிதப்பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலம் கொண்டு ஸ்ரீ தேவி பூ தேவி சகிதனாய், சேஷ வாகனத்தில், ஹேம கோடி விமானத்தின் கீழ் சேவை சாதிக்கின்றார். இந்த பக்தோசித ஸ்வாமியின் சந்நிதிக்குப்பின்புறம், இரண்டு சந்நிதிகள் உள்ளன. ஒன்றில் ஆதி கேசவப்பெருமாள், சேவை சாதிக்கின்றார். மற்றொன்றில் சோழ புரீசர் (சிவலிங்கம்) இருந்ததாகக் கூறப்படுகிறது. இக்கோயிலில் ஆழ்வார்கள், உடையவர், ஆண்டாள், மணவாளமாமுனிகள், தொட்டாச்சாரியார் முதலியவர்களும் தனிச்சந்நிதிகளில் சேவை சாதிக்கின்றனர்.

ஊருக்குத் தெற்கே அரக்கோணம் செல்லும் சாலையின் பக்கம் இரண்டு மலைகள் உள்ளன. பெரிய மலையில் யோக நரசிம்மர் கோயிலும் சின்னமலையில் யோக ஆஞ்சநேயர் கோயிலும் உள்ளன. இந்த சோளசிங்கபுரத்தில், யோக நரசிம்மருடைய கோயில் மிகப் பிரசித்தம். நரசிம்மமூர்த்தி பெரிய மலையில் கோயில்

கொண்டுள்ளார். இம்மலை சுமார் 350 அல்லது 400 அடி உயரமுள்ளது.

அடிவாரத்திலிருந்து மலையைப் பார்த்தால் இந்தமலை மீது ஏற முடியுமா? என்ற பிரமிப்பு யாருக்கும் ஏற்பட்டு விடும். இந்த யோக நரசிம்மரின்மலை மீது சற்று சிரமப்பட்டுத்தான் ஏறவேண்டும். தேனை பருக விரும்புபவன் ஈக்கடிக்குப் பயந்தால் முடியுமா? சாதாரண மூர்த்தியல்ல இந்த நரசிம்மன். தசாவதாரங்களிலேயே. மிக உக்ரமான அவதாரம் நரசிம்மாவதாரம். தன பக்தனுக்காக விஸ்வரூபம் எடுத்தான்; எப்படி! பக்தன் எந்த இடத்தைக் காட்டுவானோ? என்ற அச்சத்தில் பகவான், ஸகல இடங்களிலும் வியாபித்து விட்டான். பரந்தாமனுடைய சக்தி பூமிமட்டுமல்ல, ஸகல பொருள்களிலும், வான் முகடு முழுவதும், எட்டுதிசைகளிலும், தூசியிலும், துரும்பிலும் வியாபித்து நின்றது. இதோ! இந்தத் தூணிலிருப்பானா? என்ற வினா எழும் முன்னே விடையளிப்பவன்போல், அண்டம் அதிர, தூணைப்பிளந்து கொண்டு, கண்டவர்கள் கண்கூச, பார்த்தவர்கள் பயந்து நிற்கும் நிலையில் உக்ரமூர்த்தியாய், மனிதனா அல்லது மிருகமா? என்ற சந்தேகத்திற்கு கேள்விக்குறிபோல மனிதவுடலுடனும், சிங்கமுகத்துடனும், பிடரிமயிர்களை உலுக்கிக்கொண்டு வெகு உக்ரத்தோடு வெளிப்பட்ட இந்த மூர்த்தியை இங்கு சாந்த மூர்த்தியாய், யோக மூர்த்தியாய்க் கண்டு தரிசிக்கவேண்டுமென்றால் சாமானியமா? கஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் தான் மலை ஏறவேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)

சோளசிங்கபுரம். (திருக்கடிகை)

"சித்ரகலாநிதி" — N. கிருஷ்ணன்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

யோக நரசிங்கமூர்த்தி கோயில் கொண்டிருக்கும் பெரியமலையின் மேல் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட படிகள் ஏறி மலையின் உச்சியை அடையவேண்டும். கோயிலின் பிரதான வாசல் வடக்கு நோக்கியிருக்கிறது. கோயில் வாயிலை கோபுரம் அழகு செய்கிறது. வாயிலைக் கடந்து வலமாக உள்ளே சென்றால் எம்பெருமான் யோக பாவத்தில் வீற்றிருந்த திருக்கோலத்துடன் கிழக்கே திருமுக மண்டலங்கொண்டு ஹேமகூட விமானத்தின் கீழ் ஸேவை சாதிக்கின்றார். இப்பெருமானையே திருமங்கை ஆழ்வார் 'அக்காரக்கனி' என்று பாடியுள்ளார்.

ஸ்ரீய: பதியான பகவான், இங்கு ஏக சிலா பர்வதம் எனப்படும் பொன்மயமான சிலையின் பேரில் ஸப்த ரிஷிகளுக்கும் வாமதேவர் முதலான ரிஷிகளுக்கும் முக்தி தரும் பொருட்டு, சுவாயம்புவ மன்வந்தரத்தில், மூன்றாவது அம்சத்தில் ஸ்வாதி நக்ஷத்திரம், பௌர்ணமி கூடிய வெள்ளிக்கிழமையில் வைகாசி மாதத்தில் உத்தமமான ஸந்த்யாகாலத்தில் அழகிய சிங்கமாக பிரகலாதனுடைய ஸந்தோஷத்திற்காக யோகபாவத்தோடு, வீற்றிருந்த திருக்கோலத்துடன் ஹேமகோடி விமானத்தில் தோன்றினார். ஆகவே ஒரு நாழிகையில் சந்தோஷப்பட்ட காரணத்தால் இம்மலை 'கடிகாசலம்' எனப் பெயர் பெற்றது.

பெருமாள் சிறிய திருவடிக்கு சங்க சக்ரம் அளித்ததாக வரலாறு கூறுகிறது. யோக பீடத்திலிருக்கும் ஸ்வாமியின் தசாவதாரப்பட்டை சேவிக்கத்தக்கதாகும். பகவான் தரித்திருக்கும் சாளக்கிராம மாலை தர்சிக்க வேண்டியமுக்கிய அம்சமாகும். திருவடிகளில் சூரியசந்திரர்கள் நிவாஸம் செய்கின்றனர். திருமங்கை ஆழ்வாரால்:-

"மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானை புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத் தடன்குன்றின் மிசையிருந்த
அக்காரக்கனியை அடைந்துய்ந்து போனேனே"

என்று மங்களா சாஸனம் செய்யப்பட்ட வேத விளக்காய் கடிகைத் தடங்குன்றின்மேல் விளங்கும் அக்காரக் கனியை, வெல்லப்பாகுபோல் தித்திக்கும் தயாளுவை, கண்குளிர சேவித்துக் கொண்டு, எதிர்ப்புறமிருக்கும், சேனை முதல்வர், நம்மாழ்வார், உடையவர், ஸப்தரிஷிகள், கருடாழ்வார் இவர்களையும் ஸேவித்துக்கொண்டு பெருமாள் சந்நிதிக்குத் தெற்கே இருக்கும் தாயார் சந்நிதியை அடையலாம். அங்கு தாயார், ஸ்ரீ அம்ருதவல்லி என்ற திருப்பெயர் கொண்டு கிழக்கு நோக்கிய சந்நிதியில் ஸேவை சாதிக்கிறார். தாயாரை ஸேவித்த பிறகு இனி மலையைவிட்டு இறங்கி சின்னமலைக்குச் செல்லலாம். இங்குதான் சிறிய திருவடியின் கோயிலுள்ளது. (ஆஞ்சனேயர்) நரசிம்மப்பெருமாள் சன்னதிக்கு எதிரிலுள்ளது இம்மலை.

சின்னமலைக்கு வடபுறத்தில் மலை ஏறுவதற்கு படிகள் உள்ளன. இக்கோயிலுக்கு முன்புறம் ஒரு கோபுரமும் பின்புறம் ஒரு சிறு கோபுரமும் உள்ளன. இந்த மலையில் ஆஞ்சனேயர் சந்நிதி மேற்கு நோக்கி இருக்கிறது. இங்கு ஆஞ்சனேயர் (மூலவர்) சதுர்புஜத்துடன் சங்கம், சக்ரம், ஜபமாலை, ஜபஸங்க்யையோடு, சாளக்கிராம மாலை தரித்துக் கொண்டு யோகாஸனத்தில் காட்சியளிக்கிறார். மூலவருக்கு முன்பு உத்ஸவர், சதுர்புஜத்துடன், நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இங்கு ஆஞ்சனேயர் சங்க சக்ரங்களுடன் ஸேவை சாதிப்பது தனிச்சிறப்பாகும்.

ஆஞ்சனேயர் சங்கம், சக்ரம் இவைகளை அடைந்த விவரம் பிரமகைவர்த்த புராணத்தில் உத்தர காண்டத்தில் பிறகு பராசர ஸம்வாதத்தில் கடிகாசல மகிமையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

வடமதுரையைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த பரம விஷ்ணு பக்தனை இந்திரத்யும்னன் என்னும் அரசன் ஒருசமயம் காட்டிற்கு வேட்டையாடச்சென்றான். ஒரு மானைக் கண்டான். அதைத் தொடர்ந்து அம்பும்கையு மாக ஓடினன்.ஓடியமான் தன்கூட்டத்தைச்சென்றடைந்தது மன்னனும் அங்கு வந்து சேர்ந்தான் மன்னனைக் கண்ட மான்கூட்டம் மருண்டு மேய்ந்த புல் கடவாய் வழி சோரத் திகைத்து நின்று விட்டது. உடனே அவைகளில் ஒரு பெண்மான் "அம்பு எய்ய வேண்டாம" என்றிறைஞ்சிக் கூறியது. மன்னனும் மனமிரங்கித் தனது செய்கையில் வெறுப்புற்று வேட்டையாடுவதில்லை என உறுதிகொண் டான். பிறகு தனது ராஜ்யத்தைத் தன் மகனிடம் ஒப்படைத்து விட்டுத் தவம் செய்ய வனம் புகுந்தான். ஒருசமயம் அரசன் வாய் குழறி "ஹரி:" என்பதற்குப் பதிலாக "ஹர:" என்று நாமோச்சாரணம் செய்து விட் டான். உடனே சிவகணங்கள் அவனை சிவபதத்திற்கு அழைத்துச் சென்றனர். சிவபெருமானும் அரசனை நோக்கித் தாமும் விஷ்ணுவும் ஒன்றெனக்கூறி, வேண்டும் வரம் கேட்குமாறு கூறினர். அரசனும் மோக்ஷம் பெற விரும்பினன். சிவனும், அது நாராயணனின் உலகு, அங்கு பிரம்ம தேஜஸ் அடைந்தவர்கள் தாம் போகலாம் எனக் கூறி, மன்னனை, இமயமலைக்குத் தெற்கில் நரசிம்ம புரம் என்னும் பட்டினம் உள்ளது. அங்கு நாரணன் ஏக சிலாபர்வதத்தில் அனுமான் முதலிய தன் அடியார்களை ஆனந்திக்கச் செய்பவனாய் நரசிம்மமாய், யோகாஸனத் தில் வீற்றுள்ளான். அவனருளால் நீ பிரம்ம தேஜஸ் ஸையும், மோக்ஷயின்பத்தையும் அடையலாம் எனக் கூறினர்.

அரசன் நரசிம்ம மலையை நோக்கி விரைந்தான். வழியில் வாலகில்யாதி ரிஷிகளையும் தரிசித்து நரசிம்ம மலைக்கு வழிகேட்டான். அவர்களும் வாமதேவாதி ஸப்த ரிஷிகளுக்கு கடிகைப் பொழுதில் மோக்ஷமளித்த வரலாற் றையும் கூறி, வழியையும் காட்டியருளினர். கடிகை

மலையை நெருங்கிய மன்னன் இந்திராதி தேவர்களைக் கண்டான். வணங்கி வழிபட்டான்.

இந்திரனும் அன்புடன் அரசனை வரவேற்றுத் தான் இங்குவந்த காரியத்தையும் சொல்லி அரசனின் உதவியையும் வேண்டினன். அதாவது—இக்கடிகாசலப் பிரதேசத்தை, காலகேயர் என்ற அரக்கர்கள் கைப்பற்றிக்கொண்டு அதையாண்ட "சுரதன்" என்னும் மன்னனை விரட்டிவிட்டு "கும்போதரன்" என்னும் அரக்கனைத் தலைவனுக்கிக்கொண்டு பல கொடுமைகள் செய்து வருகின்றனர்.

இந்த ஏக சிலா பர்வதத்தில் யோகங்கொண்டிருக்கும் நரஹரியிடம் அசுரர்களின் கொடுமையைக்கூறி ஸாதுக்களை ரக்ஷிக்கும்படி வேண்டினேன். நரஹரியும் இந்திரத்யும்னன் என்னும் மன்னன் பிரம்மதேஜஸ் வேண்டி என்னை நாடிவருகிறன். அவனைக்கொண்டும், என்னை நோக்கித் தவம் செய்து வரும் அஞ்சனையின் புதல்வனை அனுமானைக்கொண்டும் அரக்கர்களை அழிப்பதாகக் கூறினர், என்று இந்திரன் கூறினன்.

அரசனும், அசுரர்களுடன் போர் புரிய நரசிம்மப் பெருமானது அருளை வேண்டினன். நரசிம்மமூர்த்தியும் அனுமானிடம் தனது சங்க சக்கரங்களைக் கொடுத்து சத்துரு சம்ஹாரம் செய்யும்படி கட்டளையிட்டார். அதன் படியே ஆஞ்சநேயர் அரசனுடன் சென்று, பகைவர்களை அழித்து பிறகு சங்கு, சக்ரங்களை மலையிலுள்ள தடாகத்தில் சுத்தம்செய்து எம்பெருமானிடம் திரும்ப அளித்தார். எம்பெருமானும் ஆஞ்சநேயரை நோக்கி "நீ! இன்று முதல் என்னைப்போல் சங்க, சக்கரம் தரித்து சதுர்புஜனுய், எனக்கெதிரில் வீற்றிருந்து என்னையும் உன்னையும் நாடிவரும் பக்தர்களுக்கு வேண்டிய வரம் தருமாறு கட்டளையிட்டார்." என்றும் அவ்விதமே ஆஞ்சநேயரும் சங்க சக்கரத்துடன் யோகபாவத்தில் இங்கு அமர்ந்து கொண்டு எல்லோருக்கும் காட்சியளித்து வருகிறர் என்றும் கூறப்படுகிறது.

இந்திரத்யும்னன் என்னும் அரசனையும் எம்பெருமான், "நீ, இங்கு நல்ல முறையில் பிரஜைகளை ரக்ஷித்துப் பின்னர், பிரம்ம தேஜஸ் அடைந்து மோக்ஷபதவி அடைவாய்" என்று கூறியதாகக் கூறப்படுகிறது.

ஆஞ்சநேயர் சக்ரத்தை அலம்பிய தீர்த்தம் சக்ர தீர்த்தம் எனக் கூறப்படுகிறது. இத்தீர்த்தம் பிசாசு பிடித்தவர்களைக் குணப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஆஞ்சனேயருக்கு விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன.

இந்தச் சின்னமலையில் காட்சியளிக்கும் வரப்பிரசாதி ஆஞ்சநேயரை தரிசித்துக்கொண்டு, அங்கேயே, தெற்கு நோக்கி சயனத்திருக்கோலத்தில் ஸேவை சாதிக்கும் ஸ்ரீ ரங்கநாதரையும், அருகில் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை சாதிக்கும் உபய நாச்சியார்களையும் ஸேவித்துக் கொள்ளலாம். பிறகு மேற்கு நோக்கிய சந்நிதியில் கோதண்டராமர் சீதாப்பிராட்டியுடனும், இலக்குமணனுடனும் எழுந்தருளியிருக்கிறார். அவரையும் ஸேவித்துக் கொண்டு மலையைவிட்டுக் கீழே இறங்கலாம்.

இத்தலத்தில் சுமார் 108 தீர்த்தங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. முக்கியமானவை, பைரவதீர்த்தம், நரசிம்ம தீர்த்தம், அம்ச தீர்த்தம், திருவடி தீர்த்தம், சக்ர தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், சேஷ தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் முதலியன. சேஷதீர்த்தத்தில் சனிக்கிழமைகளில் நீராடினால் ஸர்ப்பதோஷம் நீங்கும் என்பர்.

பிரம தீர்த்தம் மலைக்கோயிலுக்குச் செல்லும் வழியிலுள்ளது. இதை தக்கான் குளம் என்பர்— "வையம் கண்ட கச்சித் திருநாள்" என்று பிரசித்தமான காஞ்சி தேவராஜப் பெருமாளுடைய வைகாசித்திருநாள் உத்ஸவத்திற்கு ஸ்வாமி தொட்டையாசாரியார் பிரதி வருடமும் தவறாது சென்று ஸேவித்து வந்தார். ஒரு சமயம், உடல் நலமின்மையால் சென்று ஸேவிக்க முடியவில்லை; எம்பெருமானின் கருடஸேவையைக் காணமுடியவில்லையே என்ற ஏக்கத்துடன், ஸ்வாமி தக்கான்குளத்தில் ஸ்நானம் செய்து விட்டு நித்யானுஷ்டானங்களையும் முடித்துக் கொண்டு ஸ்ரீகாஞ்சி வரதனை 5ஸ்லோகங்களில் துதித்துத்

தன் ஆற்றுமையை வெளியிட்டார். உடனே காஞ்சி வரதன் தோட்டையாசாரியாருக்கு தக்கான் குளக்கரை யிலேயே கருடாரூடராய் ஸேவைசாதித்தருளினர். இந்த ஐதிஹ்யம் இன்றும், திருக்கச்சியில் (காஞ்சியில்) கருட வாகனத்தன்று, கோபுரவாயிலில் தாமதித்து நின்று, சோளசிம்மபுரம் தொட்டையாசார்ய ஸ்வாமிக்குஸேவை சாதிப்பதாய் கற்பூர ஹாரத்தி நடந்துவருகிறது. இந்த தக்கான் குளக்கரையில் தேவராஜப்பெருமாள் கருடா ரூடராய் சங்க, சக்கரம், பத்மம், கதை ஹஸ்தத்துடன், ஒரு திருவடி, பெரிய திருவடியில் தோளிலும், மற்றொரு திருவடி திருவடியின் கையிலும் வைத்து புண்யகோடி விமானத்தின் கீழ் காக்ஷியளிக்கிறார். சோளிங்கபுரத்தி லும் ஸ்ரீ தக்கானுக்கு அதே வைகாசித் திருநாளில் கருட ஸேவை புறப்பாடு நடந்து, தொட்டையார் ஸ்வாமிக்கு (பரிவட்டம், திருமலை, சடகோபன் சாதித்து) மரியாதை கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வூர் வரலாற்றுச் சிறப்பும் உடையது. கி பி. 1781ம் ஆண்டு இவ்வூரில் ஆங்கிலேயருக்கும், ஹைத ரலிக்கும் நடந்த இரண்டாம் கர்நாடகப்போரில், பல வீரர்கள் மடிந்தனர். அந்த வீரர்களைப்புதைத்த கல்லறை திருக்குளத்தின் எதிரில் இப்பொழுதும்இருக்கிறது.

ஊரில் ஒரு மசூதியும் உள்ளது. பெருமாள் புறப் பாட்டின்போது (பக்தோசிதப்பெருமாள்) மசூதி எதிரில் இந்து முறைப்படி மேளதாளம் கொட்டிச்செல்வதில் தடை இங்கு கிடையாது. ஸ்வாமி தொட்டையாச்சார் காலத்தி லிருந்தே இவ்வழக்கம் இருந்து வருவதாககூறப்படுகிறது

பொதுவில் சோளிங்கபுரம் ஒரு பிரார்த்தனை ஸ்தல மாகும். பக்தர்கள் தங்கள் குறை நீங்க இங்கு வந்து தங்கியிருந்து இங்குள்ள பெருமாளையும், ஆஞ்சநேயரை யும் ஸேவித்து வருவார்கள். அவர்கள் கனவில் சாதிக் கிறபடி பிரார்த்தனைகள் நிறைவேற்றி பக்தர்கள் நலன் பெற்றுச் செல்கிறார்கள். இவை நாள்தோறும் கண் கூடாகக்காணும் காட்சியாகும்–நாமும் அக்காரக்கனியனை யும் ஆஞ்சனேயனையும் தொழுது அருள் பெறுவோமாக.

திருவல்லம்.

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

திருவல்லம் என்று கூறப்படும் இவ்வூர், வட ஆற்காடு மாவட்டத்தில், குடியாத்தம் பகுதியில் உள்ளது. திருவலம் என்ற இருப்புப்பாதை நிலயத்திலிருந்து 1½ மைல் தூரத்திலுள்ளது. சென்னையிலிருந்து இத்தலம் 75 மைல் தூரத்திலிருக்கிறது. இன்று பொன்னை என்று வழங்கப்படும். நிவா நதிக் கரையில் இத்தலம் அமைந்துள்ளது.

இதற்கு திருவல்லம், தீக்காலிவல்லம், வாணபுரம், என்று பல பெயர்கள் உண்டு.

கோயில் தெற்கு பார்த்த கோபுர வாயிலைக் கொண்டது. கோயிலினுள் இறைவன். இறைவி சந்நிதிகள் கிழக்கு நோக்கியமைந்துள்ளன.இரண்டு பிராகாரங்களைக்கொண்ட இக்கோயிலுக்கு வெளியே தேரோடும் வீதியுமுள்ளது. பிரதான கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றதும், வலது புறத்தில் கௌரீ தீர்த்தம் எனப்படும் திருக்குளம் உள்ளது. இப் பிரகாரத்திலுள்ள வரசித்தி விநயகரை தரிசித்துவிட்டு உள்ளே செல்லலாம். இந்த விநயகர் (சிவனிடம்) இறைவனை வலம் வந்து மாங்கனி பெற்றதாகக் கூறப்படுகிறது. இதனாலேயே இத் தலத்திற்கு 'திருவலம்' எனப் பெயர் ஏற்பட்டது என்று கூறுகின்றனர்.

பிரதான கோயிலுக்குள் செல்ல இன்னுமொரு சிறிய கோபுரவாயிலைக் கடக்கவேண்டும். உள்ளே சென்றதும் இடதுபுறம் "நகரீஸ்வரர்" சந்நிதி உள்ளது. இப் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் உற்சவ மூர்த்திகள் உள்ளனர். மேற்கு பிரகாரத்தில் ஸஹஸ்ர லிங்கம், முருகன், இவர்கள் சந்நிதிகள் உள்ளன. வடக்கு

பிராகாரத்தில் அம்பாள் சந்நிதியும், மீனாட்சிசுந்தரேஸ்வரர் சந்நிதியும் உள்ளன. அம்பிகையின் பெயர், வல்லாம்பிகை, தனுர்மத்யாம்பாள் என்று கூறப்படுகிறது. அம்பிகையின் இடை வில்லைப்போலிருப்பதால் "தனுர்மத்யாம்பாள்" என அழைக்கப்படுகிறாள். அம்பிகையை தரிசித்துக்கொண்டு அப்படியே, வடகிழக்குப் பிராகாரத்திலுள்ள பைரவரையும், சூரிய பகவானையும் தரிசித்துக்கொண்டு, இறைவனின் சந்நிதியை அடையலாம்.

இறைவன் சந்நிதிக்கு வலப்புறத்தில் பாதாளீஸ்வரர் சந்நிதியுள்ளது. இவரைஜலகண்டேஸ்வரர் என்றும் அழைப்பர்.

இப்பொழுது நாம் கர்ப்பக்கிருகத்திலிருக்கும் மூலமூர்த்தியை வணங்கப்போகிறோம். இறைவனுக்கு வல்லநாதர் அல்லது வல்லநாதேசுவரர் என்று பெயர். இவரை "பில்வநாதர்" என்றும் கூறுவர். இந்த பெருமானை நவக்கிரகங்கள் வழிபட்டு பேறுபெற்றதாக கூறப்படுகிறது. வல்லாளன் என்னும் மன்னன் இறைவனை வழிபட்டு பேறுபெற்றதாகவும் கூறப்படுகிறது. ஔவைப்பாட்டி நாவற்கனி பெற்றதும் இங்குதான் என்று சொல்கின்றனர்.

திருஞானசம்பந்தர் இத் தலத்திற்குவந்து இறைவனை தரிசித்து இறைவன்மீது ஒரு பதிகம் பாடியிருக்கிறார்:

"தாயவன் உலகுக்குத் தன்னொப்பிலாத்
தூயவன் தூமதிசூடி எல்லாம்
ஆயவன் அமரர்க்கும் முனிவர் கட்கும்
சேயவன் உறைவிடம் திருவல்லமே" என்று

மேலும் இத் தலத்தை "கற்றவர் கண்டு மகிழும் திருவல்லம்" என்றும் "சார்ந்தவர்க்கின்பங்கள் தழைக்கும் வண்ணம் நேர்ந்தவன் உறைவிடம் திருவல்லமே" என்று இறைவனையும் பாடியருளியிருக்கிறார். திருநாவுக்கரசு நாயினார், இத் தலத்தைப்பற்றி பாடவில்லையெனினும் மற்றைய பதிகங்களில் குறிப்பிட்டுள்ளார்.

அருணகிரிநாதர் வள்ளிமலையைப் பற்றிபாடும் திருப்புகழில்''வல்லை நகர்'' எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் வல்லை நகர் என இத்தலத்தையே குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. சம்பந்த பெருமானும் இத் தலத்தை ''வள நகர் திருவல்லம்'' என்று குறிப்பிட்டுள்ளார். இத் தலத்தில் நகரீசர் என்ற லிங்கமூர்த்தியிருப்பதிலிருந்து அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ள ''வல்லை நகர்'' என்பது இத்தலமே என எண்ண இடமிருக்கிறது.

வல்ல நாதேசுவரரை தரிசித்துவிட்டு கோவிலுக்கு வெளியே வருவோம். இங்கு ஒரு அதிசயம். நந்தீஸ்வரர் இறைவனை நோக்கியில்லாமல், சிவபிரானுக்கு தன் பின் பாகத்தைக் காட்டிக்கொண்டு கோயிலின் வெளிப்புறத்தை நோக்கியிருக்கிறார். இது குறித்து ஒரு அதிசயமான வரலாறு கூறப்படுகிறது.

இங்கு பக்கத்திலுள்ள வல்லாம்பேட்டை என்னும் மலையில் கஞ்சாரன் என்னும் அரசுன் ஒருவன் இருந்தான். அவன் இங்கு வாழ்ந்த மக்களை வருத்தி வந்ததாகவும், மக்கள் தங்கள் துயர் துடைக்க இறைவனை வேண்டினர் என்றும், இறைவர், நந்தியை ஏவிவிட, நந்தீஸ்வரர் அவ்வசுரனை துரத்திச் சென்றதாகவும், அதன்காரணமாகவே நந்தி கோயிலின் வெளிப்புறத்தை நோக்கியிருப்பதாகவும் ஒரு வரலாறு கூறுகிறது.

மற்றொன்று, திருவல்லநாதருக்கு திருமஞ்சனத்திற்காக, இவ்வூரிலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள கஞ்சகிரி திருக்குளத்திலிருந்து தீர்த்தம் கொண்டு வருவது வழக்கமாம். அப்படித் திருமஞ்சனம் கொண்டு வருபவனை, கஞ்சன் என்னும் அசுரன் துன்புறுத்தி வந்தான் என்றும், திருமஞ்சனம் கொண்டுவருபவன் இறைவனிடம் முறையிடவே, இறைவன் நந்தியம் பெருமானை ஏவியதாகவும், நந்திதேவர், அசுரனைக் கொம்பால் குத்தி தூக்கியெறிந்து விட்டதாகவும், அசுரனுடைய இரத்தம் சிந்திய இடங்களில், மலைமேல், இலிங்கங்கள்

இருக்கின்றன என்றும் கூறப்படுகிறது. இதன் காரணமாக பௌர்ணமி இரவுகளில் சுமார் 11-மணிக்கு மேல், ஜோதி தோன்றுவதாகவும், முக்கியமாக சித்திரை, தை இந்த இரண்டு மாதங்களிலும், ஜோதி அதிகமாகத் தோன்றுவதாகவும் கூறுகின்றனர்.

நந்திக்கும், இறைவனுக்கும் இடையேயுள்ள பலி பீடம், சுமை போலிருக்கிறது. பலிபீடத்திற்கு கீழே ஒரு அரங்கம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இங்குள்ள சில திருவுருவங்கள் அற்புத சிற்ப வேலைபாடுடையனவாக இருக்கின்றன. இத்தலம், கல்வெட்டுகளிலும், தேவாரத் திருப்பதிகங்களிலும், ''திருவல்லம்'' என்றே குறிப்பிடப்பட்டுள்ளன. ''திருவலம்'' என்று மக்கள் சாதாரணமாக வழங்கிவருகிறார்கள் எனத் தெரிகிறது.

இக்கோயிலில் பல தமிழ்—கிரந்த கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவைகள் பல்லவர்கள், பாண மன்னர்கள், கங்கமன்னர்கள், சோழமன்னர்களின் காலத்திய கல்வெட்டுகள். இக்கல்வெட்டுகளிலிருந்து இக்கோயிலின் பழமை நன்கு விளங்குகிறது. மேலும் கோயில் பூஜை முதலியவற்றிற்குப்பொருள் வழங்கிய விபரம் நிலதானம் செய்யப்பட்ட விபரம், விளக்கெரிக்க நெய் கொடுத்ததும் பொன்கொடுத்த விபரங்களும் தெரியவருகின்றன. ஞான மூர்த்தி என்ற துறவி ஒருவர் ஒரு மண்டபம் கட்டிய விபரமும் ஒரு அந்தணர், கோயிலில் அம்பிகையின் உருவத்தை எடுப்பித்து மூன்று ஊர்களையும் கோயிலுக்கு வழங்கிய விபரமும் தெரியவருகிறது. முதலாம் குலோத்துங்க சோழனின் வெற்றிகள் கூறப்பட்டுள்ளன.

மதுராந்தக கண்டராதித்தனர் இந்த கோயிலுக்கு 1000 கும்பங்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்வித்து கோயிலின் வரவு செலவு கணக்குகளையும் தணிக்கை செய்த விபரம் கூறப்பட்டுள்ளது. இக்கல் வெட்டுகளிலிருந்து இந்த கோயிலின் பழமை நன்கு விளங்குகிறது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

திருவிரிஞ்சிபுரம்.

'சித்ரகலாநிதி' N. கிருஷ்ணன்.

பிரமபுரம் என்னும் சிறந்த பதியில் சிவநாதன் என்று சிவனருட் செல்வர், தூய அன்போடு சிவாலயத்தில் சிவத்தொண்டு செய்து வந்தார். அவர் மனைவி நயன நந்தினி என்னும் உத்தமியார். இந்த தம்பதிகளுக்கு இறைவனருளால் சிவப்பிரசாதமாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தம்பதிகள் தங்கள் குழந்தைக்கு சிவசர்மன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தனர். ஆனால் விதியின் விளைவால் சிவசர்மனின் தந்தை சிறிது காலத்திலேயே சிவபதமடைந்தார். பதியையிழந்து திக்கற்று நிற்கும் நயன நந்தினி தன் தாயாதிகளை அணுகி தன் மைந்தன் சிவசர்மனுக்கு உபநயனமும் சிவ தீக்ஷையும் செய்வித்து தன் கணவனின் பாகப்படி பூஜை செய்ய தன் மகனுக்கு உதவும்படி வேண்டினாள். ஆனால் சிவசர்மனின் தலைமை பூஜை உரிமைபாகத்தையும் காணியாட்சியையும் அபகரிக்க எண்ணிய அறுபது வீட்டவர்களாகிய ஆதிசைவர்கள், இசையால் அதற்குமாறாக, சிவசர்மனை நோக்கி "உன் தந்தை காலமானதுமுதல் நாங்களே சிவபூஜை செய்து வருகிறோம்; ஆதலின் உங்களுக்கு பூஜை முறைக்காக வழங்கப்பட்டுள்ள நிலம் முதலியன எங்களுக்குச் சேரவேண்டும். நாளை உன் தந்தையின் பூஜைமுறை வருகிறது. உனது உரிமை பூஜையை நீ செய்யவேண்டும். இல்லாவிடில் உங்கள் பூஜைமுறைக்கு ஏற்பட்டுள்ள நிலம் வீடு யாவற்றையும் எங்களுக்கு எழுதித்தந்துவிட வேண்டும் என்று கூறிச் சென்றனர். இதைக்கேள்விப்பட்ட சிவசர்மனின் தாய் மனம் வருந்தினாள்; தனக்கு தன் தாயாதிகள் யாவரும்

உதவிபுரிய முன்வராததால், வருந்திக் கண்களில் நீர் சோரப் பரமனிடம் தன் குறை தீர்க்கும் மார்க்கம்வேண்டி முறையிட்டுக்கொண்டாள். அன்றிரவு இறைவன் அவள் கனவில்தோன்றி, ''சூரியன் தினமாகிய நாளை நன்னாளில் உன் மைந்தனை நம் ஆலயத்திலுள்ள, பிரம்ம தீர்த்தத்திற்கு அழைத்துவந்து மங்கள நீராட்டிவை, பின்னர் நாம் நன்னெறி காட்டுவோம்'' எனக்கூறி மறைந்தார்.

இறைவனின் ஆணைப்படி நயனநந்தினி தன் மைந்தனை மறுதினம் பிரம்மதீர்த்தத்தில் நீராட்ட குளத்தருகில் அழைத்து சென்றாள். இதுகண்ட அவனது தாயாதியார் சிவ தீட்சை பெறாத பாலகன்,எப்படி ஆலயபூஜை செய்யலாம். இதுமுறையல்ல எனக்கூறி கோயிலின் திருவாயிற் கதவுகளைப் பூட்டுகின்றனர். நயனநந்தினி இறைவனை தியானித்துக்கொண்டு தனது மைந்தனை தீர்த்தத்தில் மூழ்கச் சொன்னாள். அதுசமயம் பரமனார் ஒரு வயது முதிர்ந்த கிழ ஆதிசைவராக அங்குவந்து எல்லோரும் கண்டு வியக்கும் வகையில், பாலகனுடன் தீர்த்தத்தில் மூழ்கி ஒரு முகூர்த்த காலத்திற்குள் பாலகனுக்கு, உபநயனம், பிரம்மோபதேசம், சிவ தீக்ஷை யாவும் அருளி, பாலகனுடன் கரையேறி மஹாலிங்கமாக மறைந்தார். சிறுவன் சிவபூஜை செய்வதற்குரிய சிவ தீக்ஷை பெற்றவனாக கரையேறுதலைக்கண்ட தாயாதியர் வியப்புற்றனர்.

பின்னர் சிவசர்மன் அபிடேக தீர்த்தக்குடத்துடன் வலமாகக் கோயிலின் முன்வந்து நின்றான். உடனே பூட்டப்பட்டிருந்த திருவாயிற் கதவுகள் தாமாகவே திறந்து கொண்டன. சிவசர்மன் உள்ளே சென்றான். சிவபூஜைக்குரிய ஸகல காரியங்களையும் பிழையின்றி செய்து முடித்துவிட்டு கடைசியில் தீர்த்தாபிடேகம் செய்யக் கையில் திருமஞ்சக் குடத்தை எடுத்து இறைவன் சிரத்தில் ஊற்ற எத்தனித்தான். இறைவனின் முடி நீண்டு உயர்ந்திருந்ததால் பாலனாகிய சிவசர்மனுக்கு

எட்டவில்லை. வருந்திய பாலகன் "எந்தையே! நும்முடி, எனக்கு எட்டவில்லையே!" என்று கண்ணீர் மல்கினன். பாலகனின் பக்திக்கு இரங்கிய பரமனார், தமது திருமுடியையே வளைத்துக் கொடுக்கிறார். சிறுவனும் முறைப்படி அபிஷேகம் செய்து சந்தோஷிக்கின்றான். இறைவனும் அதே கோலத்தில் இன்றும் முடி சாய்ந்த மகாலிங்கமாக காட்சியளிக்கிறார். நாமும் சென்று தரிசித்து வருவோம் வாருங்கள் அந்த விரிஞ்சிபுரத்திற்கு.

விரிஞ்சிபுரத்திற்கு திருவிரிஞ்சை என்பது புராணப் பெயர். இத்தலம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூருக்கு மேற்கே எட்டுகல் தொலைவிலிருக்கிறது. இத்தலம் பாலாற்றின் தென்கரையில் இயற்கை அழகுடன் விளங்குகிறது.

இத்தலத்திற்கு கௌரிபுரி, விஷ்ணுபுரி, கரபுரம், விரிஞ்சை, விரிஞ்சைபதி எனப்பல பெயர்களும் உண்டு. இத்தலத்தில் பிரமன் தவமிருந்து சிவபெருமானை வழிபட்டதால் இதற்கு விரிஞ்சிபுரம் எனப்பெயர் வந்தது எனக் கூறப்படுகிறது. விரிஞ்சன் எனப் பிரம்மதேவனுக்கு ஒரு பெயர் உண்டு.

ஒருசமயம் பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் தங்களில் யார் பெரியவர் என்பது ஒரு சர்ச்சை. கடைசியில் ஒரு போட்டியில் முடிகிறது. இருவர் மத்தியிலும் சிவபெருமான் அண்ணாமலையில் "ஜோதிப்பிழம்பாக" காட்சியளிக்கிறார். இந்த அண்ணாமலையாரின் திருவுருவின் அடியையோ முடியையோ யார் முதலில் கண்டறிந்து வந்து சொல்கிறார்களோ அவர்களே பெரியவர் எனத் தீர்மானித்துக் கொண்டனர். உடனே விஷ்ணு வராக உருவம்கொண்டு பூமியைக் குடைந்து பாதாளம் வரையில் சென்று ஈசனின் அடியைக்காணாமலே திரும்பி விடுகிறார். அதுபோல பிரம்மனும் அன்ன உருவில்

வானுலகில் சென்று முடிகாண முடியாமல் திரும்புகிறார்; என்றாலும் பிரம்மன் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல், தான் இறைவன் முடியைக் கண்டதாகவும், அதற்கு இறைவன் முடியிலிருந்த தாழம்பூவே சாக்ஷி எனக்கூறி விடுகிறார். பிரமன் பொய் சொன்னதையறிந்த ஈசன், பிரம்மனை பூவுலகில் மனிதனாகப் பிறக்கும்படி சபிக்கிறார். அந்த விரிஞ்சனே இந்த விரிஞ்சிபுரத்தில் சிவசர்மன் என்ற பெயரோடு பிறந்து ஐந்து வயது நிறையு முன்பே தனது தந்தையை இழந்து, தயாதிகளால் கோயிலின் பூஜை செய்யும் உரிமையை கைப்பற்றும் சூழ்ச்சியிலகப் பட்டு தவித்த அவனுக்கு இறைவன் சிவதீக்ஷையும் உபநயனமும் செய்வித்து கை கொடுக்கிறான். ஆனால் அபிடேகம் செய்யும்பொழுது இறைவன் முடி எட்டாத சமயத்தில் ''அன்றுதான் உன்முடியை நான் காணவில்லை, இன்றும் உன் முடி எட்டவில்லையே'' எனக் கதறி இறைவனையே தன்முடியை சாய்க்க வைக்கிறான். இதனாலேயே இத்தலத்துக்கு விரிஞ்சிபுரம் எனப் பெயர் வந்தது.

பராசக்தி இங்கு தவம் இயற்றி இறைவனை வழிபட்டதால் கௌரிபுரம் எனவும், திருமால் இங்கு எழுந்தருளியுள்ளதைக் குறித்து விஷ்ணுபுரம் எனவும், இங்கு கரன் என்னும் அசுரன் இறைவனை வழிபட்டு பேறுபெற்றதால் கரபுரம் எனவும் பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது.

இத்தலத்திறைவன் மீது சூரியனின் ஒளிக்கதிர்கள் பங்குனிமாதத்தில் விழுவதால் இதனை பாஸ்கர க்ஷேத்ரம் என்றும் கூறுவர். ஊரைப்பற்றி தெரிந்து கொண்டபின் இனி கோயிலுக்குச் சென்று முடிசாய்த்துக் கொடுத்த இறைவனை வணங்குவோம்.

(அடுத்த இதழில் தொடரும்)

ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

திருவிரிஞ்சிபுரம்.

சித்ரகலாநிதி N. கிருஷ்ணன்.

சென்ற மாதத்தொடர்ச்சி.

ஊருக்கு வெகு தொலைவில் வரும்பொழுதே வானுற நிமிர்ந்து நிற்கும் அழகிய கோபுரம் காட்சியளிக்கிறது. கம்பீரமான உயர்ந்த மதிற்சுவர்கள் ஆலயத்தின் அழகை சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. கோயிலுக்கு நான்கு புறங்களிலும் வாயில்கள் உள்ளன. கோயிலுக்குள்ளே ஐந்து பிராகாரங்கள் உள்ளன. நாம் கோயிலுக்குள் கிழக்கு வாயில் வழியே செல்லவேண்டும். முன் வாயிலை 110 அடி உயரமுள்ள பெரியகோபுரம் ஏழு நிலைகளுடன் அழகு செய்கிறது. கோயிலுக்குள்ளே ஐந்து பிராகாரங்கள் உள்ளன.

கிழக்கு வாயிற் கோபுரம் வழியே உள்ளே சென்றதும் இடதுபுறம் சக்திகளின் அவதாரச் சிற்பங்களைக் கொண்ட சக்தி மண்டபம் என்ற நாற்கால் மண்டபம் உள்ளது. இதனை அடுத்து மேற்கேதுவஜாரோகண மண்டபமெனும் பதினாறுகால் மண்டபமும் உள்ளது. இதற்கு தெற்கில் பெரிய சிங்கம் ஒன்று வாய் பிளந்து நிற்கும் முறையில் அமைந்த சிற்பம் ஒன்றைக்காணலாம். இதில் உள்ள வாயில் வழியே நுழைந்து சென்றால் சிம்ம தீர்த்தமெனப்படும் நீர்த்துறையை அடையலாம். இது ஒரு நடபாவிக்கிணறு. இதை சிம்மதீர்த்தம், கௌரிதீர்த்தம் என்றும் அழைப்பர். இந்த தீர்த்தம் திருவிரிஞ்சிபுரத் தலத்திற்கு ஒரு தனிச் சிறப்பை கொடுக்கும் சிம்ம புஷ்கரணி என்று அழைக்கப்படுகிறது. இந்த தீர்த்தம் கௌரீ தேவியால் ஈசுவரனை தனது கருமை நிறம் நீங்க வழிபட்ட பொழுது உண்டாக்கப்பட்டதால் இதற்கு கௌரீ தீர்த்தம் எனப் பெயர் உண்டாயிற்று. "உமையவளும் பாலித்தென் கரைமருங்கிலெய்தித் தீர்த்தம் ஒன்றையமைத்துத் தன் பெயரதற்கு நாட்டி" என்று புராணம் கூறுகிறது. ஆதி சங்கரர் இத்தலம் வந்த பொழுது இதில் பீஜாக்ஷரயந்திர பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகிறது. பலலாயிரக் கணக்கான பக்தர்கள் பெண்களும், தாய்மார்களும்

தம்மைப்பிடித்துள்ள பேய்பிசாசு முதலியன நீக்கமடைய வும், பிள்ளைப்பேறு இல்லாதவர்கள், புத்திர சந்தானம் பெறவும் இந்த சிம்மக்கிணறில் நீராடி இறைவன் சந்நிதியில் படுத்துறங்குவார்கள். பெருமான் அவர்கள் கனவில்தோன்றி அவர்களுக்கு வேண்டியதை அருள்புரிவான். இந்நிகழ்ச்சியை கார்த்திகைமாதம் ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பாக கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் காணலாம். ஆயிரக்கணக்கான பெண்கள் இந்த தீர்த்தத்தில் நீராடி இறைவன் சன்னதியில் படுத்துறங்கி கனவு கண்டு பலநலன்களைப்பெறுகின்றனர். இது இன்னும் கண்கூடாக காணும் காட்சியாகும்.

வெளிப் பிராகாரத்தின் தென்கிழக்கு மூலையில் பதினாறுகால் மண்டபமும் தென்மேற்கு வடமேற்கு மூலைகளில் ஸ்தலவரலாற்றைக் குறிக்கும் சிற்பங்களடங்கிய கல்யாணமண்டபங்களும், வடகிழக்கு மூலையில் நூற்றுகால் மண்டபமும் இருக்கின்றன. இந்த சிற்ப மண்டபங்களைக் கண்டு களித்துக்கொண்டே வெளிப்பிராகாரத்தை வலம் வந்து துவஜஸ்தம்பம், பலிபீடம், மஹா நந்தி முதலியவற்றை வணங்கிக்கொண்டு சம்புவராயர் வாயிற்படியைத் தாண்டி கோயிலுக்குள்ளே செல்லலாம். அதற்குள் வெளியில் இருக்கும் ஸ்ரீ ஏரம்ப விநாயகரையும், முருகப்பெருமானையும் தர்சித்துக்கொண்டுதான் செல்லவேண்டும்.

கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் ஸ்வர்ண கணபதி, சுதையால் ஆகிய அழகிய பிக்ஷாடனர் வல்லபை கணபதி, உற்சவ மூர்த்திகள் எல்லோரையும் தர்சித்துக்கொண்டு வலம் வந்தால் இப்பிராகாரத்தில் வடமேற்கே அம்பிகையின் சந்நிதி உள்ளது. இங்கு தேவியின் திருப்பெயர் மரகதவல்லி எனப்படும். பச்சைப் பசுங்கொடி எனவும் கூறுவர். ஒரு சமயம் எம்பெருமான் கௌரிதேவியுடன் ஏகாந்தமாக இருக்கும் சமயம், தேவியைப் பார்த்து கறுப்பு நிறமுடைய காரணத்தால் "ஹே! சங்கரி" என அழைத்தார். இதைப் பொருக்கொணாத தேவி பாலிநதி வடகரையில் பொற்பனங்காட்டில் பஞ்சாக்னி மத்தியில் தவமியற்றினாள். நித்ய மஹாலிங்க பூஜைக்கு பொற்பனம்பழம் ஈந்து, பூஜை செய்ததாகவும் இதன் பயனாய் தேவியின் கருநிறம் நீங்கப்பெற்று மரகதக்கொடி இடையோடு

கூடிய தேவி பொன்மேனி பெற்று, ஸ்ரீ மரகதவல்லி எனப் பெயர்கொண்டு ஸ்ரீமார்க்கசகாயர் இடப்பாகம் கொண்டு விளங்குகிறாள் எனக்கூறப்படுகிறது. இந்த மரகதவல்லி யம்மையை தரிசித்துக்கொண்டு இனி அம்பிகைக்கு நேர் கிழக்கிலிருக்கும் ஸ்ரீ நடராஜர் சந்நிதியையும் தர்சிக்க லாம். பிறகு மற்ற இரண்டுபிராகாரங்களையும் வலம்வந்து ஐந்தாவது பிராகாரத்தை யடைந்து, அர்த்தமண்டபத்தை அடைந்து. உள்ளே கர்ப்பகிருகத்திலிருக்கும், சுயம்பு மூர்த்தியான ஸ்ரீ மஹாலிங்கமூர்த்தியை தர்சிக்கலாம். இறைவன் சற்று சாய்ந்த வண்ணம் காட்சியளிப்பது கவனிக்கத்தக்கது. இறைவனுக்கு மார்க்கசகாயர் வழித் துணைநாதர் எனப்பெயர்கள் உண்டு. இந்த இறைவன் யாருக்கு வழித்துணை வந்தான் என்று கேட்கிறீர்களா?

மைசூரிலுள்ள குந்தன புரியிலிருந்து தனபாலன் என்ற வணிகன் ஒருவன் வியாபார நிமித்தம் மிளகுப் பொதிகளை எருதுகளின்மீது ஏற்றிக்கொண்டு காஞ்சி புரத்தில் விற்பதற்காக வந்துகொண்டிருந்தான். விரிஞ் சையம்பதியை அணுகியதும் மாலைப் பொழுதானபடி யால் இந்தப்பதியிலேயே தங்க நேரிட்டது. வழியில்வழிப் பறிகொள்ளைக்காரர்களின் தொந்திரவு அதிகம் எனக் கேள்விப்பட்ட வணிகன் திகைத்து காஞ்சி செல்லுவதா அல்லது ஊருக்குத் திரும்பிவிடுவதா எனச் சிந்தித்தான். பிறகு விரிஞ்சைப்பதியின் பெருமை கேட்டு "பரமனே நீதான் என்னைக் கொள்ளைக்காரர்களிடமிருந்து காத்த ருளவேண்டும். பத்து பொதி மிளகைக் காணிக்கை யாகத் தருகிறேன் எனவேண்டிக்கொண்டு இரவு விரிஞ் சைப்பதியிலேயே தங்கினான்" அன்றிரவு பெருமான் அவன்கனவில் தோன்றி' வணிகனே! நாளை நீ காஞ்சிக்கு புறப்படு, உனக்கு நல்ல வழித்துணைவரும்; நீ பயமின்றி மிளகுப்பொதிகளை ஏற்றிச்செல்லுவாய்" என்று அருளினார்.

மறுநாட் காலை வணிகன் இறைவனைப் பிரார்த்தித் துக் கொண்டு பயணத்தைத் தொடங்கினான். அதுசமயம் ஒரு வேடுவர் குலத்தலைவன் ஒருவன் வெள்ளைக்குதிரை மீது ஏறிவந்து வணிகனைப் பார்த்து, வணிகரே! என்ன

காஞ்சிக்கா செல்லுகிறீர் ? என்னுடன் வாரும் நானும் உமக்கு வழித்துணை வருகிறேன் என்றுகூறி வேடுவர்த் தலைவன் குதிரைமீது முன்னே செல்ல, வணிகன் மிளகு பொதிகளுடன் பின்தொடர்ந்து சென்றான். திருப்பருத்திக் குன்றம் என்னும் ஊர் வந்ததும் முன்னே சென்று கொண்டிருந்த குதிரைவீரன் ஒரு திருப்பத்தில் திரும்பியதும் மறைந்து விடுகிறான். வீரனைக்காணாத வணிகன் தயங்குகிறான். சமயம்பார்த்துக் கொண்டிருந்த கொள்ளைக்காரர்கள் வந்து வணிகனிடம் இருந்த மிளகுப் பொதிகளை கவர்ந்து சென்றனர். பொருளைப் பறி கொடுத்த வணிகன் விரிஞ்சை இறைவனை நினைந்து, வருந்தி நின்றான். சோதித்து ஆட்கொள்ளும் தயாநிதியாகிய இறைவன்; வணிகனின் பக்தியைச் சோதிக்கும் பொருட்டே மறைந்திருந்தார், சோதனை வந்ததும், குதிரைமீது ஓடிவந்து கொள்ளைக்காரர்களை விரட்டியடித்து மிளகுப் பொதிகளை திரும்பக் கொண்டுவந்து வணிகன்முன் நிறுத்தினர். வழித்துணைக்கு குதிரை வீரனாகவந்தவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டு இவனும் சிவனடியாராகத்தானிருக்கும். இது இறைவனின் திருவிளையாடல் என நினைந்து காஞ்சிக்குச் சென்றான். வழித்துணையாக வந்த பெருமான் விடைபெற்றுக் கொண்டு சென்றுவிட்டான். மிளகுப் பொதிகள் நல்ல விலைக்குப்போகவே, பணத்தின்மீது குறியுள்ள வணிகன் இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுக்க வைத்திருந்த பத்துப் பொதி மிளகையும் விற்றுவிட்டான். மிளகுப் பொதிகளுக்குப் பதிலாக பயிறுகளாக இருக்கக் கண்ட இதர வியாபாரிகள் வணிகனிடம் ஓடிவந்து பலவாறு நிந்தித்து இகழ்ந்து பேசி நிந்தித்தனர்.

உடனே வணிகன் தனது தவறை உணர்ந்து இறைவனுக்கு தப்புக் காணிக்கையாக ஒரு பொதி சேர்த்துத் தருவதாக வேண்டிக்கொண்டவுடன் இறைவனருளால் பயறுகள் மீண்டும் மிளகுப் பொதிகளாக மாறின. வணிகன் இறைவனின் அருள் செயலைப்போற்றி மகிழ்ந்து மிளகுப் பொதிகளை விரிஞ்சை பெருமானுக்கு

சேர்ப்பித்து பிரம்ம தீர்த்தக் கரையில் ஒரு விநாயகரை யும் ஸ்தாபித்ததாகப் புராணம் கூறுகிறது. இதனா லேயே இறைவனுக்கு வழித்துணைநாதர் எனப்பெயர் ஏற் பட்டதாகக்கூறப்படுகிறது.

இறைவனின் கர்ப்பகிரகம் ஓங்கார வடிவமாக அமைந்துள்ளது. இறைவியின் கருப்பக் கிரஹத்தில் பாதாள வழி ஒன்று இருந்ததாகவும் அதன் வழியாக வேலூர்க்கோட்டைக்குச் செல்லமுடியும் எனவும் சொல்லப்படுகிறது. இது தற்பொழுது தூர்ந்துபோய் விட்டதாகக் கூறப்படுகிறது.

பெரிய கோபுரவாயிலுக்குப் பக்கத்தில் தெற்கு நோக்கி ஆறுமுகப்பெருமான் சந்நிதி ஒன்றுள்ளது. இந்த முருகனின் அருள்பெற்று ஸ்ரீ அருணகிரிநாதரும். வரகவி மார்க்கசகாய தேவரும் அருள்பெற்று முறையே திருப்பு கழும், பிள்ளைத்தமிழும் பாடியுள்ளனர்.

இத் தலத்திறைவன்மீது அப்பைய தீக்ஷிதர் மார்க்க பந்து ஸ்தோத்திரம் என்ற ஒன்றை இயற்றியுள்ளார்.

இத் தலத்தில் பல கிரந்த — தமிழ் கல்வெட்டுகள் காணப்படுகின்றன கல்வெட்டு ஜயங்கொண்ட சோழ மண்டலத்து விரிஞ்சிபுரம் எனக்கூறுகிறது. இறைவனை வழித்துணை நாயனார் எனக் கூறுகிறது.

நந்திவிக்கிரம பல்லவன், இராஜேந்திர சோழன், பராந்தகசோழன், விஜயநகர இம்மடி நரசிம்மராயர், அச்சுதராயர், தேவராயர், கிருஷ்ணதேவராயர், வெங்கட பதி தேவன் முதலிய மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக் கள் இங்கு உள்ளன. இவைகள் இறைவனுக்கு நில தானம், நந்தவனம், விளக்கெரிப்பதற்கு நிலம் முதலியன அளித்த விபரம் தெரிவிக்கின்றன.

ஒரு கல்வெட்டில், கோயில் சந்நிதியில் எல்லா வகுப்பு அந்தணர்களும்கூடி, திருமணம் செய்ய வரதக்ஷிணை வாங்குவதோ, கொடுப்பதோ கூடாது என முடிவு செய்த விபரம் கூறப்பட்டுள்ளது.

கோயிலின் பெருமையையும் உயர்வையும் தெரிந்து கொண்ட நாம் நம் வாழ்விலும் இறைவன் என்றும வழித்துணையாக இருக்கவேண்டும் என்றுபிரார்த்தித்துக் கொண்டு திரும்புவோம்.

பள்ளிகொண்டான்.

"சித்ரகலாநிதி" N. கிருஷ்ணன்.

ஸ்ரீயஃபதியான நாராயணன், அர்ச்சாவதார மூர்த்தியாக மூன்று திருக்கோலங்களில் பல தலங்களில் காட்சியளிக்கிறார். அத் திருக்கோலங்கள் நின்ற இருந்த, கிடந்த திருக்கோலங்களாகும். இந்த கிடந்த திருக்கோலமே, அரவணைமேல் பள்ளி கொண்ட திருக்கோலமாகும். பரமன் பள்ளிகொண்ட திருக்கோலத்தில் விளங்கும் திருப்பதிகளுள் சிறந்தது திருவரங்கமாகும். சோழ நாட்டிலுள்ளது. அதுபோலவே வட ஆற்காடு மாவட்டத்தில்,வேலூர்வட்டத்தில் பாலாற்றின் தென்கரையில் பள்ளிகொண்டான் என்னும் தலம் பிரசித்தமாகும்.

பெருமான் பள்ளிகொண்ட திருக்கோலத்தை ஒட்டியே இவ்வூருக்கும் பள்ளிகொண்டான், எனச் சிறப்புற பெயரிடப்பட்டுள்ளது. பள்ளிகொண்டான், பள்ளிகொண்டை எனவும் அழைக்கப்படுகிறது. திருவரங்கம் பெரியகோயிலாகிய ஸ்ரீரங்கம் எப்படி தென்னரங்கம் எனப் புகழப்படுகிறதோ அதுபோல இத்தலம் உத்தர ரங்கம் எனப் புகழப்படுகிறது. இவ்வூருக்கு விச்சூர் எனவும் ஒரு பெயருமுண்டு.

கோயில் சோலைகள் நடுவே அழகுடன் அமைந்துள்ளது. கோயிலின் கிழக்கு வாயிலே நூறு அடி உயரமுள்ள கோபுரம் அணி செய்கிறது. கோயிலுள் நுழையுமுன் சந்நிதித்தெருவில் உள்ள தேரடியிலிருக்கும் ஆஞ்சநேயரை சேவித்துக்கொண்டு கோயிலுக்குள் செல்லலாம்.

கோபுரவாயில், மண்டபம், மற்ற சந்நிதிகள் எல்லாம் கடந்து அரங்கன் சந்நிதியை அடையலாம். சந்நிதிக்குப் போகுமுன் நாம் இங்கு கவனிக்கவேண்டியது ஒரு விஷயம். ஒரு சிறிய மாடத்தில் தெற்கே பார்த்த

திருமுக மண்டலத்துடன் ஒரு சிறிய ரங்கநாதனைத் தரிசிக்கலாம். இவருக்கு கஸ்தூரி ரங்கர் என்று பெயர். இங்குள்ளவர்கள் இவரை, ''சோட்டா ரங்கநாதர்'' என்று அழைக்கிறார்கள்.

முகம்மதியர்களின் படையெடுப்புக் காலத்தில் இந்த தலத்திலுள்ளவர்கள், எங்கு அன்னியர்கள் கோயிலைப் பாழ்படுத்திவிடுவார்களோ, ரங்கநாதருக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து கருப்பக்கிருஹத்திற்கு கல் திரையிட்டுவிட்டு (கல்லால் சுவர் கட்டி மறைத்துவிட்டு) இந்த ரங்கநாதரை பிரதிஷ்டைசெய்து வணங்கியிருக்கிறார்கள். படையெடுத்து வந்து கோயிலுக்குள் நுழைந்த அன்னியர்கள், இவர்தானா உங்கள் சாமி? இது என்ன. சோட்டா சாமி! என்று கூறிக் கொண்டு திரும்பிவிட்டார்களாம். இந்த அரங்கன், மூலஸ்தான மூர்த்தியைக் காப்பாற்றியது மட்டுமின்றி தன்னையும் காப்பாற்றிக்கொண்டிருக்கிறார். இன்று இவருக்குத்தான் முதல் பூஜை. கஸ்தூரிரங்கனை வணகியபின் இனி கர்ப்பகிருஹத்திலிருக்கும் உத்தர ரங்கநாதனை தரிசிக்கலாம். இங்கு ரங்கன் கிரீடம், குண்டலம், திருமால் காப்புமுதலியன அணிந்துகொண்டு திருவனந்தாழ்வான் மீது, பள்ளிகொண்டிருக்கிறார். நல்ல ஆஜானுபாகுவான மூர்த்தி; அவரது கையை ஸ்ரீதேவி தாங்க பூதேவி திருவடிகளை வருடிக்கொண்டிருக்கிறார். அரங்கன் இங்கு அம்பரீஷ முனிவருக்கு பிரத்யக்ஷம். இந்தச் சிறிய ஊரில் வந்து அரங்கன் ஏன் பள்ளி கொள்ளவேண்டும் என்று கேட்கிறீர்களா? இதற்கு உத்தர ரங்க மாகாத்மியம் ஒரு ரஸமான கதையைக் கூறுகிறது.

கலைமகளுக்கும், திருமகளுக்கும் ஒரு சிறிய சர்ச்சை தங்களில் யார் பெரியவர் என்று. இந்த வழக்கில் தீர்ப்புக்கூறும் பொறுப்பு பிரம்மன் தலையில் விழுகிறது. பிரம்மனும் தன் மனைவி என்றும் பாராமல், லக்ஷ்மியை பெரியவள் எனத் தீர்ப்புக்கூறுகிறார். இப்பூவுலகில் கல்வியைவிட செல்வத்திற்குத்தானே தனிமதிப்பு. சரஸ்வதிக்கு கோபம் வந்துவிடுகிறது. பிரம்மாவிடம்

கோபித்துக்கொண்டு பூவுலக்கு வந்துவிடுகிறாள். பிரம்மாவுக்கு தனிமை வேதனை யளிக்கவே அவரும் பூவுலகுக்கு வந்து சத்யவ்ருத க்ஷேத்திரம் என்று புகழப் படும், காஞ்சியில் ஒரு யாகம் செய்ய முனைகிறார். சரஸ்வதி அந்த யாகத்தை அழிக்க விரைகிறாள். நதி உரு எடுத்துக்கொண்டு யாக சாலைக்குள் புக எண்ணுகிறாள். பிரம்மதேவன் மகாவிஷ்ணுவை சரணடைகிறார். விஷ்ணுவும் ஏற்கனவே அம்பரீஷ முனிவரின் தவத்திற்கு இறங்கி காட்சி தருவதாக வாக்களித்திருந்தார். எனவே பிரம்மதேவனின் வேண்டுதலுக்கு இறங்கியும், அம்பரீஷ ரிஷிக்கு தரிசனம் அளிக்கவும் விரும்பி, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் ஆற்றின் நடுவே, வெள்ளத்தைத் தடுத்துக் கொண்டு பள்ளிகொண்டு விடுகிறார். கல்வியறிவால் ஏற்பட்ட அகங்காரத்துக்கு வெட்கி சரஸ்வதி பிரம்மனை அடைந்து வணங்குகிறாள், பிரம்மன் யாகமும் பூர்த்தி யடைகிறது. அம்பரீஷ முனிக்குத் தருந்தபடி தரிசனமும் அளிக்கிறார். (இங்கு பெருமாள் ஓங்கார விமானத்தின் கீழ் பள்ளிகொண்டிருக்கிறார்) கல்விச் செருக்குக்கு அணை போடும் அரங்கனை தரிசித்துக்கொண்டு கோயிலின் பிரகாரத்தை வலம் வரலாம்.

பிரகாரத்திலுள்ள தாயார் சந்நிதிக்குச் செல்லலாம். இங்கு தாயாருக்கு அரங்கநாயகி என்று பெயர்.

சடாயுவின் உடன்பிறந்த சம்பாதி எம்பெருமானை நோக்கித் தவம் செய்ததாகவும், அதுசமயம் பகவானின் அருளால் தாமரை மலரில் ஒரு பெண் மகவு தோன்றிய தாகவும், சம்பாதி அந்தக் குழந்தையை எடுத்து ''செங் கமலவல்லி'' என்று பெயர்சூட்டி வளர்த்து உத்தரரங்க பெருமாளுக்கு மணம் செய்வித்ததாக காஞ்சிபுராணம் கூறுகிறது. இங்கு சம்பாதி இருந்ததாகச் சொல்லப் படும் உச்சிக்காழ் மலை உள்ளது. உத்தரரங்கன் ஆண்டுக்கு ஒருமுறை தை மாதத்தில் இம்மலைக்கு எழுந் தருளி திருவிழா நடைபெறுகிறது

கலை உள்ளம் படைத்தவர்கள் கண்டு மகிழும்படி யாக அமைந்துள்ள கோயில்கள், ராமன், கண்ணன், ஆண்டாள் முதலிய மூவருக்கும் அமைந்துள்ள தனித் தனிக் கோயில்களாகும்,

கோயிலிலுள்ள கல்வெட்டுக்களிலிருந்து பத்தாம் நூற்றாண்டின் முதற் பகுதியில், இவ்வூர், நந்திவர்ம

சதுர்வேதிமங்கலம் எனபெயர் வழங்கியதாகத்தெரிகிறது கோயில் மிகப் பழமையானது. திருவரங்கத்திலிருப்பது போலவே பிரணவாகார விமானம் கொண்டது. கோயில் பல்லவர் காலத்தியதாகக் கூறப்படுகிறது. விஜயநகர மன்னர்கள் காலத்தில் கோயில் விரிவுபடுத்தப்பட்டு கோபுரம், மதில்கள், மண்டபங்கள் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. திருவந்திக்காப்பு மண்டபம் அழகிய சிற்பவேலைப்பாடு அமைந்ததாகும். வியாச புஷ்கரிணி யின் கரையிலுள்ள கண்ணன் கோயில் தூண்களில் நரசிம்மமூர்த்தியின் எட்டுவித திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன இதற்கு 'அஷ்ட நரசிம்மன்' என்ற பெயர் உண்டு இவைகளை யெல்லாம் கண்டுகளித்து விட்டு பள்ளிகொண்ட பெருமானை தரிசித்த ஆனந்தத்தில்

"உடுத்துக் களைந்தநின் பீதக ஆடை உடுத்து
கலத்தது உண்டு தொடுத்த துழாய் மலர்
சூடிக் களைந்தன சூடும் இத்தொண்டர்களோம்
விடுத்த திசைக் கருமம் திருத்தித் திருவோணத்
திருவிழாவில் படுத்த பைந்நாகணைப்
பள்ளி கொண்டானுக்கே பல்லாண்டு கூறுதுமே"

என்று பல்லாண்டு பாடிக்கொண்டே திரும்பலாம்.

பங்குனிமாத விசேஷங்கள்.

பரீதாபி௵ பங்குனி௴ சிசிரருது — உத்தராயணம்.

1௳ (14—3—73) புதன் : மாதப்பிறப்பு, ஷடசீதி புண்ய காலம் காரடையானோன்பு.
2௳ (15—3—73) வியாழன் : ஏகாதசி.
3௳ (16—3—73) வெள்ளி : பிரதோஷம்.
6௳ (19—3—73) திங்கள் : பங்குனி உத்தரம்.
17௳ (30—3—73) வெள்ளி : ஏகாதசி.
19௳ (1—4—73) ஞாயிறு : பிரதோஷம்.
21௳ (3—4—73) செவ்வாய்: அமாவாசை.
24௳ (6—4—73) வெள்ளி : கார்த்திகை விரதம்.
29௳ (11—4—73) புதன் : ஸ்ரீ ராமநவமி.

திருவாலங்காடு.

சித்திரகலாநிதி N. கிருஷ்ணன்.

" அடிபேரில் பாதாளம் பேரும்
அடிகள் முடிபேரில் மாமுகடு பேரும்
தொடிகள் மடிந்தாடும் கைபேரில்
வான் திசைகள் பேரும்
அறிந்து ஆடும் ஆறு ஏன்? அரங்கு"

திருவாலங்காடு என்னும் சிவஸ்தலம், சென்னைக்கு மேற்கே முப்பத்தேழு மைல் தூரத்தில் திருவள்ளூருக்கு அருகே பழயனூர் திருவாலங்காடு என்ற பெயருடன் விளங்குகிறது. இறைவன் திருநடனமாடிய சபைகளுள் இத்தலம் இரத்தின சபையாகும்.

இங்கு இறைவன் காளிதேவியோடு பந்தயம் வைத்துக்கொண்டு ஆட்டமாடுகிறார். இந்த நடன காட்சியை, காரைககாலம்மையார், சுனந்த முனிவர், கார்க்கோடகன் முதலியவர்கள் கண்டுகளிக்கின்றனர்.

இறைவனின் இந்த நடனத்தைக்கண்டு களித்த காரைக்காலம்மையாருக்கு ஒரே வியப்பு ஏற்பட்டுவிடுகிறது. இறைவா! இது என்ன நடனம். அற்புதமாக இருக்கிறது. உனது இந்த அதி துரிதமான நடனத்தில் உனது ஒருகால் தாளம் தவறி சிறிது பெயர்ந்து விட்டால் பாதாள உலகமே அதிர்ந்து விடுமே; உனது முடியில் இருக்கும் கிரீடம் தவறி சிறிது பெயர்ந்து விட்டால் வான் முகடே பெயர்ந்து விடுமே. அதுமட்டுமின்றி உனது வீசி வீசி ஆடும் கைகள் தவறி எங்காவது பட்டுவிட்டால் திசைகளை பெயர்ந்துவிடுமே. இப்படியிருக்க பாதாளம், வான் முகடு, திசைகள் எல்லாம் பெயராமல், இந்த அரங்கில் எப்படி நீ ஆடுகிறாய் என்று வியந்து நோக்குகிறாள்

காரைக்கால் அம்மையார்; திடீரென்று இறைவன் தனது ஒரு காலை உயரே தூக்கிக்கொண்டு ஆடுகிறார். இதனை ஊர்த்துவ தாண்டவம் என்பர். இப்படி இறைவன் தனது தாளொன்றால் பாதாளம் ஊடுருவி மற்றைய தாளொன்றால் அண்டங்கடந்து உருவிநிற்கும், ஊர்த்துவ நடனத்தை ஏன் இங்கு நடத்தினான் என்று கேட்கிறீர்களா —

பெயருக்கேற்றபடி இந்த திருவாலங்காடு, ஒரு காலத்தில் பெரிய அடர்ந்த காடாகவே இருந்திருக்கிறது. அந்தக்காட்டினிலே சுனந்த முனிவர் இறைவனின் நடன கோலத்தைக்காண விரும்பி, தவம் செய்து கொண்டிருந்தார். முனிவரைச் சுற்றி புற்றுகிளம்பி மூடிவிடுகிறது.

சிவபெருமானின் கங்கணமாகயிருந்த கார்க்கோடகன் ஒரு சமயம் இறைவனின் திருக்கரத்தில் விஷத்தைக் கக்கி விடுகிறது. இறைவனுக்குக் கோபம் வந்து விட்டது. கார்கோடகனை பூலோகத்திற்குச் செல்லும்படி சபிக்கிறார். கார்க்கோடகனும் இறைவனிடம் மன்னிப்புக் கேட்கிறான். சுனந்த முனிவரின் பொருட்டு தாம் திருவாலங்காட்டில் நடிக்கும் தாண்டவ கோலத்தைக் கண்டு சாபம் தீர்த்துக்கொள்ளும்படி மொழிந்தார். அதன்படி கார்க்கோடகனும் இறைவனின் நடன தர்சனம் காண வேண்டி இந்தக்காட்டிலேயே ஒருபுறம் தவம் செய்து கொண்டிருந்தார்.

நிற்க நிம்பன், சும்பன் என்ற இரண்டு அசுரர்கள் காட்டை அதம்செய்து சாதுக்களையும், தேவர்களையும் துன்புருத்தி வந்தனர். இக்கொடுமையிலிருந்து தங்களை விடுவிக்கும்படி தேவர்கள் ஜகன்மாதாவாகிய பரமேஸ்வரியிடம் வேண்டினர். பிறகு ஈஸ்வரி தனது உக்ர அம்சமாகிய காளிதேவியை ஏவி அசுரர்களின் கொட்டத்தை அடக்கச் செய்தாள். அசுரர்களின் ரத்தத்தை

புண்ட காளிதேவி வெறியினுல் இந்த திருவாலங்காட்டில் இருந்துகொண்டு அட்டகாசம் செய்து கொண்டிருந்தாள்.

புனிதவதியான காரைக்கால் அம்மையார் தன் கணவனை விட்டுப் பிரிந்து, தனது ஊனுடை, வனப்பை எல்லாம உதறித்தள்ளிவிட்டு பேய் உரு எய்தி கைலைக்கு இறைவனை தர்சிக்கச் சென்ற அம்மையாரை இறைவன் திருவாலங்காட்டிற்குச் செல்லக் கட்டளையிட, அம்மையாரும் கைலையங்கிரியிலிருந்து தலையால் நடந்து இங்கு வந்ததாகவும் கூறப்படுகிறது.

ஒருசமயம் நாரதர் கைலையங்கிரியை நோக்கிச் செல்லும்போது திருவாலங்காட்டிற்கு வருகிருர். இந்தக் காட்டில் கார்க்கோடகனும்சுனந்த முனிவரும்தவம்செய்து கொண்டிருப்பதையும், இந்தக் காட்டிலேயே காளிதேவி அட்டகாசம் செய்து கொண்டிருப்பதையும் கண்டு பிறகு கைலையங்கிரி சென்று சிவபிரானை வணங்கி திருவாலங் காட்டில் தாம் கண்டதை முறையிட்டு ஆவன செய்ய வேண்டினுர். இதுகேட்டு வெகுண்டெழுந்த இறைவனும், தனது பூதகண பரிவாரங்களுடன் திருவாலங்காட்டிற்கு வருகிருர். தன்னுடன் ஆடல் போட்டிக்கு அன்னை காளியையே அழைக்கிருர். காளியும் சிவபெருமானுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்கிருள். இருவரும் ஆடுவதென்றும், தோற்றவர் காட்டைவிட்டு சென்றுவிட வேண்டுமென்றும் முடிவாயிற்று.

நடனம் ஆரம்பமாகிறது. போட்டி வலுக்கிறது. ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்ற முறையில் ஆட்டம் உச்சகட்டத்தை அடைகிறது. இறைவன் தான் சளைத்தவனல்ல என்று ஆடும் ஆட்டம் அனைத்தையும் காளியும் சளைக்காது ஆடுகிருள். இறைவன் மும்முரமாக ஆடிக்கொண்டிருக்கும் பொழுது அவரது வலது காதிலே உள்ள குழை நழுவி கீழே விழுந்து விடுகிறது. இதற்காக இறைவன் ஆட்டத்தை நிறுத்தவில்லை. இந்த

சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டார். ஆடியபடியே கீழே விழுந்த குழையை தனது வலது கால் விரலால் எடுத்து அக்காலை அப்படியே அநாயாசமாக உயர்த்தி குழையைத் தனது காதிலே லாவகமாக பொருத்திக் கொண்டு விடுகிறார். ஈசனின் இந்தச் செய்கையை தேவி காளியால் செய்யமுடியுமா? பெண்ணாயிற்றே ஒரு காலை பூமியில் ஊன்றி மற்றொருகாலை வான்நோக்கி உயர்த்த முடியுமா—தேவி தயங்கி தலை குனிந்து விடுகிறாள். தனது தோல்வியை ஒப்புக்கொள்கிறாள். இறைவன் வெற்றிக்கொடிகாட்டி ஆலங்காட்டில் கோயில் கொள்கிறார். காட்டை விட்டுப் புறப்பட சித்தமாகிறாள் காளி. ஆனால் இறைவன் காளிக்கருள் புரிந்து தமது ஆலயத்தின் இடது பக்கத்தில் இடம் தருகிறார். அது மட்டுமன்றி, காளிக்குப்பூஜை செய்த பின்பே, தனக்கு பூஜை செய்ய வேண்டுமென்று நிபந்தனையும் விடுத்தார்.

இவ்விதம் இறைவன் பாண்டரங்கமென்ற ஊர்த்துவ தாண்டவத்தை அகில உலகுமே சுழலும்வண்ணம் ஆடிய திருவாலங்காட்டை இனி நாம் தரிசிக்கலாம்.

திருவாலங்காடு ரயில் நிலையத்திலிருந்து, ஊர் வடக்கே மூன்று மைல் தூரத்திலிருக்கிறது. நடந்தோ வண்டியிலோ, பஸ்ஸிலோ செல்லலாம். கோயில் மிகப் பெரிய கோயிலல்ல. கோபுரவாயிலிலே வலது புறத் திலே வல்லபை விநாயகரை தரிசிக்கலாம். பிறகு கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முதலில் நாம் ஊர்த்துவ தாண்டவமூர்த்தியையே தரிசிக்கிறோம். (செப்புச்சிலை உருவிலிருக்கிறார்) இவர் வடக்கு நோக்கிய சந்நிதியில் இருக்கிறார். இதனையே ரத்தின சபை என்பர். இறைவனின் இந்த நடனகோலத்தைக் கண்டு களித்து விட்டு சபையைக் கடந்து உள்ளே சென்றால் உட் பிராகாரத்திற்குச் செல்லும் வாயிலிலே காளி தேவி சிறு சந்நிதியில் கோயில் கொண்டிருக்கிறார்.

இனி உள்ளே சென்று கருவறையிலே கோயில் கொண்டிருக்கும் இறைவனை தரிசிக்கலாம். ஈசனுக்கு தேவர் சிங்கப்பெருமான், தேவர் சிங்கவீசன் என்ற பெயர்களுமுண்டு. இறைவி வண்டார் குழலியம்மையை தரிசித்துக்கொண்டு, பிராகாரத்தில் அகோரவீரபத்ரர் கம்பீரமாக நின்று கொண்டிருப்பதையும் தரிசிக்கலாம். இத்தலத்திறைவனை தேவாரம்பாடிய மூவரும் பாடியிருக்கிறார்கள். சம்பந்தமூர்த்திகள் தம்பாட்டில், இறைவனை "பழையனூர் ஆலங்காட்டு எம்மடிகளே" என்கிறார். அப்பர் சுவாமிகளோ! அம்பழனைமேய ஆலங்காட்டடிகளாரே" என்கிறார் சுந்தரமூர்த்திசுவாமிகள் "பரயா, பழையனூர்மேய அண்டா, ஆலங்காட்டா," என்று அழைக்கிறார்.

என்ன! மூவரும் பழையனூர் ஆலங்காடு என்கிறார்களே என்று கேட்கலாம்:— உண்மையே, திருவாலங்காட்டுக்கு வடமேற்கே பழையனூர் என்ற ஊர் இருக்கிறது. இங்கு பழையனூர் நீலிகோயில் என்று ஒன்று உள்ளது. இந்த இரண்டு ஊர்களையும் கோயிலோடு இணைத்து ஒரு பழமையான கதை கூறப்படுகிறது.

காஞ்சியிலிருந்து பழையனூருக்கு வந்து கொண்டிருந்த வணிகன் ஒருவனை, பக்கத்துக்காட்டிலிருந்த பேய் ஒன்று பெண் வடிவங்கொண்டு துரத்திக்கொண்டுவந்தது. வணிகன் அதைப்பேய் என்று தெரிந்துகொண்டு ஊருக்கு விரைந்து வந்துகொண்டிருந்தான். அவளது வஞ்சக மொழிகளுக்கு செவிசாய்க்காது செல்கிறான். அப்பேய் ஊர் பஞ்சாயத்தாரிடம் சென்று தன்பெயர் நீலி என்றும் தான் அவ்வணிகனின் மனைவி என்றும் தனது கையில் இருக்கும் குழந்தை அவனுடையது என்றும், முறையிட்டு

அவன் தன்னை வெறுத்துத் தள்ளிவிட்டான் என்றும் தானும் தன் கணவனுடன் வாழ வழி செய்யவேண்டும் எனக்கேட்டுக்கொள்ளுகிறது. வணிகன் இவள் பேய் என்றும், சொன்னது எல்லாம் பொய் என்றும் மறுத்துக் கூறினன். ஆனல் பஞ்சாயத்தார் பேயின் பேச்சை மெய் என்று எண்ணி அந்த வணிகனை பெண்ணையும் குழந்தையையும் ஏற்றுக்கொள்ளச் சொன்னர்கள். வணிகன் அது பெண்ணல்ல பேய் என எவ்வளவு எடுத்துச் சொல்லியும், நம்பாமல் அவனை அந்தப் பெண்ணை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்தப்படுத்தி, இவளால் உனக்கு தீங்கு ஏற்பட்டால் அவர்கள் எல்லோரும் தீயில் மூழ்குவதாகவும் சத்தியம் செய்து கொடுத்தனர். மேலும் அந்த வணிகனை அந்தப் பெண்ணுடன் அன்று இரவு இந்த ஊரில் தங்கியிருந்து போகும்படி கேட்டுக்கொண்டனர். வேறு வழியின்றி வணிகன் பேயுடன் தங்கினன். பெண்ணுருவிலிருந்த பேய் வணிகனைக்கொன்று ரத்தத்தைக் குடித்துவிட்டு சென்று விடுகிறது. மறுநாட்காலையில் விஷயமறிந்த வேளாளர்கள் (பஞ்சாயத்தார்கள்) தாங்கள் சொன்ன சொல்லைக் காப்பாற்றி தீக்குளித்து விடுகின்றனர். இந்த பழையனூர் நீலியின் வரலாறு மிகப்பழமையானதும் இலக்கியப் பிரசித்திப்பெற்றதுமாகும்.

திருவாலங்காட்டு கோயிலுக்கு மேற்கில் ஒரு அழகான குளம் இருக்கிறது. இதற்கு முக்தி தீர்த்தம் என்று பெயர். இது சகல பாபங்களையும் போக்கவல்லது. மனைவியைக்கொன்ற வேதியன் ஒருவன் இந்த தீர்த்தத்தில் மூழ்கி ஸ்திரீஹத்தி தோஷம் தீர்ந்தான் எனக் கூறப்படுகிறது. பறவைகளைக்கொல்வதே தொழிலாக

கொண்ட வேடன் தனது கடைசி காலத்தில் நோய்வாய்ப் பட்டு ஒரு மரத்தடியில் படுத்துக்கொண்டிருந்தான். முக்தி தீர்த்தத்தில் மூழ்கிய கோட்டான் தன் சிறகை உதறும் போது தன் மீது ஒரு துளி ஜலம்பட்ட வேடன் முக்தி யடைந்ததாக வரலாறு கூறுகிறது.

இந்த முக்தி தீர்த்தக் கரையில்தான் சுனந்தமுனி வரும், கார்க்கோடகனும் பார்க்கும் வண்ணம் அகில உலகம் சுழலும் வண்ணம் இறைவன் ஆடினுராம். இந்த நடன கோலத்தைக்காண காரைக்காலம்மையார் தலை யால் நடந்து இத்தலத்தை அடைந்தபொழுது இறைவன் 'அம்மையே, வாரும்' என்றழைத்தாரென்றும், அம்மை யாரும் அப்பா வந்தேனென்று கூறினுராம். இத ஞலேயே ஈசனுக்குத் தழுவக்குழைந்த ஈசன் எனப் பெயர் உண்டாயிற்று. அம்மையாரும் ஈசனிடம் பிற வாமை வேண்டும் என்றும், அப்படிப் பிறப்பினும் உன்னை என்றும் மறவாமை வேண்டும், இன்னும் நான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றென்றும் வேண்டி, நடராஜனது திருவடி யின்கீழ் என்றும் சிவானந்தத்தை அனுபவித்துக்கொண் டிருக்கிருர் என்று கூறப்படுகிறது.

இவ்வளவு புனிதமான தலத்தை வாழ்வில் நாமும் ஒருமுறையாவது தர்சித்து, இறவா இன்ப அன்பு வேண்டி பிறவிப்பெரும் பிணியை நீக்குவோமாக.

சந்தாதாரர்களும், மற்றைய நேயர்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு ஆசிரியரின் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டுகிறோம். தபாலில் பெறவிரும்புபவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி விபரமறிந்துகொள்ள வேண்டுகிறோம்.

மாம்பலம் குருகுலம்,
2, ஸ்டேஷன் ரோடு.
மேல மாம்பலம்,
சென்னை—33.

ஸர்வ நோய்களையும் நீக்கும்.

[தன்வந்த்ரி கவசம்]

[தீராத அடிக்கடி பீடிக்கும் நோய் உள்ளோர் நித்யம் காலை மாலைகளில் பாராயணம் செய்தால் நோயகலும்.]

கவசஸ்ய ருஷிர்தேவி, மஹா ருத்ரோ மஹேச்வர ;
ச்சந்தோऽநுஷ்டுப் ஸமிக்ஞேயம் தேவி ஸம்ஸார நாஸினீ ;
தர்மார்த்த காம மோக்ஷாணாம் விநியோகः ஸநாதநே ॥
ஐம் க்லீம் ச பாது ஸீர்ஷேமாம் ஸக்தி பீஜம் ததா ஹ்ருதி
ஹ்ரௌம் பாது காபிதே ஸோ: ஸுந்தரீ கண்ட தேஸத: ॥
மஹேச்வரீ ஸர்வகாத்ரே கௌமாரீ தக்ஷிணே ததா |
வைஷ்ணவீ பூர்வதः பாது உத்தரே ஸர்வ மங்களா ॥
நார்ஸிம்ஹே பாது வாராஹி இந்த்ராணீ பாது நைர்ருதே |
ஸர்வேஷ்வபி சலேஷ்வேவ க்ஷேத்ரே ஸர்வத்ர புவனேஸ்வரீ ॥
இதந்து கவசம் புண்யம் தாரணாச்ரவணாதபி |
நதுःஸ்வப்நோ பவேத் தஸ்ய நபிபீஷிகா தர்ஸகம் ॥
தூஷிதஜ்வர பீதிஸ்ச நசபிட கபிடநம் |
ஸம்க்ராம வ்யாதி ரோகாணாம் வாயூக்மாதாதிகாம்பி ॥
ஸ்த்ரீ ரோகாணாஞ்ச தேவே ஸீகாரயம் கவசோத்தமம் |
டாகினீ, பிஸாசீ, பூத, த்ருஷ்டி நிவாரகம் பரம் ॥
பாணபயம், வ்ரஜபயம் ஹிம்ஸ்ர ஜந்து பயம்ததா |
ஜலஜந்து பயம் சைவ க்ஷிப்ரம் நாஸயதே த்ருவம் ॥